விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை (04.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 228

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7144)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## பலாலியில் இருந்து விமான சேவை சர்வதேச வான் சங்கம் அனுமதி


(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமானங்களை இயக்குவதற்கு சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் (IATA) அனுமதி அளித்துள்ளது என சிவில் விமான சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையம், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை விமான நிலையம் என்றே சர்வ தேச விமான சேவைப் பதிவுகளில் இடம்பெற்றுள்ளது.

தென்னிந்திய நகரங்களுக்கு விமான சேவைகளை ஆரம்பிக்கும் நோக்கில் 15

## சாவகச்சேரி வைத்திய அதிகாரி திடீர் மரணம்



15

## நாட்டின் தற்போதைய சூழலில் தேர்தல் பற்றி கூற முடியாது!

### தேர்தல்கள் ஆணையாளர் கைவிரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது நிலவும் அரசியல் சூழலில் இடம்பெறவுள்ள தேர்தல் குறித்து எந்தத் தகவலையும் உறுதியாகக் கூறமுடியாதுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். தேர்தல் தொடர்பில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமான தகவல்கள் கிடைத்தாலும் குறித்த தினத்தில் குறிப்பிட்ட தேர்தல்தான் நடைபெறும் எனக் கூற முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 08

வாழ்த்துகிறோம்



இன்று நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டி வாழ்த்துகிறோம்.
வலம்புரி குடும்பம்

# மீண்டும் தாக்குதல் நடக்கலாம்! எச்சரிக்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

**தீவிரவாதிகள் எதிர்வரும் தினங்களில் அதாவது வரும் விடுமுறை நாட்களில் சிறிய அளவிலான தாக்குதல்களை பொது இடங்களில் நடத்தலாம் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.**

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் தங்கள் நாட்டினர் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தி கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

எதிர்வரும் விடுமுறை நாட்களில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் தமது குடிமக்களுக்கு இரண்டாம் நிலை எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளது.

தீவிரவாதிகள் எதிர்வரும் தினங்களில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தலாம் என அமெரிக்காவினால் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் தமது குடிமக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள சுற்றுலாத் தளங்கள், போக்குவரத்து நிலையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், விடுதிகள், அரச அலுவலகங்கள், வழிபாட்டுத்தலங்கள், பூங்காக்கள், உணவகங்கள், கேளிக்கை விடுதிகள், பிரமாண்டமாக நடத்தப்படும் விளையாட்டுகள் மற்றும் கலாசார நிகழ்வுகள், விமான நிலையங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட பிரதான பகுதிகள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றபோது இந்தியா ஏலவே மீண்டும் மீண்டும் எச்சரித்திருந்தது.

அத்துடன் பலம்மிக்க ஒரு நாடே இதன் பின்னணியில் உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில் மீண்டும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாக்குதல் ஒன்று நடைபெறப் போகிறது என பெயர் விபரங்கள் குறிப்பிட்டு எச்சரிக்கப்பட்டது.

ஆனால் இலங்கை அரச இயந்திரம் பாராமுகமாக இருந்தால் பேரழிவு ஏற்பட்டது. (மு-3)

## கோத்தாவை சந்திக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் 15

## வெலிக்கடைச் சிறை தலைமைக்காவலர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

அம்பலாங்கொட பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வெலிக்கடைச் சிறையின் தலைமைக் காவலர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரி 15

## சஜித்தைவிட பலமான வேட்பாளர் களமிறக்கப்படுவார்

### அமைச்சர் ரவி கருணாநாயக்க





(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக சஜித் பிரேமதாசவை விட பலம் மிக்க வேட்பாளரை கட்சி நிறுத்தும் என அமைச்சர் ரவி 15



## ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் கரு

(கொழும்பு)

ஐ.தே.முன்னணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகச் சபாநாயகர் கரு ஜயசூரியவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதன்படி கரு ஜயசூரிய ஜனாதிபதி வேட்பாளராகவும் ரணில் விக்கிரமசிங்க அடுத்த பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராகவும் போட்டியிடவுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் எதிர் 15

## மத்திய, தென் மாகாண ஆளுநர்கள் பதவிகளிலிருந்து விலகுங்கள்

### ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

தென் மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னகோன் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன ஆகியோரை பதவிகளில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

இதற்கு அமைய மத்திய மாகாண ஆளுநர் 15

## ஐ.தே.கட்சி தனி வழி போனால்

### அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் புதிய கூட்டணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் தீர்மானிக்கப்படுவதாக 15

### தடை செய்யப்பட்ட அமைப்பின்

## கிழக்கு மாகாண ஆயுததாரியும் பல்கலை மாணவனும் கைது

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட ஜமியத் மில்லா இஸ்லாமிய அமைப்பின் கிழக்கு மாகாணத் தலைவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு அந்த அமைப்பு குறித்து ஒலுவில் பல்கலைக்கழகத்தில் பிர 15

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் கருணாம்பிகைபாகன்

(முன்னாள் கட்டிட திணைக்கள ஊழியர்)



பிறப்பு : 10.12.1944 இறப்பு : 03.08.2019

கோட்டைக்காடு மல்லாகத்தை பிறப்பிடமாகவும் தம்பயப்புலம் தெல்லிப்பழை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கருணாம்பிகைபாகன் நேற்று (03.08.2019) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகனும், நாகர் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். மகேஸ்வரியின் கணவரும், கஜந்திரி, ஜெஜனி, கஜதீபா, ஹரிகரன், மஜீகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஞ்சித்குமார், தவகரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற மீனாம்பிகை மற்றும் கமலாம்பிகை, ஞானாம்பிகை, அம்பிகைபாகன், விமலாம்பிகைபாகன், ஜெகதாம்பிகைபாகன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், மற்றும் கதிரவேலு, இலட்சுமி, சறோஜினி தேவி, புஸ்பராணி, காலஞ்சென்ற சின்னராசா மற்றும் தவபாலு ஆகியோரின் மைத்துனரும், ஹஜிதரன், அணோஸ்ரிஜா, விஸ்ணுஹரிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-7192)

தம்பயபுலம்,
தெல்லிப்பழை கிழக்கு. 077 462 6956 தகவல் : குடும்பத்தினர்

# யாழில் வாள்வெட்டு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மற்றையவர் குருநகர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

25 வயதுக்குட்பட்ட இரு இளைஞர்களே இந்த சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

மேலும் இந்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)


## காணி விற்பனைக்கு

சுழிபுரம் பிரதான வீதியில் 5 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

T.P : 075 076 0523

(9799)

## காணி விற்பனை

யாழ் நகர் கொல்மண்ட் வீதியில் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) 2 1/3 பரப்பு காணி விற்பனைக்கு. (இடைத் தரகர்கள் தேவையில்லை.) (C-7194)

தொடர்பு : 077 086 9328

## Visa Consultancy Service

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

(Tourist Visa, Visit Visa, Sponsor Visa, Student Visa, Work Visa)

NALTC 134, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி 070 375 0002

(C-7107)

## தேவை

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு அனுபவம்மிக்க ஆண் ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். உணவு, தங்குமிட வசதி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

வயது எல்லை : 25 - 40 வருடங்கள்
சம்பளம் : 23,000/= - 25,000 /=
விண்ணப்ப முடிவு திகதி : 09.08.2019

தொடர்புகொள்ள வேண்டிய இல : 077 477 3481
மின்னஞ்சல் முகவரி :-
anfcjobs@hotmail.com

(9797)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-7109)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

# பதவி வெற்றிடம்

கீழ்க்காண் நிரந்தர பதவிக்கான விண்ணப்பங்கள் சங்கத்தினால் வெளிவாரியாக கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா.10/- செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். தபாலுறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பத்துடன் தகைமைச்சான்றிதழ்களின் நிழல்பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். (மேலதிக விபரம் தேவைப்படின் தலைமைக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.)

விண்ணப்ப முடிவுத்திகதி 20.08.2019

01. கணக்காளர் 104/09 - வெற்றிடம் - 01

சம்பள அளவுத்திட்டம்: 18010-22510
220X10-230X10 (04/2018 இன்படி)

வயதெல்லை: 18-45 (கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

தகைமைகள்:

(அ) கூட்டுறவு பணியாளர் 10வது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளகக்கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதவியியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர சித்தி/ கூட்டுறவு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 3 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

குறிப்பு:
- கூட்டுறவு சங்க பணியாளர்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.
- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபப்படி சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தினால் கோரப்படும் பிணை செலுத்தப்பட வேண்டும்.

பொதுமுகாமையாளர்
வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம் நீர்வேலி.

03.08.2019 30.07.2019, இயக்குனர்சபை கட்டளைப்படி (C-7191)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சரோஜினிதேவி தர்மலிங்கம்

தோற்றம் : 19.10.1953 மறைவு : 04.08.2011



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

என்றென்றும்
உங்கள்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்

– குடும்பத்தினர்

பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

(C-7195)

## இலங்கையில் உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற

# தாக்குதல் குறித்து ஐ.எஸ்.அமைப்பிற்கு முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை!

## ஐ.நா.நிபுணர்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டு

(ஜெனிவா)

**இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்களுக்கு ஐ.எஸ். அமைப்பின் தலைவன் அபுபக்கர் அல் பக்தாதி உரிமை கோரியிருந்தான். ஆனால் உண்மையில் இவ்வாறான தாக்குதல்கள் குறித்து ஐ.எஸ். அமைப்பிற்கு முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை என ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபைக்கு அதன் விசேட நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.**

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை முன்னெடுத்த தேசிய தௌஹீத் ஜமாத்தும் ஜே.எம்.ஐ. அமைப்பும் 2014 இல் உருவாக்கப்பட்டவை எனவும் ஐ.நா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு தாக்குதலுக்கு முன்னர் 50 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது எனவும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஜே.எம்.ஐ அமைப்பு 2015 இல் உருவாக்கப்பட்டதாகவும் அது சுமார் 150 உறுப்பினர்களை கொண்டிருந்ததாகவும் அவர்களில் பலர் சிரியா சென்று ஐ.எஸ்.அமைப்பிடம் பயிற்சி பெற்றனர் எனவும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டு நிபுணர்கள் இணையம் மூலம் ஐ.எஸ். அமைப்பு உள்ளூர் வெடிகுண்டுகளை தயாரிக்கும் முறை குறித்து கற்றுள்ளனர். மேலும் தாங்கள் தயாரித்த குண்டுகளை பரிசோதனை செய்துள்ளனர் எனவும் அறிக்கையில் ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ். அமைப்பு இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ள போதிலும் உறுப்பு நாடுகள் மேற்கொண்ட விசாரணைகள் ஐ.எஸ். அமைப்பிற்கு இந்த தாக்குதலுடன் நேரடி தொடர்பில்லை என்பதும் அந்த அமைப்பு முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது எனவும் அறிக்கையில் ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் திட்டம் உள்ளூரிலேயே உருவாக்கப்பட்டதுடன் ஐ.எஸ். அமைப்பின் நடவடிக்கைகளால் உந்தப்பெற்று முன்னெடுக்கப்பட்டது எனவும் அறிக்கையில் ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பின் பிரசாரங்கள் தொடர்ந்தும் கவனத்தை ஈர்ப்பவையாக உள்ளதையும் உள்ளூர் குழுக்கள் எதிர்பாராத இடங்களில் உருவாகி குறிப்பிடத்தக்க பயங்கரவாத திறனை உருவாக்குபவையாக மாறக் கூடிய ஆபத்துள்ளதையும் புலப்படுத்தியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது எனவும் அறிக்கையில் ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.எஸ். அமைப்பு தற்போது இலங்கையில் இடம்பெற்றது போன்ற ஐ.எஸ். அமைப்பினால் உத்வேகம் பெறப்பட்ட தாக்குதல்களை நம்பியுள்ளது எனவும் ஐ.நாவின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு 3 பீடங்கள் இணைந்து தீர்மானம்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரதான கட்சிகளிலிருந்து வேட்பாளராக களமிறக்கப் போகின்றவர் கொண்டிருக்க வேண்டிய பொது நியதிகளை முன்வைப்பதற்கு மூன்று பௌத்த பீடங்களினதும் மகா சங்கத்தினர் இணைந்து தீர்மானம் எடுத்தனர்.

இந்த நியதிகளில், ஜனாதிபதி நாட்டை நிர்வகிக்கும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைமை தொடர்பிலும் கொள்கை ரீதியிலான விடயங்களை முன்வைக்கவுள்ளதாகவும் அஸ்கிரிய பீட பதிவாளர் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

நாளை மறுதினம் 6 ஆம் திகதி பி.எம்.ஐ.சி.எச். மண்டபத்தில் இந்த விடயங்களை அறிவிக்கும் விசேட நிகழ்வொன்று மகா சங்கத்தினர் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும், இதற்கு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள், வேட்பாளராக போட்டியிட எதிர்பார்த்துள்ளவர்கள் அழைக்கப்படவுள்ளதாகவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# ஷைனிங் ஸ்ரார்' சைனி



விக்கெட் ஒன்றை கொய்த மகிழ்ச்சியில் இந்தியாவின் சைனி

## இந்திய திணறல் வெற்றி

மே.தீவுகள் அணிக்கு எதிரான முதல் 'ரி20' போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 'வேகத்தில்' மிரட்டிய இந்தியாவின் சைனி 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

இந்தியா, மே.தீவுகள் அணிகள் மோதும் இரண்டு 'ரி20' போட்டிகள் அமெரிக்காவின் புளோரிடாவில் நடக்கிறது. நேற்று நடந்த முதல் போட்டியில் 'நாணயச்சுழற்சியில்' வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி, களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் தமிழக சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரர் வாஷிங்டன் சுந்தர் சேர்க்கப்பட்டார். அறிமுக வீரராக நவ்தீப் சைனி களமிறங்கினார்.

**சைனி அபாரம்**

மே.தீவுகள் அணிக்கு லீவிஸ், கேம்பெல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் ஓவரில் பந்தை சுழற்றிய வோஷிங்டன் சுந்தர், 2வது பந்தில் கேம்பெலை (0) அவுட்டாக்கினார். லீவிஸ் (0), புவனேஸ்வரிடம் போல்டானார். தனது முதல் ஓவரை வீசிய நவ்தீப் சைனி, 4, 5வது பந்தில் பூரன் (20), ஹெட்மயரை (0) திருப்பி அனுப்பினார். பாவெல் (4) கைவிட்டார்.

**பொலார்ட் நம்பிக்கை**

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் அனுபவ பொலார்ட் போராடினார். அணித் தலைவர் பிராத்வைட் (9), சுனில் நரைன் (2), கீமோ போல் (3) நீடிக்கவில்லை. புவனேஷ்வர் பந்தை சிக்சருக்கு அனுப்பிய பொலார்ட், 49 ஓட்டங்களுகளுடன் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் மே.தீவுகள் அணி 9 விக்கெட் டுக்களை இழந்து 95 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

மே.தீவுகள் அணி 'ரி20' அரங்கில் 7 அல்லது அதற்கும் மேலான வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தது 10வது முறையாக நடந்தது. கடந்த 16 மாதங்களில் மூன்றாவது முறை இதுபோல அவுட்டாகினர். இந்தியா சார்பில் வேகத்தில் மிரட்டிய நவ்தீப் சைனி 3, புவனேஷ்வர் குமார் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**ரோகித் சிக்சர்**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. தவான் 7 பந்துகளில் ஒரு ஓட்டம் எடுத்து ஆட்டமிழந்தார. தோமஸ் பந்தில் சிக்சர் அடித்த ரோகித், காட்ரெல் ஓவரில் பவுண்டரி, சிக்சர் அடித்தார். 24 ஓட்டங்கள் எடுத்த இவர், சுனில் நரைன் சுழலில் சிக்கினார். ரிஷாப் பன்ட் வந்த வேகத்தில் 'டக்' அவுட்டாகினார்.

மணிஷ் பாண்டே (19) ஏமாற்றினார். எப்படியும் அணியை வெற்றிக்கு கொண்டு செல்வார் என நம்பப்பட்ட ஹோலி (19 ஓட்டங்கள், 29 பந்து), காட்ரெலிடம் சிக்கினார். சற்று வேகம் காட்டிய குர்னால் பாண்ட்யா, 12 ரன்னுக்கு போல்டானார்.

கடைசியில் வோஷிங்டன் சுந்தர் ஒரு சிக்சர் அடிக்க, இந்திய அணி 17.2 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்கள் எடுத்து, 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. வோஷிங்டன் சுந்தர் (8), ஜடேஜா (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்திய அணி 'ரி20' தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது

**1** சர்வதேச 'ரி20' அரங்கில் நேற்று அறிமுகம் ஆன இந்தியாவின் நவ்தீப் சைனி, கடைசி ஓவரில் ஓட்டம் எதுவும் கொடுக்கவில்லை. இதையடுத்து 'ரி20' அரங்கில் 20 வது ஓவரை 'மெய்டனாக' வீசிய முதல் இந்திய பந்துவீச்சாளரானார் சைனி.

**15** மே.தீவுகளின் ஆரம்ப வீரர்கள் லீவிஸ், கேம்பெல் என இருவரும் 'டக்' அவுட்டாகினர். சர்வதேச 'ரி20' அரங்கில் இரு ஆரம்ப வீரர்களும் இப்படி 'டக்' அவுட்டாவது 15வது முறையாக நேற்று நடந்தது.

**33** 'ரி20' கிரிக்கெட்டில் மே.தீவுகள் அணி 'ரொப் 5' விக்கெட்டுகளை குறைந்த ஓட்டங்களுக்கு இழந்தது 4வது முறையாக நடந்தது. இதற்கு முன் இங்கிலாந்து (20 ரன்க்கு5 விக்., 2019), பாகிஸ்தான் (22/5, 2016, 27/5, 2018) அணிகளுக்கு எதிராக குறைந்த ஓட்டங்களில் முதல் 5 விக்கெட்டுகளை இழந்தது.

**104** தோமஸ், காட்ரெல் பந்துகளில் சிக்சர் அடித்தார் இந்தியாவின் ரோகித் சர்மா. இதையடுத்து சர்வதேச 'ரி20' அரங்கில் அதிக சிக்சர் அடித்த வீரர்களில் கப்டிலை (103, நியூசி.) முந்தி இரண்டாவது இடம் பெற்றார் ரோகித் (104). கெய்ல் (105, மே.தீவுகள்) முதலிடத்தில் உள்ளார்.

**224** முதல போட்டியில் நேற்று ஹோலி 1 பவுண்டரி அடித்தார். இதையடுத்து சர்வதேச 'ரி20' அரங்கில் அதிக பவுண்டரிகள் அடித்த வீரர்களில் இலங்கையின் டில்ஷனை (223) முந்தி, 'நம்பர் 1' ஆனார். ஆப்கானிஸ்தானின் ஷாஜத் (218) 3வது இடத்தில் உள்ளார்.

**இன்று இரண்டாவது மோதல்**

நேற்று நடந்த அதே மைதானத்தில் இன்று நடக்கிறது.

## ஆஸி., முன்னிலை




பென் ஸ்ரோக்ஸ் வீசிய பௌன்சர் பந்தில் ஹெல்மட்டில் அடிவாங்கிய ஸ்மித்

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆஷஸ் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 34 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி பேர்மிங்காமில் நடக்கிறது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 284 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கு 267 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பேர்ன்ஸ் (125), ஸ்ரோக்ஸ் (38) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**லயன் அசத்தல்**

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. சிறப்பாக விளையாடிய ஸ்ரோக்ஸ் (50) அரை சதம் எட்டினார். சுழற்பந்துவீச்சாளர் லயனின் ஒரே ஓவரில் பேர்ன்ஸ் (133), மொயீன் அலி (0) ஆட்டமிழந்தனர். சிடில் 'வேகத்தில்' பேர்ஸ்டோவ் (8) நடையைக் கட்டினார். கம்மின்ஸ் பந்தில் பிரோட் (29) ஆட்டமிழந்தார். அண்டர்சன் 3 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 374 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக கம்மின்ஸ், லயன் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**வோர்னர் ஏமாற்றம்**

பின், இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர் (8) மீண்டும் ஏமாற்றினார். பான்கிராப்ட் (7) ஒற்றை இலக்கில் திரும்பினார். கவாஜா, ஸ்ரீவ் ஸ்மித் பொறுப்புடன் விளையாடினர். ஸ்டோக்ஸ் 'வேகத்தில்' கவாஜா (40) ஆட்டமிழந்தார். போதிய வெளிச்சமின்மை காரணமாக, ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது.

அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்கள் எடுத்து, 34 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. ஸ்மித் (46), டிராவிஸ் ஹெட் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## கெய்ல் மீண்டும் விளாசல்




குளோபல் 'ரி20' லீக் போட்டியில் மிரட்டிய கெய்ல், ஷாதப் ஓவரில் 4 சிக்சர், 2 பவுண்டரிகள் விளாசினார். இவரது ஆட்டம் கைகொடுக்க வான்கூவர் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கனடாவில் குளோபல் 'ரி20' தொடர் நடக்கிறது. பிராம்ப்டனில் நடந்த லீக் போட்டியில் எட்மான்டன், வான்கூவர் அணிகள் மோதின.

முதலில் துடுப்பாட்டம் செய்த எட்மான்டன் அணிக்கு அணித் தலைவர் ஹபீஸ் (6) ஏமாற்றினார். மொஹமட் நவாஸ் 40 ஓட்டங்கள் எடுத்தார். பென் கட்டிங் (72) அரைச் சதம் விளாச, எட்மான்டன் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்கள் எடுத்தது.

பின், களமிறங்கிய வான்கூவர் அணிக்கு விசே (1) சொதப்பினார். அணித் தலைவர் கெய்ல் தனி வீரராக மிரட்டினார். அரைச்சதம் விளாசிய இவர், ஷாதப் கான் வீசிய 13வது ஓவரில் 4 சிக்சர், 2 பவுண்டரிகள் விளாசினார். மொத்தம் 44 பந்துகளில் 94 ஓட்டங்கள் குவித்தார். ரசல் டக் அவுட்டானார். வான்கூவர் அணி 16.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மலிக் (34), சாம்ஸ் (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## ஆடுகளத்தில் பட்டம்; சச்சின் ருசிகரம்

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான்' வீரர் சச்சின் (வயது-46), இவரது நண்பர் வினோத் காம்ப்ளி. இருவரும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். ரமாகாந்த் அச்ரேகர் தான் இவர்களுக்கு பயிற்சியாளர். சச்சின் 'சதத்தில்' சதம் உட்பட எண்ணற்ற சாதனைகள் படைத்தார். காம்ப்ளியால் பெரிய அளவில் சோபிக்க முடியவில்லை.

இவர்களுக்கு இடையே மனக்கசப்பு ஏற்பட்டதாக கூறப்பட்டது. இதனிடையே நண்பர் தினத்தை கொண்டாடும் வகையில், காம்ப்ளியுடன் சிறுவயதில் எடுத்த போட்டோவை, தனது 'டுவிட்டர்' தளத்தில் வெளியிட்டார் சச்சின்.

இதில்,' காம்ப்ளி, நமது பள்ளி நாட்களில் எடுக்கப்பட்ட போட்டோ இது. இதை பகிர்ந்து கொள்ளும் போது பழைய நினைவுகள் அப்படியே வந்து செல்கின்றன,' என தெரிவித்துள்ளார். இதற்கு காம்ப்ளி அளித்த பதிலில்,' ஆமாம் மாஸ்டர், நாம் இணைந்து துடுப்பாட்டம் செய்த போது, ஆடுகளத்தில் பட்டம் ஒன்று வந்து விழுந்தது.



உடனே அதை எடுத்து பறக்க விட்டேன். அப்போது பயிற்சியாளர் அச்ரேகர் என்னை நோக்கி வருவதை நீ பார்த்து விட்டாய். அது பற்றி என்னிடம் சொல்லவில்லை. இதற்கு பின் நடந்ததை இருவரும் அறிவோம்.' என தெரிவித்து மகிழ்ந்துள்ளார்.

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3 பரப்புக் காணியில் 4 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 003 378 396 6868 Viber 077 671 2379, 077 618 3063,

(9795)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Faculty இற்கு அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 அறைகளையும் 2 குளியலறைகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 243 0394

(9795)

## கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க வருடாந்த/ஆயுட்கால அங்கத்துவம் கோரல்

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் யாப்பு விதிக்கமைய கிளிநொச்சி மாவட்ட நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தரமான வதியும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து அங்கத்துவம் கோரப்பட்டுள்ளது.

சென்ற வருடம் வருடாந்த அங்கத்தவராக இணைந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் தமது அங்கத்துவப் பணமான 100/- செலுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஆயுள் சந்தா செலுத்தி சேர விரும்புபவர்கள் 2000/- வைச் செலுத்த வேண்டும்.

அங்கத்தவராக சேர விரும்புபவர்கள், புதுப்பித்துக் கொள்வோர் அனைவரும் 04.09.2019 ஆம் திகதிக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்
திரு.கந்தசாமி முருகவேல்
(தொ.இல-077 711 3958)

(C-7190)


# தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்க பிரதமருக்கும் ருவானுக்கும் அழைப்பு

## ஜனாதிபதியை அழைக்கவும் தீர்மானம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் அடுத்ததாக சாட்சியம் வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

நாளை மறுதினம் 6 ஆம் திகதி தெரிவுக்குழு அமர்வின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுக்கவுள்ளதாக பாராளுமன்ற தெரிவுக்குழு தெரிவித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை நடத்தி பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க சபாநாயகர் கரு ஜெயசூரியவால் நியமிக்கப்பட்ட பிரதி சபாநாயகர் தலைமையிலான பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு வின் விசாரணைகள் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன.

அதன்படி 6 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள தெரிவுக்குழு விசாரணைகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன, அமைச்சர்களான சாகல ரத்நாயக்க மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

6 ஆம் திகதி கூடவுள்ள பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் அமர்வுகளுடன் பிரதான விசாரணைகள் அனைத்துமே முடிவுக்கு வருவதுடன் அடுத்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# எனது ஆட்சிக்காலத்திலேயே முக்கால்வாசி போர் நிறைவு

### சந்திரிகா நினைவுபடுத்தல்

(களனி)

மகிந்த அரசாங்கத்தை விட தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் கொள்ளையடிப்பு மற்றும் மோசடிகள் குறைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த அரசாங்கம் நட்டத்தில் இருந்த நாட்டை தற்போதைய அரசாங்கத்திடம் கையளித்தது. எனது ஆட்சிக் காலத்தில் முன்னேற்றமான பொருளாதாரம் இருந்தது.

எனது ஆட்சிக் காலத்தில் முக்கால்வாசி நிறைவடைந்திருந்த போரை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் நிறைவு செய்தது. எனது அரசாங்கத்தின் காலத்தில் இறக்குமதி செய்த ஆயுதங்களை பயன்படுத்தியே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போர் செய்தது. எனினும் தற்போதைய அரசாங்கத்திலும் தவறுகள் நடந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மணிவிழா வாழ்த்து



திருமதி.
அமிர்தவல்லி ரவீந்திரன்
(ஆசிரியர்,கிளி/உமையாள்புரம் அ.த.க.பாடசாலை)

எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி இன்று ஓய்வு பெறும் திருமதி.அமிர்தவல்லி ரவீந்திரன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes

பாடசாலைச் சமூகம்
கிளி/உமையாள்புரம்அ.த.க பாடசாலை

(C-7176)

பழைமை வாய்ந்த
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## இராசி பலன்

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**மேடம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்:** விரயங்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.

**கடகம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** வருமானம் பெருக வரம் தரும் தெய்வங்களை நாடிச் செல்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப ஒற்றுமை கூடும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இலாபகரமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் | | சூரி, சுக், செவ், புத |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் சதயம் பகல் 2.23 மணிக்கு ரோகினி-சந் | | சந் |
| சனி, கேது | குரு | | |

04.08.2019
ஆடி 19, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 11.47 மணிவரை
பூரம் முற்பகல் 8.50 மணிவரை
சுபநேரம் 9.04 - 10.34 மணிவரை
இராகுகாலம் 4.34 - 6.04 மணிவரை
சித்தாமிர்தம்
நாகசதுர்த்தி விரதம்

வளவன்



அரியாலை பிரப்பன்குளம் மகா மாரியம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

# கடல் நீரை நன்னீராக்கும் திட்டங்கள் ஜனாதிபதியால் விரைவில் ஆரம்பிக்கப்படும்

## அங்கஜன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தால் தீவகக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் எழு கடல்நீர் நன்னீராக்கும் (ஆரேபி ளான்) திட்டங்கள் அமுல்படுத்த ப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் தெரிவித்தார்.

தீவகப் பகுதிகளான மண் டைதீவு, வேலணையில் ஒவ் வொரு திட்டங்களும் ஊர்காவ ற்றுறையில் மூன்று திட்டங் களும் புங்குடுதீவில் இரு திட்ட ங்களும் ஜனாதிபதி செயலக த்தால் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது. யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை வெயில் காலங் களில் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கும் பகுதிகளில் தீவகப் பகுதியே முதன்மை வகிக்கி றது.

இதன் காரணமாக நாள் ஒன் றிற்கு 10 ஆயிரம் லீற்றர் கடல் நீரைச் சுத்திகரித்து நன்னீராக் கும் இயந்திரங்களை முதற் கட்டமாக புங்குடுதீவுப் பகுதிக் கும் இம்மாதம் ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின்போது உத்தி யோக பூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு இடம்பெறுவதாக அங் கஜன் எம்.பி. மேலும் தெரிவித் தார். (5-10)

# கவனயீர்ப்புப் போராட்டம்

(கொடிகாமம்)

அகில இலங்கை வேலை யற்ற பட்டதாரிகள் சங்க ஒழுங் கமைப்புக்கு அமைவாக அரச நியமனத்தை வலியுறுத்தி வட மாகாண வேலையற்ற பட்ட தாரிகள் அனைவரும் ஒன்றி ணைந்து இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட செய லகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறும்.

இதுவே வடமாகாண வேலை யற்ற பட்டதாரிகள் சங்கத்தால் நடை முறைப்படுத்தப்படும் இறுதிக் கணக்கெடுப்பு என்பதால் அனை த்துப் பட்டதாரிகளையும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் அறிவித்துள் ளார். (5-114)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காலையடி மறுமலர்ச்சி மன் றத்தின் வெளியீடாக கவிஞர் அழ. பகீரதனின் நான்காவது கவிதைத் தொகுதியான "ஒப்பு வதோ கவிதை" நூல் வெளியீட்டு விழா இன்று 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் காலை யடி மறு மலர்ச்சி மன்றத்தின் தியா கராஜா மகேந்திரன் குடும்ப ஞாப கார்த்த உள்ளரங்கில் இடம்பெறும்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரும் மறுமலர்ச்சி மன் றத்தின் தலைவருமான சு. சுந்த ரசிவம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், வரவேற்புரையினை மறுமலர்ச்சி மன்றத்தின் செயலா ளரும், காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி யின் ஆசிரியருமான கோ. சுதாகரன், அறிமுக உரை யினை ஆய்வாளரும், அச்சுவேலி மத் திய மகா வித்தியாலய ஆசிரிய ருமான சு.சிவநேசராசன், வெளி யீட்டுரையினை கலாபூஷணம் எஸ். சிவானந்தராஜா ஆகியோர் வழங்குவர். நூல் நயவுரையை நிகே ஸ்ீம் கருத்துரையினை எழுத் தாளரும் சட்டத்தரணி யுமான சோ.தேவராஜா ஆகி யோர் வழங்குவர். (5)

# சமூகத் தொண்டர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

ஆன்மீகம் மற்றும் மானிட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ் அறி வைப் பெற்றவர்களைப் பயன் படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானிட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத் திட் டங்களை மேற்கொள்வதற்காக நான்கு நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறியொன்று தொண்டைமா னாற்றில் அமைந்துள்ள செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்படவுள்ளது. அப் பயிற்சி நெறி தொடர்பான சில முக்கிய விபரங்கள் பின்வருமாறு.

1. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் விண்ணப் பங்கள் பெறப்படும்.

பயிற்சியில் கலந்து கொள் ளும் அனைவரும் சமய தீட்சை பெறுவதற்கும் பயிற்சி வேளை யில் வழங்கப்படும் தீட்சை பெற்ற அன்றிலிருந்து தொடர்ந்து 21 நாட்களுக்கு சைவ உணவு மட் டுமே உண்பதற்கு உறுதி கொண்ட வர்களாயிருத்தல் வேண்டும்.

4.பயிற்சி 2019.08.23 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். தூர இடத்திலிரு ந்து வருபவர்கள் 22 ஆம் திகதி இரவு 8 மணிக்குள் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வர வேண்டும்.

5. தங்குமிடமும் உணவும் பயிற்சியும் இலவசமாக வழங்க ப்படும்.

இப் பயிற்சிக்கு விண்ணப்பி க்க விரும்புபவர்கள் ரூபா.10 முத்திரை ஒட்டிய சுய முகவரி யிட்ட நீட்டு தபால் உறையை சிவன் மானிட மேம்பாட்டு நிறு வனம், 48, புனித மரியாள் வீதி, திருகோணமலை எனும் முகவ ரிக்கு வேண்டுகோள் கடிதத்தை அனுப்பினால் அவருக்கு விண் ணப்பப்படிவம் அனுப்பப்படும். உங்கள் வேண்டுகோளில் உங் கள் தொலைபேசி இலக்கத்தை எழுத வேண்டும்.

7. விண்ணப்பங்கள் அனு ப்ப வேண்டிய கடைசி நாள் எதிர்வரும் 9 அம் திகதி ஆகும். (5)

# வரலக்ஷ்மி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வரலக்ஷ்மி விரத உற்சவம் எதி வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலை 6.30 மணிக்கு ஸ்ரீ மகாலஷ்மி அம்பாளுக்கு நவகலச அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று முற் பகல் 10.30 மணியளவில் அம்பாள் பத்மாசானத்தில் திரு வீதியுலா வருதலுடன் நோன்பு நூல் வழங் கலும் இடம்பெறவுள்ளது. (5-108)

# யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர்த்தேரடி அருகே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் அமை ப்பு நல்லூர்த்தேரடி அருகே அறு பத்துமூன்று நாயன்மார் குரு பூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சிநெறிகளை ஆரம்பிக் கிறது.

இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்ப கல் 4.30 மணிக்கு யோகா உல கம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்க லைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி. சாவித்திரி ரவிச சந்திரன் சிறப்புக் கருத்துரை வழங்குவார்.

யோகா வகுப்புக்கள் திங் கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணிவரை. இரு பிரிவுகளாக ஒரு மாதம் தினமும் நடைபெறும்.

. ஆரோக்கியத்திற்கு அவசிய மான ஆசனம், பிரணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழி முறைகள்,அத்துடன் முத்திரைப் பயிற்சிகள் அனுபவம் உள்ள ஆசான்களால் பயிற்றுவிக்கப்படு வதுடன் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு மருத்து வர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ் வில் கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5)




# மூத்தோர் மதிப்பளிப்பு விழா

(கொடிகாமம்)

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் கனடாக் கிளையின் அனுசர ணையில் மூத்தோர் மதிப்பளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

கழகத் தலைவர் க.சிறிதரன் தலைமையில் நவபுரம் சிறி துர்க்கை அம்மன் ஆலய முன்ற லில் நடைபெறவுள்ள நிகழ் வில் பிரதம விருந்தினராக டான் தொலைக்காட்சிக் குழுமத்தின் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், சிறப்பு விருந்தினர்களாக கனடா விலிருந்து வருகை தந்துள்ள சமூக ஆர்வலர்களான பொ.கந்த சாமி, திருமதி.கிருஸ்ணன் நாகே ஸ்வரி, கௌரவ விருந்தினர்க ளாக கைதடி அரச முதியோர் இல் லத்தின் அத்தியட்சகர் வை.செல் வம், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபே ந்திரன், தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவை கள் அலுவலர் வி.சண்முக நாதன் ஆகியோர் கலந்து கொள் வர். (5-114)

# பிரமோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை-பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோவில் பிரமோற்சவம் நாளை 5 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர் ந்து பதினொரு தினங்கள் நடை பெறும். இப் பிரமோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)



யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் முகாமையாளரும் மானிப்பாய்த் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர். வி.தர்மலிங்கத்தின் ஜனன நூற்றாண்டையொட்டி அவரது உருவச்சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. உருவச் சிலையை பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் (ஸ்கந்தவரோதயன்) பங்களிப்புடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் கோண்டாவில் சிவபூமி தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் திறந்து வைத்தார்.

(படங்கள்:-சக்தி, கிசோர், கொடிகாமம் செய்தியாளர்)

## காணி விற்பனைக்கு

அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் தபாற்கட்டைச் சந்தியிலிருந்து வடக்கு நோக்கி சுமாராக 75 யார் தூரத்தில் அமைந்துள்ள 208/1, "பெருவெளிக்கு வடக்கு பெரியபுலம்" ஆதனத்தில் நி.பர. 1 1/2 விஸ்தீரணமுள்ள பகுதி விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு**
**077 515 0345**

(9790)

## மணமகன் தேவை

யாழ்.இந்து, உயரம்- 5'-6", மிருகசீரிடம், மிதுனராசி, Accountancy படிப்பு முடித்த மணமகளுக்கு பெற்றோர் 1971-1976 இற்கு இடையில் பிறந்த படித்த அதே தராதரமுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புக்கு:**
**071 838 7425**

(9780)

## 2019/2020 ஆண்டு கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.09.2019-31.08.2020 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன..

கேள்விப் பத்திரங்களை 07.08.2019-21.08.2019 வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பி.ப 4.30 மணிவரை பின்வரும் கொடுப்பனவைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 10,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 21.08.2019 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் **திரு.கந்தசாமி, முருகவேல், தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி** முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு **(Sealed)** அதன் இடது பக்க மேல் மூலையில் **"2019/2020 ஆண்டு வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்"** என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமுகமளித்தல் வேண்டும் தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்பட மாட்டாது.

**திரு.க.முருகவேல், தலைவர்,**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.**

(C-7179)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு:வெளிநாடு PR
தொ.இ: B/9942

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:B.Sc, Lecturer
எதிர்பார்ப்பு: Doctor, Lecturer, பட்டதாரிஆசிரியர், அரசவங்கி (உள்நாடு)
தொ.இ: B/9943

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 13 ½
உயரம்: 171cm
தகைமை/தொழில்:A/L,அரசதொழில்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் விரும்பத்தக்கது (உள்நாடு)
தொ.இ: B/9948

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: சூரி செவ் 1 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்A/L,பாதுகாப்பு உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தொழில் புரிபவர் (உள்நாடு)

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா:15 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/9954

பிறப்பு: 1973 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 7 இல்
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9955

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 31 செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:B.Sc, M.Sc,ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச,தனியார்தொழில் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9958

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:கேட்டை 1
கி.பா: 38 ½சூரிசெவ் 12 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:BBA,முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில் (உள்நாடு)
தொ.இ: G/9964

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# உங்கள் வலம்புரி

*Valampurii*

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

தொலைபேசி 222 3378, 021 221 7603

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

## 20 ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேனையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

## இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

**01.08.2019 தொடக்கம்**

விளம்பரங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள உங்கள் வலம்புரி 20 ஆண்டு நிறைவில் இன்னும் புதுப்பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# நாட்டின் தற்போதைய அரசியல் சூழலில் தேர்தல் பற்றி எதுவும் கூறமுடியாது

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தேசப்பிரிய விரக்தி



(கொழும்பு)

**நாட்டில் தற்பொழுது நிலவும் அரசியல் சூழலில் இடம் பெறவுள்ள தேர்தல் குறித்து எந்தத் தகவலையும் உறுதியா கக் கூற முடியாதுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். தேர்தல் தொடர்பில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமான தகவல்கள் கிடைத்தாலும் குறித்த தினத்தில் குறிப்பிட்ட தேர்தல்தான் நடைபெறும் எனக் கூற முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.**

தேர்தல் ஒன்று குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வரும் வரையில் பொறுத்திருந்து எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எது எப்படிப் போனாலும் அடுத்து வரும் ஓரிரு நாட்களில் தேர்தல் தொடர்பில் புதிய தகவலொன்று தெரியவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

உலகம் அழிந்து போனால் மட்டுமே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் உரிய தினத்திற்குள் நடைபெறாது போகும் என ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஊடகங்களிடம் பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாணவர்களை இணைக்கும்போது இடம்பெறும் மோசடியைத் தடுக்க விசேட வேலைத்திட்டம்

அரச பாடசாலைகளில் முதலாம் வகுப்பு மற்றும் இடைநிலை வகுப்புக்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் போது மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் இணைந்து அதிபர்களை அறிவுறுத்துவதற்கான விசேட வேலைத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவுள்ளது.


இலஞ்சம், ஊழல் மற்றும் வேறு மோசடிகள் இல்லாமல் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் கல்வி அமைச்சின் சம்பந்தப்பட்ட கிளையும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது. (இ-7)

## கோரிக்கைகளை நிறைவேற்றிய அரசாங்கமா? இருண்ட யுகமா? மக்களே தீர்மானிக்க வேண்டும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(அநுராதபுரம்)

மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய அரசாங்கத்திடம் நாட்டை மீண்டும் கொடுப்பதா? அல்லது இருண்ட யுகத்திற்குள் நாட்டை மீண்டும் தள்ளுவதா? என மக்களே தீர்மானிப்பார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உலகிலுள்ள பெரும்பாலான அரசாங்கங்கள் தேர்தல்களின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் சிறியதைக் கூட நிறைவேற்றுவதில்லை.

என்றாலும், தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை அவர்கள் வழங்கிய விதத்தில் நிறைவேற்றிய ஒரு அரசாங்கமாகும்.

தற்போதைய அரசாங்கத்தால் அனைத்துத் துறைகளையும் அபிவிருத்தி செய்ய முடிந்தது. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவர்களின் பத்து ஆண்டு ஆட்சியின் போது செய்ய முடியாததை தற்போதைய அரசாங்கம் குறுகிய காலத்தில் நிறைவேற்றியது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு அரசாங்கத்திடம் நாட்டை ஒப்படைத்து இந்த அரசாங்கத்தைக் கொண்டு செல்வதா? அல்லது நாட்டை இருண்ட யுகத்திற்கு அழைத்துச் செல்லும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமா? என மக்கள் எதிர்காலத்தில் முடிவு செய்ய வேண்டும்" என்றும் தெரிவித்தார். (இ-7)

## கிளிநொச்சியில் ரூ.2,150 மில்லியனில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைக்கு

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சின் கீழ் 2,150 மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் இம் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் துரிதகதியில் அமுலாக்கப்பட்டு வருகின்றன. தாயகம் திரும்பும் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குமான வீட்டுத்திட்டத்தில் 1,525 வீடுகளுக்கு, ஒரு வீட்டிற்கு ஒரு மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 1,525 மில்லியன் ரூபா செலவிலும் மீள்குடியேற்ற வேலைத்திட்டங்களுக்கு 264 மில்லியன் ரூபாவும் துரித கிராமிய அவிருத்தித்திட்டம் தொடர்பாக (Gamperaliya) 300 மில்லியன் ரூபாவிலும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித்திட்டங்களுக்கு 32.5 மில்லியன் ரூபாவிலும் பனை பதநீர் கள் போத்தலில் அடைத்தல் மற்றும் கருப்பனி உற்பத்திகளை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் தொடர்பாக 22 மில்லியன் ரூபாவிலும் அமுலாக்கப்படுத்தப்படுகின்றன எனத் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கீழ் கிளாலி எழுதுமட்டுவாழ் வீதி தொடர்பாக 81 மில்லியன் ரூபாவிலும் உருத்திரபுரம் 4 ஆம் குறுக்குத்தெரு வீதி அபிவிருத்திக்கு 8.5 மில்லியன் ரூபாவும் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நோக்கில் பாதைகளை செப்பனிடுவதற்கான உபகரணங்கள் (Motor-grader) 25 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார அபிவிருத்திகள் தொடர்பாக கண் சிகிச்சைப் பிரிவினை அமைப்பதற்கு 26.1 மில்லியன் ரூபாவும் மருத்துவ உபகரணங்களுக்கு 5 மில்லியன் ரூபாவும் Microscope உபகரணத்துக்காக 14 மில்லியன் ரூபாவும் கண் சிகிச்சை உபகரணங்களுக்கு 5 மில்லியன் ரூபாவும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கண் சிகிச்சை பிரிவினை அமைப்பதற்கு 13.5 மில்லியன் ரூபாவும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் நோயாளர் விடுதி அமைப்பதற்கு 12.5 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாக முருகானந்த கல்லூரி வகுப்பறை அபிவிருத்திக்கு 6.7 மில்லியன் ரூபாவும் கண்டாவளை விநாசி ஓடை பெண்கள் கல்லூரிக்கு 6.7 மில்லியன் ரூபாவும் கண்டாவளை சென்.அன்ரனி மகாவித்தியாலயத்திற்கு 7.5 மில்லியன் ரூபாவும் பூநகரி விநாசி ஓடை பெண்கள் பாடசாலைக்கு 6.75 மில்லியன் ரூபாவும் பூநகரி கிராஞ்சி பெண்கள் பாடசாலைக்கு 5 மில்லியன் ரூபாவும் நான்கு பாடசாலைகளுக்கு Smart Class Room அமைப்பதற்கு 1.6 மில்லியன் ரூபாவும் 14 பாடசாலைகளின் மேம்பாட்டு வசதிகளுக்கு 1.7 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (Gamperaliya) கீழ் 76 கிராமிய வீதிகளை அமைக்கும் பணிகள் 299 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுகைத்தொழில் முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக 89 மில்லியன் ரூபாவும் "அம்மாச்சி" உணவகத்தினை கிளிநொச்சி பொறியியல் பீடத்தில் அமைப்பதற்கு 16 மில்லியன் ரூபாவும் பனை அபிவிருத்தி தொடர்பாக கருப்பட்டி மற்றும் பதநீர் கள்ளினை போத்தலில் அடைப்பதற்கு கண்டாவளை பிரிவில், கருப்பட்டி உற்பத்தி தொழில்நுட்பத்திற்கு 8 மில்லியன் ரூபா செலவிலும் பூநகரியில் கள் போத்தலில் அடைப்பது தொடர்பாக 8 மில்லியன் ரூபாவிலும் பச்சிலைப்பள்ளியில் கள் போத்தலில் அடைப்பது தொடர்பாக 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கருத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. 750 குழாய்நீர் இணைப்புக்களுக்கு 11 மில்லியன் ரூபாவும் 300 மலசலகூட வசதிகளுக்கு 21 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கருத்திட்டங்கள் அமுலாக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் குண்டுவெடிப்பு குறித்த விசாரணைகளில் இந்தியா அளித்துவரும் அனைத்து உதவிகளுக்கும் நன்றி

## மோடியின் வருகையால் புதிய நம்பிக்கையும் ஊக்கமும் கிடைத்தது-ரணில்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணையில் இந்தியா அளித்துவரும் உதவிகள் அனைத்துக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.**


கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் 260 பேர் உயிரிழந்தனர். இதில் 11 பேர் இந்தியர்கள்.

இந்நிலையில் குண்டுவெடிப்புத் தொடர்பான வழக்கை விசாரித்து வரும் இலங்கை அதிகாரிகளுக்கு இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்குவதாக அறிவித்தது.

இலங்கை வந்து இந்திய தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் விசாரணை நடத்தவும் அரசு சட்டத்திருத்தம் செய்து என்.ஐ.ஏக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கியது. மேலும் இலங்கைக்கு வந்த இந்தியப் பிரதமர் மோடி, குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசு விசாரணைக்கு இந்திய உளவுத்துறையினர் மற்றும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் ஒத்துழைப்பளித்து வருகின்றனர்.

இந்நிலையில் மோடியின் வருகையால் இலங்கைக்கு புதிய நம்பிக்கையும் ஊக்கமும் கிடைத்திருப்பதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதோடு அதற்காக மோடிக்கு நன்றி தெரிவித்தார். (இ-7)



## சஹ்ரானைக் காப்பாற்ற ஹிஸ்புல்லா தீவிர முயற்சி

### சிங்களே அபி குற்றச்சாட்டு




(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீம் கைது செய்யப்படுவதை, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தடுத்தார் என சிங்களே அபி என்ற அமைப்பின் தலைவர் ஜம்புரேவல சந்தரரத்ன தேரர் குற்றம் சாட்டினார்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது ஹிஸ்புல்லாவின் பிரதான ஆதரவாளராக சஹ்ரான் செயற்பட்டிருந்தார்.

எனவே, சஹ்ரானைப் பாதுகாப்பதற்காக ஹிஸ்புல்லா தீவிரமாக முயற்சித்தார்.

சஹ்ரான் குறித்த விசாரணைகளில் அரசியல் தலையீடு காரணமாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை என காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார் என சந்தரரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தினார். (இ-7)

## ரஷ்ய - இலங்கைக் கடற்படைத் தளபதிகள் ஒத்துழைப்பை வலுப்படுத்த முக்கிய பேச்சு

(மொஸ்கோ)

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் அழைப்பின் பேரில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை, ரஷ்யாவில் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

சென் பீற்றர்ஸ்பேர்க்கில் அமைந்துள்ள ரஷ்ய கடற்படைத் தலைமையகத்துக்கு இலங்கைக் கடற்படைத் தளபதி மேற்கொண்ட முதலாவது பயணம் இதுவாகும்.

இருதரப்பு கடற்படை ஒத்துழைப்பு வளர்ச்சியில் இதுவொரு அடையாள மைல் கல்லாக அமைந்துள்ளது.

கடற்படைத் தளபதியுடன், அவரது உதவியாளரும், கடற்படைத் தளபதியின் செயலருமான கப்டன் ஜி.எஸ்.எச்.ஜி.டிசில்வா, கடற்படைத் தளபதியின் இணைப்பு அதிகாரி லெப்.கொமாண்டர் திஸநாயக்க ஆகியோரும் இந்தப் பயணத்தை மேற்கொண்டனர்.

இவர்கள் ரஷ்யாவின் மிகப் பெரிய அனைத்துலக கடல் நிகழ்வான பிரதான கடற்படை அணிவகுப்பிலும் பங்கேற்றனர்.

இந்த அணிவகுப்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் இந்தியா, இலங்கை உள்ளிட்ட 13 நாடுகளின் கடற்படைத் தளபதிகள், பிரதிநிதிகள் உள்ளிட்ட 26 நாடுகளின் உயர்மட்டக் குழுக்கள் பங்கேற்றன.



இந்தப் பயணத்தின் போது, ரஷ்ய கடற்படைத் தளபதி அட்மிரல் நிகோலாய் எவ்மெனோவ் வுடன், இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பாக பேச்சு நடத்தினார்.

இந்த அணிவகுப்பு நிகழ்வின் மற்றொரு பக்கத்தில், மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் பாதுகாப்பு ஆலோசகரும், தூதுவரின் இணைப் பதிகாரியும், ரஷ்ய கடற்படைத் தலைமையகத்தின் அனைத்துலக உறவுகளுக்கான அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினர்.

எதிர்காலப் பயணங்கள் தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

திருகோணமலை கடற்படை பயிற்சி அக்டமி மற்றும் சென் பீற்றர்ஸ்பேர்க்கிலுள்ள ரஷ்யக் கடற்படையின் அட்மிரல் குஸ்நெட்சோவ் கடற்படை அக்டமியின் முதன்மை கல்வி மற்றும் ஆய்வு மையம் ஆகியவற்றுக்கிடையில் முதலாவது பரிமாற்றங்கள் உள்ளிட்ட இலங்கை-ரஷ்யக் கடற்படை கல்வி நிறுவனங்களுக்கிடையிலான மேலதிக ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (இ-7)

## ஐ.தே.கூட்டணியை அமைத்த பின்னரே ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம்

### அமைச்சர் அகிலவிராஜ் உறுதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கூட்டணியை அமைத்த பின்னரே ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து அறிவிக்கப்படும். நாளை 5 ஆம் திகதி மாநாட்டில் கூட்டணியை மாத்திரமே உருவாக்கத் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாம் நிலை உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து யாப்பில் திருத்தங்கள் செய்யப்படும் எனவும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கூட்டணி அமைப்பது குறித்து கட்சிக்குள் இழுபறி நிலைமைகள் காணப்படுகின்ற நிலையில் கூட்டணியை உருவாக்க முன்னர் சில திருத்தங்களை யாப்பில் கொண்டுவர வேண்டும் என கட்சியின் இரண்டாம் நிலை உறுப்பினர்கள் அழுத்தமாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் இது குறித்து கட்சியின் பிரதான தரப்பினரின் கருத்தை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பண்ணையாளர்கள், கால்நடைகளுக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கால்நடைப் பண்ணையாளர்கள் அனைவரும் எதிர்வரும் ஓகஸ்ட் 31 இற்கு முன்னர் கால்நடைகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு காரைநகர் கால்நடை வைத்திய அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

கால்நடைகளை வளர்ப்போர் குறிப்பாக மாடுகளுக்கான பதிவுகளை செய்து காதிலக்கம் இடப்படுவது கட்டாயமானதாகும்.

அந்த வகையில் காரைநகர் பிரதேச பிரிவிற்குட்பட்ட அனைத்துக் கால்நடைப் பண்ணையாளர்களும் கால்நடை வைத்திய அலுவலகத்தில் கால்நடைப் பதிவுக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி அலுவலகத்தில் வழங்குவதன் மூலம் கால்நடைகளை பதிவு செய்து கொள்ளலாம். மேலும் கால்நடை பதிவுகளை மேற்கொள்ளாத கால்நடைப் பண்ணையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காரைநகர் கால்நடை வைத்திய அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (5)

# பௌத்த மேலாதிக்கத்துக்கு அடித்தளம் இட்டது கூட்டமைப்பே

## பௌத்த பயங்கரவாதத்துக்கும் வித்திட்டது

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் பௌத்த மேலாதிக்கத்துக்கு அடித்தளம் இட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இன்று இடம்பெறும் பௌத்த பயங்கரவாதத்துக்கும் அடித்தளம் இட்டதாக வவுனியாவில் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் நல்லூரில் கோசமிட்டனர்.**



896 ஆவது நாளாக சுழற்சி முறையில் இடம்பெற்றுவரும் போராட்டம் நேற்று நல்லூரிலுள்ள தியாகி திலீபன் நினைவிடத்தில் தீபம் ஏற்றி உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு நல்லூர் ஆலய முன்றல் வரை பேரணியாகச் சென்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது, தமது போராட்டம் 896 ஆவது நாளை கடக்கும் நிலையில் தமக்கான எவ்வித் தீர்வையும் பெற்றுக் கொடுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் அரங்கில் இருந்து ஓரங்கட்ட வேண்டும் எனக்கோரிக்கை விடுத்தனர்.

பௌத்த பேரின வாதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பம் முதல் ஆதரித்துத்தான் செயற்படுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரும் எனக் கூறியவர்கள் இன்றுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக எந்தவொரு நீதியையும் பெற்றுத் தரவில்லை.

அது மட்டுமல்லாமல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் புகைப்படம் ஒன்றில் வெளியான பிள்ளையைக் கூட மீட்டுத்தர முடியாதளவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் பேரம் பேசும் சக்தி அரசியல் சுகபோகங்களுக்காக கைநழுவ விடப்பட்டதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் குற்றம் சாட்டினர். (இ-10)

# எதிர்காலத்தில் தாமரை மொட்டில் மலரும் பூவுக்கு ஆதரவாக செயற்பட வேண்டி வரும்

## சு.கவுக்கு டிலான் எச்சரிக்கை

(பதுளை)

எதிர்காலத்தில் நாங்கள் விரும்பும் விதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பயணிக்காவிட்டால், விருப்பம் இல்லாவிட்டாலும் தாமரை மொட்டில் மலரும் பூவுக்கு மக்கள் விருப்பத்திற்காக செயற்பட வேண்டி ஏற்படும் என சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா எச்சரித்தார்.

பதுளையில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வீட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக



வியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்ட சஜித் பிரேமதாஸவின் பணம் மற்றும் அர்ஜுன மகேந்திரனின் பணம் பெற்று வாழும் சிலர் சஜித் பிரேமதாஸ ஊடாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைய முற்படுகிறார்கள்.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மற்றும் ஜனாதிபதியைச் சுற்றியுள்ள சில செயலாளர்கள் அனைவரும் உடந்தை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம் சாட்டினார். (இ-7)

# கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மூன்று நாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

தேசிய கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழில் கைத்தொழில் பயிற்சிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட கைத்தொழில் அதிகார சபை முன்னெடுத்துள்ளது.

இக் கைத்தொழில் பயிற்சிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 10 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இதில் உணவு உற்பத்தி (யோகர்ற், ஐஸ்கிறீம்), சீமெந்து உற்பத்தி, கடதாசி உற்பத்தி, சலவைச் சவர்க்காரம், லோன்றி பிக் டோஜன் பவுடர், எயப் பிரஸ், வெதுப்பக உணவுகள் தயாரிப்பு, இயற்கைப் பழரசத் தயாரிப்பு ஆகியவற்றுக்கான பயிற்சி வழங்கப்படவுள்ளன.

ஆகவே குறித்த துறையில் ஈடுபடுபவர்களும் ஈடுபட ஆர்வமுள்ளவர்களும் 021222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் வரவை உறுதிப்படுத்திக் கொள்வதோடு மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். (5)

## கலந்துரையாடல்

(கொழும்பு)

அகில உலக கலைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2020 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச கலைஞர் மாநாடு பற்றிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக் கலந்து ரையாட லானது இன்று 4 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு, வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள தமிழ்ச் சங்கம் முன்பாகவுள்ள அகில உலக கலைஞர் சங்கத்தின் தலைமையகத்தில் ஓய்வு நிலை அரசாங்க அதிபர் உடுவை எஸ்.தில்லை நடராசா தலைமையில் நடைபெறும். (5)

# சுற்றுலாப் பயணத் தடையை தளர்த்தியது சிங்கப்பூர் அரசு

(சிங்கப்பூர் சிற்றி)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து தமது நாட்டு பிரஜைகள் இலங்கைக்கு சுற்றுலா வருவதை எச்சரித்து விடுத்திருந்த சுற்றுலாப் பயணத் தடையை சிங்கப்பூர் அரசாங்கம் தளர்த்தியது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் இலங்கையில் பாதுகாப்புப் பிரச்சினைகள் இல்லை என்பதால் இலங்கை மீதான பயணத்தடையை நீக்கியுள்ளதாக சிங்கப்பூர் அரசாங்கம் நேற்று சனிக்கிழமை அறிவித்தது.

இருப்பினும் தற்போது அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதால் வழிபாட்டு ஸ்தலங்கள், சுற்றுலாத் தளங்கள் மற்றும் விமான நிலையங்களில் முப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பயணிகள் போதுமான விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் சிங்கப்பூர் அரசு வலியுறுத்தியது.

அத்தோடு ஏற்கனவே இலங்கையிலுள்ள சிங்கப்பூர் நாட்டவர்கள், விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் தங்கள் தனிப்பட்ட பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் சிங்கப்பூர் அரசாங்கம் கேட்டுக்கொண்டது.

மேலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறும் சிங்கப்பூர் அரசாங்கம் தமது நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டது. (இ-7)

# மோ.சைக்கிள்-லொறி விபத்து; ஒருவர் பரிதாபமாக மரணம்!

(நவகமுவ)

நவகமுவ பொலிஸ் பிரிவில் அவிசாவளை- கடுவெல வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு தனது மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையே விபத்துக்குக் காரணம்.

நவகமுவ பொலிஸார் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது சவலால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை!

(மிஹிந்தலை)

மிஹிந்தலை பொலிஸ் பிரிவில் உள்ள குருண்டன்குலம பகுதியில் சவல் ஒன்றினால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருவருக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதமே மரணத்திற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் குருண்டன்குலம, போதிராஜபுர பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்ட நபர் தலைமறைவாகி உள்ளதாகவும் மிஹிந்தலை பொலிஸார் இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரியவந்துள்ளது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 250 | 70 | 300 |
| தக்காளி | 100 | 120 | 120 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 180 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 60 | 70 | 50 | 80 |
| கரட் | 80 | 160 | 120 | 200 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 | 80 |
| புடோல் | 40 | 70 | 60 | 50 | 120 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100-120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 115 | 120 |
| பாகற்காய் | 160 | 160 | 200 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 70 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 70 | 60 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 140 | 200 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 100 | 70 | 100 |
| போஞ்சி | 160 | 120 | 180 | 200 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 50 | 50 | 40 | 80 |
| கீரை-1பிடி | 40 | 50 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 140 | 140 | 200 |
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 40 | 120 | 50 |

# தென்னக்கோன் மீது தாக்குதல்; சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் மற்றும் அவரது மனைவியின் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

25 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணை மற்றும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் நேரத்தில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## துப்பாக்கியைக்காட்டி அச்சுறுத்திய

# மாநகர முதல்வருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை, துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திய அம்பாந்தோட்டை மாநகரசபை முதல்வர் எராஜ் பெர்னாண்டோவுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி, அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பார்வையிட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அஜித் பெரேரா, அஜித் மன்னப்பெரும, நளின் பண்டார, ஏரான் விக்கிரமரத்ன, ஆர். யோகராஜன் ஆகியோரைக் கொண்ட குழு சென்றது.

அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்த எராஜ் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர், தாக்குதல் நடத்த முற்பட்டதுடன், துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தினர்.

அவர்கள் வெளியே வந்த போது அந்தக் குழுவினர் முட்டைகள் மற்றும் கற்களையும் வீசித்தாக்கினர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, அப்போதைய அரசாங்கம், எராஜ் பெர்னாண்டோ விளையாட்டுத் துப்பாக்கியையே வைத்திருந்தார் என்று கூறியிருந்தது.


எனினும், இந்தச் சம்பவம் தொடர்பாக அம்பாந்தோட்டை மேல்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, அம்பாந்தோட்டை மாநகர முதல்வர் எராஜ் பெர்னாண்டோ, பிரேமசிறி பரணமான ஆகியோருக்கு தலா ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

இதையடுத்து எராஜ் பெர்னாண்டோ, சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (இ-7)

# தீவிரவாதத்துக்கு எதிராக போராட இந்தியாவின் பலமான ஆதரவு இலங்கைக்கு தொடர்ந்து கிடைக்கும்

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி



(பாங்கொக்)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன பேச்சுக்களை நடத்தினார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இடம்பெற்று வரும் ஆசியான் அமைப்பின் 26 ஆவது பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டுள்ள இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் நேற்று முன்தினம் பக்க நிகழ்வாக இந்தச் சந்திப்பை நடத்தினர்.

இந்த இருதரப்பு பேச்சுக்களில் தீவிரவாதத்துக்கு எதிரான போர் உள்ளிட்ட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

இதன்போது, தீவிரவாதத்துக்கு எதிராக போராடுவதற்கு இந்தியாவின் பலமான ஆதரவு இலங்கைக்குக் கிடைக்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து டுவிட்டர் பதிவு ஒன்றை வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், முக்கியமான அண்டை நாடும், பெறுமதிமிக்க நண்பனுமான இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவுடனான சந்திப்பின் போது, தீவிரவாதத்துக்கு எதிரான போரில் எமது பலமான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## "வேட்பாளர் அறிவிப்புடன் பனிப்போர் வெளிப்படும்"

# ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை ரணில் விட்டுக்கொடுக்க மாட்டார்

## மகிந்த அணி கணிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் பிறருக்கு விட்டுக் கொடுக்க மாட்டார்.

ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தவுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இடம்பெறும் பனிப்போர் வெளிப்படும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தற்போது பல விதமான சர்ச்சைகள் அனைத்து அரசியல் கட்சிகளின் மத்தியிலும் காணப்படுகின்றன.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என எதிர்வரும் 11 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவிப்பார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எதிரணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி - மகிந்த தனித்து நின்றால் ஆளும் தரப்பிற்கு சாதகமாகிவிடும்

## சு.க.முன்னாள் பொதுச்செயலர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இரு தரப்பும் தனித்துப் போட்டியிட்டால் அது ஆளும் தரப்பினருக்கு மிகச் சாதகமாக அமையும். எனவே பேச்சுவார்த்தைகளின் ஊடாக பரந்துபட்ட கூட்டணி வெற்றி பெற்று பலமான அரசாங்கம் தோற்றம் பெறவேண்டும் என்ற நோக்கில் இரு தரப்பும் செயற்படுவது இரு தரப்பிற்கும் சாதகமாக அமையும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் வெற்றிகரமாகவே ஆறு முறை பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. கூட்டணிக்கான கொள்கைகளும் ஒருமுகப்படுத்தப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகிய இரு தரப்புத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது. இச்சந்திப்பின் போது கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும். இச்சந்திப்பு பரந்துபட்ட கூட்டணியை பலப்படுத்தும்.

கூட்டணி இல்லாமல் தனித்துப் போட்டியிடலாம் என்று ஒரு தரப்பினர் குறிப்பிட்டுக் கொள்வது சாத்தியமற்றதாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காலம் காலமாகப் பிறிதொரு தரப்புடன் கூட்டணியமைத்தே ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொண்டது. தற்போது நிலைமை மேலும் வலுவடைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு இணையான ஒரு பலமான கூட்டணி அமைத்தல் பிரதான தேவையாகவும் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவுடனான உடன்பாடுகள்; மக்களைத் தீர்மானிக்க விடுங்கள்

## அரசாங்கத்திடம் பசில் கோரிக்கை



(கொழும்பு)

அமெரிக்காவுடன் அக்சா, சோபா உடன்பாடுகளில் கையெழுத்திடக் கூடாது என்பதே தமது நிலைப்பாடு என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அரசாங்கம் அமைந்தால், அமெரிக்காவுடன் அக்சா, சோபா உடன்பாடுகள் தொடர்பான நிலைப்பாடு என்ன என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அக்சா, சோபா உடன்பாடுகளில் கையெழுத்திடக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு என்றும் இதுகுறித்து மக்களைத் தீர்மானிக்க விடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர், கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் தானே அதிகம் மகிழ்ச்சியடைவேன் எனவும் தெரிவித்தார். (ஐ)







முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகமும் புதுக்குடியிருப்புப் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த புதுக்குடியிருப்பு பிரதேசப் பண்பாட்டுப் பெருவிழா-2019 நேற்று முன்தினம் இடம் பெற்றது. புதுக்குடியிருப்பு முல்லைத் தீவு வீதியில் குழந்தையேசு ஆலயத்திற்கு அருகிலிருந்து தமிழர்களின் பாரம்பரிய கலா சார அம்சங்களை தாங்கியதாக ஊர்திப் பவனி ஆரம்பிக்கப்பட் டது.

இந்த ஊர்திப்பவனி பொன்விழா மண்டபத்தை அடைந்த தும் அங்கு பல்வேறு கலை நிகழ்வுகளும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளும் விருந்தினர்கள் உரைகளும் இடம்பெற்றன. அந்தவகையிலே புதுக்குடியி ருப்புப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த கலை படைப்பாளர்களின் கலை அம்சங்கள் மேடையேற்றப்பட்டதோடு தமிழர்களின் பாரம்பரிய பண்டைய கலை கலாசார அம்சங்களை கட்டிக்காக்கின்ற கலைஞர்கள் பலரும் இதன்போது பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌர விக்கப்பட்டனர். புதுக்குடி யிருப்புப் பண்பாட்டு பேரவையி னால் "புதியவள்" மலரின் நான்காவது மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வீதியைப்புனரமைக்குமாறு பூநகரி மக்கள் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி மன்னார் ஏ-32 வீதியில் இருந்து பல்லவராயன்கட்டு ஊடாகப்பிரிந்து செல்லும் 3 கி.மீ. நீளமான பண்டிவெட்டிக்குளவீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதால் போக்குவரத்து செய்யமுடியாமல் இருப்பதாக அப்பகுதி கிராம அபிவிருத்திச்சங்கமும் கமக்கார அமைப்பும் தொடர்ந்து கோரிக்கை விடுத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதாக விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

விவசாய நிலங்களை ஊடறுத்துச்செல்லும் இவ்வீதியால் விவசாய உள்ளீடுகளையும் விளையும் நெல்லையும் கொண்டு செல்லமுடியாத நிலையையும் மகஜ ரில் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-84)

# வவுனியாவிலும் பொருத்தப்பட்ட 5ஜி கோபுரம் அகற்றிவிடுமாறு பொதுமக்கள் கோரிக்கை!

வவுனியா திருவாற்குளம் விளையாட்டு மைதானப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 5ஜி கோபுரம் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் 5ஜி கோபுரம் என்று உறுதிப்படுத்தப்பட்டு ஆவணம் வழங்கும் பட்சத்தில் அக்கோபுரம் உடனடியாக அங்கிருந்து தூக்கி எறியப்படும் என்று வவுனியா நகர சபை உறுப்பினர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபைக்குட்பட்ட நகர்ப்பகுதிகளான பண்டாரிக்குளம், திருநாவற்குளம் ஆகிய பகுதிகளில் 5ஜி கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள், விளையாட்டு மைதானத்தைச் சூழவுள்ள குடும்பங்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றதுடன் 5ஜி கோபுர வலையமைப்பினால் உடல், உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதாக ஆய்வுகள் சிலவற்றிலிருந்து தெரியவந்துள்ளது. இந்நிலையில் எமது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கோபுரம் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். எனவே இதனை அகற்றிவிடுமாறு அப்பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயங்கள் குறித்து நகரசபை உறுப்பினர் கே.சுமந்திரனிடம் வினவிய போது அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள கோபுரத்தினை அகற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரிவித்துள்ளார்.(ஜ-299)

# வெளி மாவட்ட அனுமதிகளுடன் வடக்கில் மணல் அகழ்வு

(அக்கராயன்)

பதவியா, அநுராதபுரம் மணல் அனுமதிகளுடன் பரந்தனில் டிப்பர்கள் தரித்து நிற்பதாக பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இறுதியாக நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த பத்தாண்டுகளாக தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்றுவந்துள்ளது.

தற்போது மாவட்டச் செயலகங்களினால் மணல் அனுமதிகள் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் பதவியா, அநுராதபுரம் போன்ற பகுதிகளில் பெறப்பட்ட அனுமதிகளுடன் கிளிநொச்சி பரந்தனில் டிப்பர்கள் தரித்து நின்று மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமங்களில் சுதந்திரமாக டிப்பர்கள் நடமாடி மணல் அகழ்வில் ஈடுபடுவதாகவும் பொலிஸார் குறித்த டிப்பர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு பொலிஸார் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பத்தில் பொலிஸாருக்கும் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கும் தொடர்பு உள்ளதாக செய்திகள் வெளிவருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மாவட்டத்தில் கிராமங்களில் நடமாடுகின்ற மணல் டிப்பர்கள் தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார். (9-350)

# வட்டக்கச்சி,மாயவனூர் பகுதிகளை கிளி.பொலிஸ் பிரிவுக்குள் இணைக்கக் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி வட்டக்கச்சி, மாயவனூர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடக்கு மாறு கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. தற்போது இக்கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குள் உள்ளடங்குகின்றன. இதன் காரணமாக இக்கிராமங்களில் இறப்புகள் ஏதும் நிகழுமானால் தருமபுரம் பொலிஸாரே விசாரணைகளை மேற்கொண்டு பின்பு சடலத்தினை கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்புகின்றனர்.

இந்நிலையில் மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளை கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடக்குவதன் மூலம் கிளிநொச்சி பொலிஸாரே விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு விரைவாக சடலங்களை கொண்டு வரமுடியும்.

தற்போது தருமபுரம் பொலிஸாரின் விசாரணைகளினால் காலதாமதங்கள் ஏற்படுவதாகவும் இதனைக் கருத்திற் கொண்டு மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)




# முல்லைத்தீவு மாணவி உயிரிழப்பு; மேலதிக விசாரணைக்கு பணிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு பகுதியில் உள்ள றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்று வரும் தீர்த்தக்கரை சிலாவத்தையினை இ.லிந்துசியா (வயது - 12) என்ற மாணவி கடந்த 29.07.19 அன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு பொலிஸாருக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் பணித்துள்ளார்.

குறித்த மாணவி கடந்த 29.07.19 அன்று பாடசாலை சென்ற வேளை பாடசாலையில் இழுப்பு (சுவாசநோய்) காரணமாக உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த மாணவிக்கு பாடசாலை நேரத்தின்போது பகல் 12.30 மணிக்கு இழுப்பு நோயால் சுவாசிக்க அவதிப்பட்டுள்ளார் என்றும் அதன்பின்னர் பிற்பகல் 2 மணிக்கே முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. மரண விசாரணை அதிகாரியின் விசாரணைகளின் பின்னர் உடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைக்கு நீதிமன்றால் பணிக்கப்பட்டுள்ளது. (9-281)

# நிரந்தர நீர் வசதியை பெற்றுத்தாருங்கள்

## வரட்சியால் வாடும் பொன்னகர் மக்கள் கோரிக்கை





(அக்கராயன்)

ஒவ்வொரு வருடமும் வரட்சியால் பாதிக்கப்பட்டு வரும் பொன்னகர் கிராமத்திற்கு நிரந்தர நீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு கிளிநொச்சி பொன்னகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராமத்தில் 586 குடும்பங்களைச் சேர்ந்த 2100 பேர் வசித்து வருகின்றனர். கிராமத்தின் பெரும்பாலான பகுதிகள் வருடத்தின் வரட்சியான காலத்தில் குடிநீர் உள்ளிட்ட நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இக் காலத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தினால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் குடிநீர் மாத்திரமே விநியோகிக்கப்படுவதனால் பொது மக்கள் ஏனைய நீர்த் தேவைகளுக்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே தங்களின் நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நிரந்தர குழாய் வழி நீர் வசதியை ஏற்படுத்தி தருமாறு பொன்னகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு குறித்த பிரதேசத்தில் தென்னை உட்பட பல பயன் தரு மரங்களும் வரட்சியால் கருகி வருகின்றமையையும் காணக் கூடியதாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளில் நேற்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் தகவல்களின் படி 7947 குடும்பங்களைச் சேர்ந்த 27,564 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் பூநகரி பிரதேச செயலக பிரிவே அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளது.(9-350)

எதிரிகளைத் தாக்க கட்டப்படும்
கோட்டைகளே கல்விச்சாலைகள்
- கன்பூஸியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அவர்கள் ஆளவும் நாங்கள் தாழவும் நாமே காரணம்

சரிக்குச் சரியும் பிழைக்குப் பிழையும் இடுவதே நீதியானது. இதை விடுத்து சரிக்குப் பிழையும் பிழைக்குச் சரியும் பதிவிடப்படுமாக இருந்தால், அதுவே இந்தப் பிரபஞ்சத்தின் இறுதிக்காலத்துக்கான அடையாளமாகும்.

இதற்கு மேலாக, பிழை விட்டவர் சரியாகச் செய்கின்றபோது அதுவும் பிழை என்று கருதுவதும் சரியாகப் பதிலளித்தவர் அடுத்த கேள்விக்குப் பிழையாகப் பதில் அளிக்கும் போது முன்னைய பதில் சரி என்பதால், பின்னைய பதிலும் சரியென்று நினைப்பதும் மகா தவறு.

இதை நாம் கூறும்போது இது எதற்கானது என்று நீங்கள் நினைக்கலாம். இங்குதான் ஒரு தத்துவத்தை நாம் புரிந்தாக வேண்டும்.

அதாவது உண்மைகள் எப்போதும் உண்மையாக இருக்க வேண்டும். அதேபோன்று உரிமைகளும் அவ்வாறு பகிரப்பட வேண்டும்.

இலங்கையில் இந்து சமயமே ஆதிச் சமயம் என்பது ஏற்புடைய உண்மை.

எனவே இதனூடு இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் என்பது உறுதியாகிறது.

இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் என்பதை ஏற்று; வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் என்பதை உலகம் அங்கீகரிக்க வேண்டும் என ஒட்டுமொத்த தமிழர்களும் கேட்கின்ற போது, இலங்கையின் ஆதிச்சமயம் இந்து சமயம் என்பதும் இந்து சமயத்துக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் இயல்பாகவே அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் இங்குதான் சரிக்குப் பிழை இடப்படுகிறது.

அதாவது தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்று கூறுகின்ற நம்மவர்களில், சிலர் இலங்கையின் ஆதிச் சமயம் இந்து சமயம் என்ற உண்மையைக் கூற மறுக்கின்றனர். அது மட்டுமன்றி, அதன் தொன்மையை அங்கீகரிப்பதன் ஊடாகவே இலங்கையில் தமிழினம் வாழ முடியும் என்ற நிதர்சனத்தையும் மறந்து போகின்றனர். இதுவே மிகப்பெரிய துரதிர்ஷ்டமாகும்.

அதாவது இந்து சமயம் ஆதியானது என்பதை யாழ்ப்பாண நாக விகாராதிபதி வணக்கத்துக்குரிய ஸ்ரீ விமல தேரர் குறிப்பிட்டுள்ளதுடன் இந்து சமயத்தை எதிர்க்கின்றவர்கள் உண்மையான பிக்குகள் அல்ல எனவும் அவர் துணிச்சலோடு கூறியுள்ளார்.

அதேநேரம் கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஆனால் மன்னார் ஆயர் அவர்கள் திருக்கேதீச்சரத்து நுழைவாயில் வளைவை நிறுவுவதற்குத் தடை செய்து வருவதுடன் மதத்தின் பெயரால் தனக்கு இருக்கக்கூடிய மரியாதைத் தகைமையினைப் பயன்படுத்தி, மன்னார் பிரதேச சபைத் தவிசாளரான முஸ்லிம் இனத்தவரைத் தனது ஆயர் இல்லத்துக்கு அழைத்து;

திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு அமைப்பதற்கான அனுமதியை இரத்துச் செய்யுமாறு கூறியுள்ளார்.

முஸ்லிம் இனத்தவரான மன்னார் பிரதேச சபைத் தலைவர் தமது இனத்துக்கு இப்போதிருக்கின்ற பாதகமான சூழ்நிலையில், வளைவுக்கான அனுமதியை இரத்துச் செய்துள்ளார்.

நிலைமை இதுவாக இருக்கும்போது தமிழினம் உருப்படுமா என்பதை தமிழ் மக்கள் முதலில் தீர்மானிக்க வேண்டும்.

# கோத்தபாயவே ஜனாதிபதி வேட்பாளர்

## மகிந்த அணி மகிந்தானந்த எதிர்பார்ப்பு

(நாவலப்பிட்டி)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏனைய கட்சிகளுடன்கூட்டணி அமைக்க முடியாது எனவும், அக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் கருத்துக்கு அதிலுள்ள பெரும்பான்மையானோர் எதிராகவுள்ளதாகவும்ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நேற்று நாவலப்பிட்டிய நகரில் பொதுஜன பெரமுனவின் பொதுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி அமைத்தாலும், அதற்குள் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பது சாத்தியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவேதான் எனவும், 11 ஆம் திகதி அறிவிப்பு இதனை உறுதிப்படுத்தும் எனவும் மகிந்தானந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாழ். பேருந்து நிலைய ஊழியர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். பேருந்து தரிப்பிட தனியார் பாதுகாப்பு ஊழியர் மற்றும் பஸ் நடத்துநர் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில்இருவரும் காயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் யாழ். பேருந்து நிலைய பாதுகாப்பு நிலைய ஊழியர் ஒருவரும் மற்றும் பஸ் நடத்துநரும் இத்தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. யாழ். பேருந்து நிலையப் பகுதியில் அமைந்துள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு பொருட்களைக் கொண்டு வந்த ஆட்டோ பேருந்து நிலையத்தினூடாக உள்ளே செல்ல முயன்றது.

காவல்கடமையில்இருந்த குறித்த உத்தியோகத்தர் ஆட்டோவை உட்செல்ல அனுமதிக்காததால் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதில் இச்சம்பவம் இடம் பெற்றது. சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-10)

## கோத்தா வீழ்ச்சிகண்ட நாட்டை மீட்டெடுக்கத்தக்க செயல்வீரர்

### சர்வதேச இலங்கையர் ஒன்றியம் கூறுகிறது

(கொழும்பு)

நாடு அனைத்துத் துறைகளிலும் பாரியளவில் வீழ்ச்சி கண்டிருக்கும் நிலையில் நாட்டை மீட்டெடுப்பதற்கு சிறந்ததொரு தலைமைத்துவம் அவசியமாகும்.

பலர் அதற்காகப் பரிந்துரைக்கப்படலாம். ஆனால் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மாத்திரமே அந்தத் தலைமைத்துவத்திற்குப் பொருத்தமானவர் என்பதைக் கடந்த காலத்தில் நிரூபித்திருக்கின்றார்.

ஆனால் அவர் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதில் சட்டப் பிரச்சினைகள் காணப்படுமாயின், அடுத்த தலைமைத்துவத்தை மிகுந்த கவனத்துடன் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

ஏனெனில் அதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது என்று சர்வதேச இலங்கையர் ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷியாமேந்திர விக்கிரமாராச்சி தெரிவித்தார். (இ-7)

## 'ஜனநாயக தேசிய முன்னணி' ஒப்பந்தம் திங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான "ஜனநாயக தேசிய முன்னணி"க்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாளை திங்கட்கிழமை கைசாத்திடப்படவுள்ளது.

இந்த புதிய கூட்டணியில் ஏற்கனவே ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளான ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கைச்சாத்திடவுள்ளன.

சுகததாச விளையாட்டரங்கில் கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதோடு, அனைத்து மதத் தலைவர்களினதும் ஆசீர்வாதத்துடன் இந்த கூட்டணி அமைக்கப்படவுள்ளது. (இ-7)

## தங்கம் கடத்த முயன்றவர்கள் கட்டுநாயக்கவில் கைதாகினர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தாய்லாந்திலிருந்து தங்கத்தை இலங்கைக்கு கடத்திக்கொண்டு வந்த 9 இலங்கையரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே அவர்களின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டு பயணப் பொதியை சோதனை செய்த போதே 3 கிலோவிற்கும் அதிகமான தங்கங்கள் மீட்கப்பட்டதாகவும் இதன் பெறுமதி 28 மில்லியன் ரூபா எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் வத்தளை, கடவத்தை, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் மேலதிக விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பலாலி உள்ளிட்ட விமான நிலையங்களில் குடிவரவு,சுங்க பணியகங்களை நிறுவுக

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், பிராந்திய மட்டத்தில் வணிக விமானங்களை இயக்குவதற்கு, பலாலி, மட்டக்களப்பு, இரத்மலானை ஆகிய மூன்று உள்நாட்டு விமான நிலையங்களையும் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

அதேவேளை,இந்தமூன்று விமான நிலையங்களும், பிராந்திய விமானப் போக்குவரத்துகளை மேற்கொள்வதற்கு, இந்த விமான நிலையங்களில் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நிறுவும் திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இலங்கையின் எல்லைக் கட்டுப்பாடுகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுங்கத் திணைக்களம் என்பனவற்றினால் செயற்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, வெளிநாடுகளுக்கு விமான சேவைகளை நடத்துவதற்கான தரத்துடன்இந்த விமான நிலையங்கள் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு உத்தரவிடப்பட்டது. (இ-7)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும், அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்.

❖ நாம் கடவுளின் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதினால் அல்ல. மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நமது பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில் தான் அன்பின் தன்மை விளங்குகிறது.

❖ இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால் தான். அவர் எனக்களித்த அருள் வீணாகிவிடவில்லை.

❖ குற்றம் செய்ய வாய்ப்புப் பெருகும்படி சட்டம் இடையில் நுழைந்தது. ஆனால், பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது.

❖ கடவுளாகிய ஆண்டவர் நமக்குக் கதிரவனும் கேடயமுமாய் இருக்கின்றார் ஆண்டவர் அருளையும் மேன்மையையும் அளிப்பார்.

❖ நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள்நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.

# தேசிய ரீதியிலான குத்துச் சண்டைப்போட்டியில் சாதனை படைத்த மாணவர்களுக்கான கௌரவிப்பு





தேசிய ரீதியில் நடைபெற்ற குத்துச்சண்டையில் பதக்கம் வென்ற வவுனியா கோவில்குளம் இந்துக்கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் பி.பூலோகசிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அகில இலங்கை ரீதியில் 2019 ஜூன் 28 மாத்தறையில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்களைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்து கொண்டிருந்தார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் மிகக்குறைந்த வயதில் (07) பங்கு பற்றி தங்கப் பதக்கம் பெற்றதுடன், வடக்கு மாகாணத்தில் குறைந்த வயதில் தங்கப்பதக்கம் பெற்றவர் என்ற சாதனையை நிலைநாட்டிய ஆர்.கே.மைக்கல் நிம்றொத் என்ற மாணவனும் மற்றும் பதக்கங்களை பெற்ற என்.றோசி மஞ்சு, எஸ்.நிசாந்தன் ஆகியோர் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வில் விருந்தினர்கள் தேசிய ரீதியில் பதக்கம் வென்ற மாணவர்கள் மாலை அணிவித்து பாண்ட் வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு அவர்களுக்கரான பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா நகர சபை உறுப்பினர் கெ.சந்திரகுலசிங்கம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் என்.வி. சுந்தராங்கன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் கல்லூரியின் அதிபர் பி.பூபாலசிங்கம் கருத்து தெரிவிக்கையில், மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு வளர்க்க வேண்டும். பெற்றோரின் வழிகாட்டல்கள் பிள்ளைகளுக்கு மிக முக்கியமானது. மைக்கல் நிம்றொத் மிகச்சிறிய வயதில் மாகாணத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார் என தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா கோவில்குளம் இந்து கல்லூரி மாணவன் ஏழு வயதில் தங்கப் பதக்கம் பெற்றதானது இலங்கைக்கு பெருமை சேர்க்கும் விடயம். இந்த விடயம் ஜனாதிபதியின் மட்டத்திற்கு எடுத்து செல்லப்பட வேண்டும் என குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த வடக்கு மாகாணத்தின் கிக் பொக்சிங் பயிற்றுவிப்பாளர் எஸ்.நந்தகுமார், மாணவர்கள் விளையாட்டுத்துறையை தெரிவு செய்து அதில் சாதிக்கும் போது அரசாங்க வேலை வாய்ப்புக்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (க-250)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

கிளிநொச்சி மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச்சங்க அனுசரணையுடன் பூநகரி பிரதேச விவசாயிகள் பூநகரி மடத்துப்பிட்டி விடந்தை சவாரித் திடலில் சகல மாவட்டப் போட்டியாளர்களும் பங்கு கொள்ளும் ஒழுங்கமைப்பில் இன்று 4 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

அ,ஆ,இ,ஈ,உ என ஐந்து பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டியில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 50 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு கொள்ள உள்ளார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (க-84)

## இந்திய அணியின் பயிற்சியாளராக எனக்கும் ஆசை இருக்கிறது- கங்குலி



எதிர்காலத்தில் இந்திய அணியின் பயிற்சியாளராக வேண்டும் என தனக்கு ஆசை இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

இந்திய அணி தற்போது மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டிகளில் பங்கேற்பதற்காக சுற்றுலா சென்றுள்ளது. ரவிசாஸ்திரியின் பதவிக்காலம் முடிந்த நிலையில், போட்டி முடிந்த பின்னர் இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் தேர்வு செய்யப்படவுள்ளார்.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி, நான் தற்போது மேற்கு வங்க கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக பதவி வகித்து வருகிறேன். அதோடு அல்லாமல், ஐ.பி.எல்.தொடரில் டில்லி அணியின் ஆலோசகராகவும் கிரிக்கெட் வர்ணனை மற்றும் பிரபலமான பெங்காலி விநாடி வினா நிகழ்ச்சியின் தொகுப்பாளராகவும் இருந்து வருகிறேன்.

அதனால் இப்போதைக்கு பயிற்சியாளராகும் எண்ணம் இல்லை. ஆனால் நிச்சயமாக எதிர்காலத்தில் பயிற்சியாளருக்கு விண்ணப்பம் செய்வேன். அதற்காக ஆர்வமாக உள்ளேன் என தெரிவித்துள்ளார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை,
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## பங்களாதேஷூடனான வெற்றிக்குப்பின் நியூசிலாந்துடன் விளையாடும் இலங்கை



இலங்கை கிரிக்கெட் அணி அடுத்ததாக நியூசிலாந்து அணிக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது.

சமீபத்தில் பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றது.

இந்த தொடரை 3-0 என்ற கணக்கில் இலங்கை அணி வென்று சாதனை படைத்தது.

இதையடுத்து நியூசிலாந்து கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் இருபது-20 தொடரில் விளையாடவுள்ளது.

அதன்படி ஓகஸ்ட் 14 ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி தொடங்குகிறது. 2 ஆவது டெஸ்ட் போட்டி அதே மாதம் 22 ஆம் திகதி நடக்கிறது. இதன்பின்னர் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் இருபது-20 போட்டியும் 3 ஆம் திகதி இரண்டாவது இருபது-20 போட்டியும் 6 ஆம் திகதி மூன் றாவது இருபது-20 போட்டியும் நடைபெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## கோடா கால்பந்து தொடர்மீது ஊழல் குற்றச்சாட்டு மெஸ்ஸிக்கு மூன்று மாதகால போட்டித்தடை



உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவரான ஆர்ஜென்டீனா கால்பந்து அணியின் தலைவர் லியோனல் மெஸ்ஸிக்கு சர்வதேச கால்பந்து தொடர்களில் பங்கேற்பதற்கு மூன்று மாதங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோபா அமெரிக்கா கால்பந்து போட்டித்தொடர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த காரணத்திற்காக மெஸ்ஸிக்கு இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோபா அமெரிக்கா தொடரில் மூன்றாம் இடத்திற்கான பிளே ஆப்பில் சிலி-ஆர்ஜென்டீனா அணிகள் மோதின. போட்டியின் போது சிலி வீரர் கேரி மெடலுக்கும் மெஸ்ஸிக்கும் மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து, மெஸ்ஸிக்கும் சிவப்பு அட்டை காட்டப்பட்டு போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார். போட்டிக்கு பின் பேசிய மெஸ்ஸி, இத்தொடர் போட்டியை நடத்தும் பிரேசிலுக்கு ஆதரவாக நிர்ணயிக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, மெஸ்ஸிக்கு சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்கு மூன்று மாதங்கள் தடையும், 50,000 டொலர் அபராதத்தையும் தென் அமெரிக்கா கால்பந்து கழகம் விதித்துள்ளது. ஆனால், இந்த முடிவை எதிர்த்து மெஸ்ஸி முறையீடு செய்வதற்கு ஒருவார காலம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒருவேளை மெஸ்ஸி மீதான இந்த தடை நீக்கப்படாவிட்டால் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் சிலி, மெக்சிக்கோ மற்றும் ஜேர்மனியுடன் நடைபெறவுள்ள போட்டிகளை அவர் தவறவிடக் கூடும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வெலிக்கடைச்...

வித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 44 வயது தலைமைக் காவலர் துப்பாக்கிச் சூடுபட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மேலும் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவராத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-3)

## சாவகச்சேரி...

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர் க.தயாளன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திடீரென மரணம் அடைந்துள்ளார்.

தனது அலுவலகக் கடமைகளை முடித்து வீடு சென்ற பின்னரே திடீரென மரணமடைந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

நெஞ்சு வலிக்கிறது என்று கூறிய வைத்திய அதிகாரி மயங்கி விழுந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது மரணமடைந்துள்ளார்.

நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றும் க.தயாளன் (வயது -54) என்பவரே மரணமடைந்தவராவார்.

சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையை பார்வையிட்ட சாவகச்சேரி பதில் நீதிவான் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தென்மராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தை பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி மூலம் மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பணித்துள்ளார். (மு-3,30,114)

## கிழக்கு மாகாண...

சாரம் செய்த மாணவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சளாளர் தெரிவித்துள்ளார்.

முகமட் நவ்ஷாத் மற்றும் முகமட் இஸ்மாயில் என்ற 25 வயதுடைய இருவரும் அனுராதபுரம் மற்றும் வாழைச்சேனை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அம்பாறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமியத் மில்லா இஸ்லாமியா ஆகிய இரு அமைப்புகளுக்கும் அவசரகால சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

## சஜித்தை விட...

கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சரியான நேரம் வரும்போது பொருத்தமான வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்றும் எதிர்காலத்தில் சிறந்த வேட்பாளரை களமிறக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்என்றும்அவர்தெரிவித்தார்.

ஆனால் தனக்கும் அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையே விரிசல் இருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தியைத் தான் மறுப்பதாகவும்,

அத்தோடு சில ஊடக நிறுவனங்கள் பல்வேறு மோதல்களை உருவாக்க முயற்சிபபதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (மு-3)

## கோத்தாவை சந்...

செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ களமிறங்கவுள்ளார் என பரவலாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அவருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த உரையாடலில் இருவரும் சில விடயங்களை மனம்விட்டுப் பேசியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாகவே இருவருக்கும் இடையில் இன்னும் சில தினங்களில் நேரடிச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)

## ஐக்கிய தேசிய...

வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள சபாநாயகர் கரு ஜயசூரிய அதற்கான பிரசார வேலைகளை மறைமுகமாக ஆரம்பித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக போட்டோஷூட் பலவற்றில் அவர் கலந்துகொண்டதோடு, அத்தனகல்லையில் உள்ள பண்டாரநாயக்க சமாதி மற்றும் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி ஆகியவற்றில் நடந்த போட்டோஷூட்களிலும் சபாநாயகர் கரு கலந்துகொண்ட நிலையில் குறித்த படங்கள் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றது.

அதேபோல நாட்டின் பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் சபாநாயகர் செல்லவுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் அவர் தனது சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதோடு,

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகி அவர் சுயாதீன ஒருவராகப் போட்டியிடவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகுமாறு பிரதமர் ரணில் கேட்டுக் கொண்டதை அடுத்தே இந்த ஏற்பாடுகள் நடந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

முன்னதாக கடந்த அரசியல் நெருக்கடி கடந்த வருடம் ஏற்பட்டபோது கரு ஜயசூரிய அதனை மிக இலாவகமாக கையாண்டதால் அவருக்கு அனுபவ முதிர்ச்சியும் அரசியல் ஞானமும் இருப்பதாக பிரதமர் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

# ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கத் தயார்

## ஜனாதிபதியிடம் கரு தொலைபேசியில் உரையாடல்

(கொழும்பு)

அரசியல் கட்சிகளுக்கிடையில் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகக் கரு ஜயசூரியவே களமிறங்கவுள்ளார் என்ற செய்தி வெளிவந்துள்ள நிலையில், இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே இந்தத் தொலைபேசி உரையாடலை ஜனாதிபதி நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு 15 நிமிடங்கள் வரை இந்த உரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குகின்றீர்களா? என்று கரு ஜயசூரியவிடம் ஜனாதிபதி வினவியுள்ளார்.

"நான் எந்நேரமும் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கத் தயார். ஆனால், இது தொடர்பில் கட்சியின் உயர்பீடம்தான் இறுதித் தீர்மானம் எடுத்துப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அதுவரைக்கும் என்னால் உறுதியான பதிலை வழங்க முடியாது" என்று இதன்போது கரு ஜயசூரிய பதிலளித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ களமிறங்கவுள்ளார் என்ற செய்தி வெளிவந்துள்ள நிலையில், அவருடனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தொலைபேசியில் உரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-3)

## பலாலியில் இருந்..

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்தும் நடவடிக்கைகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்தமாதம். பலாலியில் இருந்து தென்னிந்தியாவுக்கு விமான சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தநிலையில், வெளிநாடுகளுக்கான விமான சேவைகளை பலாலி விமான நிலையத்தில் இருந்து மேற்கொள்வதற்கு, சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்திடம் (IATA) இலங்கை அரசு அனுமதி பெற்றுள்ளது.

பலாலி விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமானங்களை இயக்குவதற்கு, அனுமதி அளித்துள்ள சர்வதேச வான் போக்குவரத்து சங்கம், பலாலி விமான நிலையத்துக்கான தனித்துவமான குறியீட்டான JAF என்பதையும் (IATA code JAF) வழங்கியுள்ளது. (மு-3)

## ஐ.தே.கட்சி...

இருந்தால் அக்கூட்டணியின் கட்சித் தலைவர்களுடன் முன்னெடுக்கப்படும் விரிவான கலந்துரையாடலின் பின்னரே அது இடம்பெற வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி தனது தனிப்பட்ட விருப்பத்தின்பேரில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை கூட்டணி ஊடாக களமிறக்குவதாயின் தனக்கு சுயாதீனமாக தீர்மானம் எடுக்க வேண்டிவரும் எனவும் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

தனியார் வானொலியில் கேள்வி பதில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார். (மு-3)

## மத்திய, தென்...

மைத்திரி குணரத்ன தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். தென் மாகாண ஆளுநரும் பதவியை ராஜினாமா செய்வார் எனக் கூறப்படுகிறது.

இந்த ஆளுநர்கள் தொடர்பாக மாகாணங்களின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல்வாதிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

அது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிலும் பேசப்பட்டுள்ள நிலையிலேயே இந்த ராஜினாமாக்கள் இடம்பெறுகின்றன. (மு-3)

### வடக்கில்

## காற்றின் வேகம் இன்று அதிகரிக்கும்

(கொழும்பு)

இன்றைய தினம் வடக்கு மற்றும் மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்பில் காற்றின் வேகமானது மணிக்கு 70 தொடக்கம் 80 கி.மீ வேகத்தில் அதிகரித்து காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, எதிர்வரும் 9 ஆம் திகதிவரை குறித்த கடற்பரப்பில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆபத்தானது எனவும் வளிமண்டலவியல் திணைக்கள அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (மு-3)

கொவிசெத
திகதி 2019.08.03
சீட்டிழுப்பு இலக்கம் 2198
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 34 52 70
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03-08-2019
சீட்டிழுப்பு இலக்கம் 962
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 2 1 9 3 2 2
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2019/08/03
சீட்டிழுப்பு இலக்கம் 0206
ஆங்கில எழுத்து V
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 11 43 69
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2019/08/03
சீட்டிழுப்பு இலக்கம் 1448
எழுத்து 02
வெற்றி இலக்கம் 13 14 37 48 29 10
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1016
சீட்டிழுப்பு திகதி 03/08/2019 சனிக்கிழமை
0 13 31 66 70
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 689 வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.03
விசேட இலக்கம் 9676
வெற்றி இலக்கங்கள் 11 16 19 67
ஆங்கில எழுத்து G
தொலைபேசி: 0112 333 546-47

சனிதா வாசனாவ
SATURDAY FORTUNE
சீட்டிழுப்பு இல: 3217 வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.03
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 54,456,605/-
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம்
08 13 16 65 B 28
தொலைபேசி: 0112 333 546-47

ராசி
திகதி 03.08.2019 வெற்றி வாரம் 2575 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 02 10 55 62 மிதுனம்
டபிள் சான்ஸ்
விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 3961
ரூ.100 பரிசுக்காக 116
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# வரணிப்பகுதியில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் - வரணிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற முச்சக் கரவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத் திய் சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர். இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வரணி இயற்றா லையைச் சேர்ந்த 29 வயதான யோ.சுபே சன். முச்சக்கரவண்டி யில் பயணித்த வரணி யைச் சேர்ந்த 24 வயதான எஸ்.சசிதரன் ஆகியோர் படுகாய மடைந்த நிலையில் சாவகச் சேரி ஆதார வைத்தி யசாலையில் அனு மதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள னர்.

விபத்து தொடர் பான மேலதிக விசா ரணைகளை கொடி காமம் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (மு-3.30)


MATHS GROUP CLASSES (TAMIL & ENGLISH MEDIUM)
Grade 6 - 11
076 286 5520
(9775)

யாழ். நகரிலுள்ள சைவ உணவகத்துக்கு பின்வரும்
வேலையாட்கள் தேவை
- உணவு பரிமாறுபவர்
- பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- தேநீர் தயாரிப்பாளர்
- பில்கிளாக்
ஆகிய வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை
(ஆண் / வபெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்)
077 882 2741
(C-7196)

விற்பனைக்கு
12/11 மூத்ததம்பி வீதி, மானிப்பாயில் 1 பரப்பு 15.8 குளியும் கொண்ட காணியும் அதனுடன் அமைந்த நவீன வசதியுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. (மூன்று (3) பெரிய அறை இணைந்த குளியலறை (1))
தரகர் அல்லாத நேரடித் தொடர்புக்கு முக்கியத்தும் வழங்கப்படும்.
(9753)
தொடர்புகளுக்கு:- 0774016745

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532




ARPICO Insurance
INSURANCE FOR THE LIVING
STEP IN TO A CAREER IN INSURANCE
Walk in interviews

இலங்கையின் காப்புறுதித் துறையின் FASTEST, STRONGEST AND YOUNGEST நிறுவனமான ARPICO INSURANCE PLC நிறுவனத்தில் யாழ்ப்பாணக் கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

01. FIELD SALES DEVELOPMENT EXECUTIVE / MANAGERS
✓ க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தி
✓ காப்புறுதி / சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது ஒரு வருடம் பணியாற்றிய அனுபவம்
✓ Team building திறன் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
Salary Rs. 20,000/= - 50,000/= வரை

02. INDIVIDUAL SALES EXECUTIVES
✓ க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தி
✓ காப்புறுதி / சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது ஒரு வருடம் பணியாற்றிய அனுபவம்
Salary Rs. 10,000/= - 40,000/= வரை

03. INSURANCE CONSULTANTS (Full Time / Part Time)
✓ க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தி
Allowance Rs. 10,000/= முதல்...

மாதாந்த ஊதியத்துடன் கவர்ச்சிகரமான மேலதிக கொடுப்பனவுகள், வெளிநாட்டு சுற்று லாக்கள் மற்றும் தகுதியானவர்களுக்கு 06 மாதங்களில் பதவி உயர்வு என்பன காத்திருக் கின்றன.

COME EXPLORE
THESE OPPORTUNITIES WITH US

(நேர்முகத் தேர்வு 05,06 மற்றும் 07ம் திகதிகளில் காலை 9.30 - பி.ப 1.30 வரை)
எமது தொடர்பு முகவரி :
ARPICO INSURANCE PLC
NO. 86, NAVALAR ROAD, JAFFNA
TEL : 021 203 5001
(C-7188)


# ஜனாதிபதித் தேர்தலுக்கு நான் தயாராகிவிட்டேன்

## சஜித் பிரேமதாச அறிவிப்பு

(கொழும்பு)



மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப நவம்பர் வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு நான் தயாராகி விட்டேன் என வீடமைப்பு நிர் மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரமேதாச தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கும்புறுமூலையில் இந்திய நிதி உதவி மூலம் அமைக்கப்பட்ட காந்தி மாதிரிக் கிராமம் மற்றும் ஓட்டமாவடி பிர தேச செயலாளர் பிரிவில் அல்மஜ்மா நகரில் அமைக்கப்பட்ட முகைதீன் அப்துல் காதர் மாதிரிக் கிராமம் என்பன மக்களிடம் நேற்று சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

கல்குடாப் பிரதேசத்தில் மக்களிடம் கையளிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்திற்கான பிரதான நிகழ்வு ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்சொன்னவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டு மக்களுக்காக, அவர்களு டைய தேவைக்காக, மக்களுடைய அபி விருத்திக்காக என்னை அர்ப்பணிப்பதே எனது நோக்கம். எனவே அனைவரும் ஒன் றிணைந்து நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பு டன் நட்டு மக்களை ஐக்கிய இலங்கைக் கூடாக, தேசிய பாதுகாப்புக் கூடாக, சிறந்த முற்போக்கு அபிவிருத்திக் கூடாக நாட்டை கட்டியெழுப்புவதே எனது நோக்கம். உங் களால் வெற்றி பெற முடியுமா? வெற்றி பெறுவீர்களா? என்று கேட்கின்றார்கள்.

பிரேமதாச தேர்தலில் தோல்வியுற்ற தில்லை. இந்த பிரேமதாசவும் தோற்க போவதில்லை. இந்தமுறை வெல்லப் போவது பிரேமதாச மாத்திரமல்ல மக்கள். எனவே உங்களின் வியர்வை மற்றும் உழைப்பை உயர்ந்தவனாக உங்களில் ஒருவனாக, எனது ஆடை எந்த மாற்றமும் வராமல், சிம்மாசனத்தில் அமர்வதற்கு ஆசைப்படுபவன் அல்ல.

உங்ளோடு இருந்து கொண்டு உங்களுக் காக சேவை செய்வதற்கு எப்போதும் உள் ளேன் என்பதை கூறுவது வேறு யாருமல்ல சஜித் பிரேமதாச என்பதை கூறிக் கொள்கின் றேன். நாட்டு மக்கள் புதிய பாதையை, புதிய வேலைத் திட்டங்களை நோக்குகின்றார்கள்.

புதிய அபிவிருத்தி வளங்கள் என்பவற் றுக்கான நாட்டிலே தலைவர்களை தெரிவு செய்கின்றார்கள். தொழில் முயற்சி மற்றும் தொழில் நுட்பம் ஆகிய இரண்டிலும் தான் ஒரு நாடு அபிவிருத்தியின் பால் ஈர்க்கப்படும்.

இன்று அரசியல்வாதிகள் மேடைகளில் பேசுகின்றார்கள். தொழில் முயற்சியை பேசுகின்றார்களே தவிர தொழில் முயற்சி யின் மூலம் இலங்கை அபிவிருத்தி அடைந் துள்ளது என்றால் பொய் என்றே கூற வேண்டும். கனிசமான அளவுக்கு இலங்கை யில் தொழில் முயற்சியை பயன்படுத்த வில்லை.

அரசியல்வாதிகள் பேசும் பேச்சளவிற்கு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி காண வில்லை என்றே கூறவேண்டும். நான் உங்கள் மத்தியில் வீணான பேச்சுக்களை பேசவரவில்லை.

வெறும் பேச்சில் மாத்திரம் தங்கியிருப்ப வன் அல்ல. நவம்பர் மாதத்தில் நீங்கள் எடுக்கும் முடிவு சரியான முடிவாக இருந்தால் அந்த முடிவின் பால் செயற்பட ஆசைப் படுகின்றேன்.

இலங்கையைப் பொறுத்தவரையில் 332 பிரதேச செயலகங்கள் காணப்படுகின் றது. இந்த பிரதேச செயலகங்களில் தொழிற் சாலைகள், தொழில்பேட்டைகளை அமைக்க இருக்கின்றேன்.

காலஞ்சென்ற எனது தந்தை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இறுநூறு தொழில் பேட்டைகளை அமைத்தார்கள். இதனால் ஏழை மக்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக் கப்பெற்றது.

எனவே எனது தந்தை வழியில் நானும் 332 பிரதேச செயலகங்களில் தொழில் பேட்டைளை உருவாக்கி உங்களையும், உங்கள் பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டங்களை கொண்டு வருவேன். நீங்கள் ஒத்துழைக்கும் பொழுது உங்களுக்கான இந்த பணியை செய்வேன். தற்போது 2548 மாதிரி கிராம வீட்டுத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வரு கின்றது.

நாட்டு மக்கள் நவம்பர் மாதங்களின் சரியான தீர்மானங்களை எடுக்கும் பொழுது இதே போன்று இருபதாயிரம் மாதிரிக் கிராமங்களை உருவாக்குவேன் என்று உறுதி வழங்குகின்றேன் என்றார். (மு-3)


உடன் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் பாட சாலை ஒன்றிற்கு கணக்குத்தெரிந்த, லிகி தராக (Clerk) வேலை பார்க்க கூடியவர் தேவை.
- அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
- ஆங்கில அறிவு தேவை
அத்துடன் பாடசாலையை சுத்திகரித்து பிள்ளை களை பராமரிப்பதற்கு வேலையாட்கள் தேவை. உங்களது விண்ணப்பத்தை கீழ்காணும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
e-mail : sat37aero@gmail.com
or
154, Brown Road, Jaffna.
Tel : 077 244 4172
(C-7171)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
0768226240
V2 TRAVELS
(C-7054)
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- கொடிகாமம்
- வல்வெட்டித்துறை
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- திருகோணமலை
- சாவகச்சேரி
- சுன்னாகம்
- மருதங்கேணி

காணி விற்பனைக்கு
3 பரப்புக் காணியினுள் சகல வசதி களுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
விதானையார் 2ஆவது ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :
077 142 9174
(9788)


காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(9793)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-7145)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 228
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2050 04.08.2019 தொலைபேசி : 021 222 3378







## ஆபத்தை எதிர்கொள்ளும் ஆதி சமயம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த பண்டிதர் பொன். பாக்கியம் அவர்கள் 29.07.2019 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

பண்டிதமணியின் மாணவர் குழாத்தில் ஒருவராக இருந்த பண்டிதர் பொன். பாக்கியம் அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மௌன அஞ்சலியை அடுத்து அவையில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தைக் கலைப்பதற்காக விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் பராமரிக்கப்பட்டுவந்த காளைமாடு (நந்தி) 28.07.2019 அன்று இறையடி சேர்ந்துவிட்டது. கீரிமலைக்குச் செல்கின்ற பக்தர்களின் கவனத்திற்குரிய அந்த நந்தி நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் பேரின்பப் பெருவாழ்வு பெறப் பிரார்த்திப்போம் என்று கூற, அனைவரும் எழுந்து நின்றனர்.

சாத்திரியார் சதாசிவம் வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி... என்ற தேவாரத்தைப் பாடினார்.

சாத்திரியாரின் இராகம் எல்லோரையும் உருக்கியது. அதிலும் வாத்தியார் வைத்திலிங்கம் கண்ணீர் விட்டு அழுதார்.

நகுலேஸ்வரத்தில பராமரிக்கப்பட்டு வந்த நந்தி மீது இவ்வளவு பாசம் இருந்திருக்குது என்பதை என்னால் உணர முடியுது.

கனடாவில இருந்து அண்மையில வந்திருந்த சிறாப்பர் கனகசபை கூற, ஆலடியில் மீண்டும் நிசப்தம் நிலவியது.

**வாத்தியார்:** இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த காளை மாட்டை மீட்டெடுத்த கதை பெரிது. இதனோடு பலர் சம்பந்தப்பட்டிருக்கினம். ஆனால் காளை மாடு இறந்த செய்தியை ஒரு சிலருக்கு மட்டும் தெரிவித்துவிட்டு மற்றவர் களை உதாசீனம் செய்ததுதான் பெரிய கவலை.

**கங்காணி:** என்ன காளை மாடு இறந்த செய்தியை ஒரு சிலருக்குத் தெரிவித்து விட்டு மற்றையவர்களுக்குச் சொல்லாமல் விட்டவியளோ. இதுதான் பாருங்க இந்து சமயத்தில இருக்கிற பலவீனம்.

**சாத்திரியார்:** உண்மைதான். நகுலேஸ்வரத்தில பராமரிக்கப்பட்ட காளை மாட்டிற்குப் பின்னாலை முக்கியமான சம்பவங்கள் இருக்குது. காளைமாடு இறந்தது பற்றி எல்லோருக்கும் தெரியப்படுத்தி அதன் இறுதிக் கிரியைகளை மிகச் சிறப்பாகச் செய்திருக்க வேணும்.

என்ன செய்யிறது இந்து ஆலயங்கள் இது விடயங்களில கவனம் செலுத்தாமல் விடுகிறதால இண்டைக்கு எங்கட சமயத்திற்கும் மரியாதை இல்லாமல் போயிற்று. அதோட சனங்களும் தங்கட ஈடுபாட்டைக் காட்டாமல் விடுகிற சூழ்நிலை உருவாகி வருகிறது.

**மூப்பர்:** நகுலேஸ்வரத்தில ஏழு வருடமாக காளை மாட்டை பராமரித்து வந்ததால அந்த இடத்தில அல்லது ஒரு பொருத்தமான இடத்தில ஒரு நந்தியின்ர உருவச்சிலையை நிறுவினால் என்ன.

**கங்காணி:** மூப்பர் அண்ணே சொல்றது நல்ல ஐடியாதான்.

**வாத்தியார்:** அப்ப கீரிமலை நகுலேஸ்வரத்தில ஒரு பெரும் நந்தி சிலையை அமைக்கிறதையும் நந்தியை அடக்கம் செய்த ஒரு நினைவுத்தூபியை நிறுவுவது பற்றியும் சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பது நல்லது.

**விதானையார்:** ஒரு கோபுரத்தை தனிய ஒருவர் அமைத்துக்கொடுக்கக்கூடிய இந்தக் காலத்தில ஒரு பெரிய சிலையாக நந்தியை வைக்கிறது பெரிய வேலையில்லை.


**பண்டிதர்:** நகுலேஸ்வரத்தின்ர முன்றலில இப்படியொரு நந்தியின்ர சிலை அமைக்கப்படவுள்ளது. இதற்கு இவ்வளவு செலவாகும் என்ற அறிவித்தலைக் காட்சிப்படுத்தினால் எங்கள் கொடையாளிகள் நிச்சயம் உதவி செய்வினம்.

**வாத்தியார்:** இதுபற்றி கீரிமலை நகுலேஸ்வர ஆலயக் குருக்கள் ஐயா நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்.

வாத்தியார் இப்படிக் கூறியதையடுத்து அந்த நந்தி விவகாரம் முடிவுக்கு வந்தது. தொடர்ந்து சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:** ஆடி அமாவாசைக்கு கீரிமலைக் கடலில தீர்த்தமாடப் போய் கடலுக்குள்ள வீழ்ந்து எழும்பினதுதான் மிச்சம்.

**பண்டிதர்:** என்ர வீட்டிற்குப் பக்கத்தில இருக்கிறவர் கீரிமலைக் கடலில கல்லுக்குத்தி இப்ப வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.



**மாபெரும் எழுச்சிப் பேரணியில் தமிழ்மக்கள் இலட்சக்கணக்கில் கலந்துகொள்ள வேண்டும்**

**கங்காணி:** ஐயோ! கடவுளே! அதையேன் கேட்கிறியள். ஆடி அமாவாசை தினத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கீரிமலைக் கடலில நீராடினவியள்.

ஆனால் அங்க அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. நீராடிவிட்டு ஆடை மாற்றுவதற்குக் கூட மறைவிடம் இல்லை.

**சாத்திரியார்:** நாங்கள் இந்துசமயத்தினர். இது பற்றியெல்லாம் நாங்கள் கதைக்கக்கூடாது. அப்படி மீறிக்கதைத்தால் எங்கட மாவையர், எங்கள முட்டாள் ஆக்கிற பதில் சொல்லுவார். தன்ர மாவிட்டபுரத்தில இந்து சமயத்தைப் பாதுகாக்க முடியாத நிலையில் இருக்கிற அவர் வடக்குக் கிழக்கில ஆயிரம் விகாரை அமைக்கிறது ஐக்கிய தேசிய முன்னணியின் (பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின்) தேர்தல் பிரசாரம் எண்டு சொல்லுறார் எண்டால் தமிழ் மக்கள் படுமுட்டாள்கள் என்பதுதானே அவரின் கணக்கு.

**மூப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** வடக்குக் கிழக்கில ஆயிரம் விகாரை அமைக்கிறது ஐக்கிய தேசிய முன்னணியின்ர தேர்தல் பிரசாரம் எண்டால், அந்தப் பிரசாரம் செய்து வெற்றி பெற்ற அரசாங்கத்தைத் தானே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்து முண்டு கொடுக்குது.

**விதானையார்:** பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின்ர அரசாங்கத்தை ஆதரிப்பதாக இருந்தால் ஏற்கனவே தேர்தல் விஞ்ஞாபனத்தில குறிப்பிடப்பட்ட வடக்கு கிழக்கில ஆயிரம் விகாரை அமைப்பது என்ற விடயத்தை வாபஸ் பெறவேண்டுமென்று மாவை. எம்.பி. கேட்டவரோ.

ஏதோ அவரின்ர தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் தங்களுக்கும் தொடர்பில்லாத மாதிரி மாவை. எம்.பி. பதிலளிக்கிறார். 'இது எந்த வகையில நியாயமானது.

**வாத்தியார்:** சரி..சரி எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி தமிழ்மக்கள் பேரவையின்ர ஏற்பாட்டில வடக்குக் கிழக்கு தழுவியதாக பொது அமைப்புகள் சேர்ந்து யாழ்ப்பாணத்தில நடத்துகிற மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில எல்லாரும் கலந்துகொள்ளவேணும். எங்கட அயலவர்கள் உறவினர்களுக்குச் சொல்லி முன்னெப்போதும் இல்லாதவாறு இலட்சக்கணக்கில தமிழ் மக்கள் அணிதிரளவேணும்.

**பண்டிதர்:** உண்மைதான். தமிழ்மக்களின்ர பெரெழுச்சி ஒன்றுதான் எங்கட இனத்தின்ர இருப்பையும் உரிமையையும் வலிமைப்படுத்தும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




# வாக்குறுதிகளை நம்பி நம்பி சிறைக் கம்பிக்குள் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது?

இலங்கையிலே உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்த காலம் முடிவடைந்த பின்னரும் கூட அந்த யுத்தத்தின் பால் கைது செய்யப்பட்ட அல்லது சோடிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்பது இன்றுவரை ஒரு கற்பனைப் பெருவெளியாகவும், பகல் கனவாகவும் காணப்படுவது வேதனைக்குரியது.

இந்த அரசியல் கைதிகளுக்குரிய விடுதலைக்காக அவர்களுடைய உறவினர்களும் அவர்களும் என்று தொடர்ச்சியாக நடைபெற்று வருகிற போராட்டங்களில் தோற்றுப் போவது என்னவோ அவர்கள் தான் !!!

இது தொடர்கதையாக நிகழ்ந்து வருவது இன்னும் வேதனைக்குரியது. அரசியல் கைதிகள் தங்களுடைய விடுதலையை வேண்டி சிறைகளிலேயே உண்ணாவிரதம் இருப்பதும் பின்னர் ஏதோ ஒரு வாக்குறுதியை நம்பி பற்றிப் பிடித்துக் கொண்டு அந்த உண்ணாவிரதத்தை கலைவதும் ஆக இந்த உண்ணாவிரதப் படலமும் நீண்டு செல்வதில் சேர்ந்து நீண்டு செல்வது அரசியல் கைதிகளின் சிறைவாசமும் அவர்களுடைய விடுதலை கனவுமே.

அரசியல் கைதிகளின் பக்கங்களை புரட்டிப் பார்க்கிற போது தமிழர் தம் விடுதலை போராட்டங்களிலேயே தொடர்புடையவர்கள் மற்றும் தொடர்புடைய தாக சோடிக்கப்பட்ட அவர்களின் பல் வேறுபட்ட வகையினர் கைது செய்யப்பட்டு சிலருக்கு வழக்குகளும் சிலருக்கு வழக்குகள் இல்லாமலும் தடுத்து வைக்கப்பட்டு இருப்பது உண்மையிலேயே தமிழினத்தின் சாபக்கேடாகும்.

தங்களது விடுதலைக்காக தாங்களே உணவை தவிர்த்து எத்தனையோ தடவைகள் உண்ணாவிரதங்களை மேற்கொண்ட போதிலும் எந்தவித பலனும் இல்லாமல் வாக்குறுதிகளை நம்பி நம்பி இன்றுவரை சிறைக்கம்பிக்குள் கிடந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தனை உறவுகளையும் அவர்களுடைய நிலைகளையும் பார்க்கும் போது ஒரு முறை உயிர்நாடி சிலிர்த்து தான் போகிறது. இதுவரை பெற்ற கணக்கெடுப்புக்களின் படி 94 தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் வாடி வருகின்றார்கள்.

அதிலே 36 அரசியல் கைதிகள் தண்டனை பெற்று அதிலும் மேன்முறையீடு செய்ய முடியாத அளவிற்கு தண்டனை பெற்றுள்ளார்கள். 14 அரசியல் கைதிகள் தண்டனை பெற்றதுடன் மேல்முறையீட்டுக்கு அங்கீகாரம் பெற்றவர்களாக மேல்முறையீட்டுக்காக காத்திருக்கிறார்கள்.

## இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய ஜே.வி.பி. போராளிகளை மன்னிக்கலாமெனின் தமிழ் அரசியல் கைதிகளை மன்னிக்க முடியாதது ஏன்?

அத்தோடு 39 அரசியல் கைதிகள் high Court எனப்படுகிற உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்குட்பட்டு வருகிறார்கள். 5 அரசியல் கைதிகள் Magestic Court எனப்படுகிற நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்குட்பட்டு வருகிறார்கள்.

இவ்வாறு மொத்தமாக 94 தமிழ் அரசியல் கைதிகள் இன்றும் சிறைகளில் வாடி வதங்கி தங்கள் கனவுகளை தொலைத்து விட்டு சிறைவாசம் புரிகிற அந்த உறவுகளின் கண்ணீரை காணாதவர்கள் தான் அதிகம். அவர்களுடைய சோகக் கதைகளை கேட்காதவர்கள் தான் அதிகம்.

தனது மனைவியின் இறுதிக் கிரியைகளை நடத்துவதற்காக வெளியே வர அனுமதிக்கப்பட்ட அரசியல் கைதி ஆனந்த சுதாகரனினுடைய விடிவுக்காக பலர் குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அவருடைய குழந்தைகளுடைய நிலைமையைப் பார்த்து அவர் விடுதலை செய்யப்படுவாரென வாக்குறுதியளிக்கப்பட்டது.

அந்த மகோன்னத வாக்களித்த நபரை தமிழ் மக்கள் இப்போதும் தேடி வருகின்றனர். அவருடைய வாக் குறுதியையும் தேடுகிறார்கள், இதுதான் அவர்கள் என்றும், இதுதான் அவர்கள் குணமென்றும் உணர்த்துகிறார்கள்.

அரசியல் கைதிகளுக்குரிய விடுதலைக்கான சிறுசிறு மக்கள் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், உணவு தவிர்ப்பு போராட்டங்கள் என்று ஆங்காங்கே அடிக்கடி மழை காலத்தில் முளைக்கும் காளான்கள் போல சில சில போராட்டங்கள் வந்து போகின்றன. பின்னர் அப்படியே மறைந்து போகின்றது. பின்னர் அவற்றை மக்களும் அவர்களும் அப்படியே மறந்து விடுகிறார்கள்.

உண்மையிலேயே இதற்கு அரசியல் கைதிகளுடைய பங்கையும் தாண்டி அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் தங்கள் பங்குகளை வெளிப்படுத்த வேண்டும்.

இது ஒரு மக்கள் போராட்டமாக அவர்களுடைய விடிவுக்கான மக்களுடைய சக்தியை ஒன்று திரட்டி காட்டுவதன் மூலமே அரசியல் கைதிகள் என்று அந்த போர்வையில் இருக்கும் கைதிகளை அரசியல் ரீதியான விடுதலைக்கு தூண்ட முடியும்.

இது சட்ட ரீதியாக ஆராய்ந்து பார்க்கும் விடயமல்ல. ஜனாதிபதியுடைய பொது மன்னிப்பு என்ற போர்வையில் வழங்கப்படவேண்டிய விடுதலை. அன்று இலங்கை அரசுக்கெதிராக் ஆயுதம் தூக்கிய ஜே.வி.பி. போராளிகளை பொது மன்னிப்பில் விடுவிக்க முடியும் என்றால் யுத்தம் முடிந்து ஒரு தசாப்தம் முடிந்த பின்னரும் நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டிருக்கிற இந்த இலங்கை அரசாங்கத்தினால் இன்னும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் ஏன் விடுவிக்கப்படவில்லை என்ற வினா மேலெழுந்தவாரியாக வருவது யதார்த்தமே.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று துடிக்கும் அரசு நல்லிணக்க சமிக்ஞையாக இந்த அரசியல் கைதிகளை விடுவிக்க ஏன் பின்னிற்கிறது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

அரசியல் கைதிகளின் விபரங்கள் அடங்கிய வழக்கு, வழக்குகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுடைய விபரங்கள் என்பனவற்றோடு அவர்களுடைய விடுதலையை வேண்டி அண்மையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம்.கே சிவாஜிலிங்கம் ஆனந்த சுதாகரனை விடுவிப்பேன் என்று வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

இவ்வாறானவர்கள் தான் மறைமுகமாகவோ, நேரடியாகவோ அரசியல் கைதிகளின் விடுதலை போராட்டத்திற்கு அடிக்கடி குரல் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள்.

ஆகவே ஒட்டுமொத்த தமிழ் பிரதிநிதிகளும் இவர்களுக்காக ஒன்று சேர வேண்டும். யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்த காலம் முடிவடைந்த பின்னர் கூட அவர்கள் சிறைகளில் வாடி வதங்குவதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத வேதனையான விடயம்.

ஆகவே இதை அரசியல் கைதிகளினுடைய, அவர்களின் உறவினர்களுடைய போராட்டமாக மட்டும் கருதிவிடாது ஒட்டுமொத்த தமிழ் மக்களும், தமிழ்த் தரப்புகளும் தமிழ் பிரதிநிதிகளும் தமிழ் புத்திஜீவிகளும் ஒரு நேர்கோட்டில் இருந்து அவர்களுக்கு விடுதலை வேண்டித் தரவேண்டும்.

அவர்களுடைய விடுதலையை, அவர்களுடைய சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களுடைய பெயரிலே இருப்பது போல அரசியல் கைதிகள் அதாவது அரசியலின் பால் கைது செய்யப்பட்டவர்களை அரசியல் ரீதியாக விடுவிப்பது பற்றிச்சிந்திக்க வேண்டுமே ஒழிய நீதித்துறை சம்பந்தமாக சட்டதிட்டங்களுக்கு ஒழுக விடுவிப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதால் எந்த விதப் பயனும் கிடையாது.

அவர்களின் விடுதலைக்காக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஒரு மக்கள் போராட்டமாக முன்னெடுக்கின்ற பொழுதுதான் அவர்களுடைய விடுதலை வெகு சீக்கிரமாக ஏற்படுத்தப்படும் என்பது உண்மை.

**மதுசுதன்**

# மனமே விழித்தெழு

ஆசை என்பது மனதின் எழுச்சி. ஆனால் அது எப்படிப்பட்டது என்பது முக்கியம். இராவணன் மாவீரன் தான் என்றாலும் அவனுக்கு வந்த ஆசை நியாய மானதா? மனைவி மண்டோதரி, தம்பி விபீஷனன் எனப் பலரும் புத்தி சொல்லியும் அவனது மனம் விழித்தெழவில்லையே. மனம் விழித்தெழுந்தால் மட்டுமே எது நியாயமான ஆசை, எது பேராசை என்ற தெளிவு கிடைக்கும்.

நியாயமான ஆசைகள் நிறைவேறத் தேவையான உடல், மனவலிமையை தரும்படி கடவுளிடம் வேண்டி னால் நிச்சியம் நிறைவேறும். எனக்கு மனம் போன படியெல்லாம் கிடைக்கும்படி இறைவனைக் கேட்காமல் நல்ல புத்தியைக் கொடு என வழிபடுவது சாலச் சிறந் தது. இறையருள் இருந்தால் தான் எதுவும் நடக்கும். இல்லையேல் முயற்சி வீணாகும். இந்நிலையில் ஒரு சம்பவம் நினைவு வருகின்றது. ஒரு வண்டு கண்ணாடி ஜன்னலில் முட்டியபடி வெளியே செல்ல முயன்றது. என்னதான் முயன்றாலும் கதவுகள் மூடியிருப்பதால் வெளியே எசல்ல முடியவில்லை. ஜன்னலுக்கு மேலே



கேபிள் வயருடன் பெரிய துவாரம் இருந்தும் அதன் வழியாகச் செல்லலாம் என்பது வண்டுக்குத் தெரியவி ல்லை.

மனிதர்கள் இந்த வண்டுபோல இருக்கிறார்கள். ஒன்றை அடைய முயற்சித்தும் வெற்றி பெறுவதில்லை. நமக்கும் நியாயமான ஆசைகளுக்கும் இடையில் நிற்பது எது என்பதை அறிந்து அணுகுமுறையை மாற்றாவிட்டால் என்ன ஆகும் என்பதை பாரதியார் கவிதையில் காணலாம்.

“எண்ணிலா நோயுடையார் இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள் போல் பிறர்
காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள் பத்து
நாலாயிரங் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்”

நமக்கும் விலங்குகளுக்கும் முக்கிய வேறுபாடு உண்டு. இருவரும் ஆசைப்பட்டாலும் செய்யக்கூடியது, செய்யக்கூடாதது எனப் பகுத்தறிவு மனிதர்களுக்கு உண்டு. ஆனால் விலங்குகளுக்கு கிடையாது. விவேக சூடாமணியில் ஆதிசங்கர் அழகான உவமையால் இதை விளக்குகின்றார்.

நீரில் வாழும் மீன் எதிரில் இருந்த இரைக்கு ஆசைப் பட்டு தூண்டிலில் சிக்குகின்றது. மீனுக்கு நாவால் அழிவு-விட்டில் பூச்சிக்கு தீயில் வரும் ஒளியைப் பார்த்தவுடன் அதில் விழுந்து மாய்கின்றது. இதற்கு கண்களால் அழிவு. சப்தம் கேட்டு கானகத்தில் ஓடும் மான்கள் வேடன் வலையில் அகப்படுகின்றது. இதற்கு காதால் அழிவு. புலன்களில் ஏதோ ஒன்றினால் இந்த உயிரினங்கள் அழிகின்றன. பகுத்தறிவை இழந்த மனிதனோ ஐம்பு லன்களால் அழிகின்றான். விழித்தெழுந்த மனிதனால் மட்டுமே ஆசைகளை வெல்ல முடியும்.

-சிவனடியான்-






பெண்: இலையை மடிக்க வேண்டாம்.

விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க?

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத்தான்.

விருந்தினர்: ஐயோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?

பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?

விருந்தினர்: ???



கே.அக்ஷிதா, தரம் 1
சண்டிக்குளி மகளிர் கல்லூரி.

## யார் ஏழை?



ஒரு பணக்கார அப்பா, அவர் குழந்தைகளுக்கு ஏழைகள் எல்லாம் எப்படி இருப்பாங்கன்னு காமிக்கிற துக்காக ஒரு கிராமத்துக்குக் கூட்டிட்டுப் போனார். இரண்டு நாள் அந்தக் குடிசையில ஏழை விவசாயிகள் கூட இருந்தாங்க.

திரும்ப வரும் போது, அப்பா கேட்டார், ஏழை எப்படி இருக்காங்கன்னு பார்த்தியா?... இப்ப என்ன சொல்றே?

மகன் சொன்னான் “ஆமா..அப்பா..என் கிட்ட ஒரு நாய்க்குட்டி தான் இருக்கு. ஆனா அவங்க கிட்ட நாலு இருக்கு...நம்ம வீட்ல ஸ்விம்மிங் பூல் கார்டன்ல நடுவுல இருக்கு...ஆனா அவங்க வீட்டுப் பக்கத்தில அழகான ஆறு ஓடுது... நாம கலர் கலரா லைட் போட்டு, படங்கள் மாட்டி நம்ம வீட்டை அழகுபடுத்தறோம்... ஆனா அவங்க வீட்டில ரெயின்போ அழகுபடுத்துது...நம்ம சுவரோட நம்ம வீட்டு எல்லை முடிஞ்சுடுது ...ஆனா அவங்களுக்கு கண்ணுக்கு எட்டின தூரம் வரை அவங்க எல்லை.. நாம காசு குடுத்து அரிசி வாங்குறோம்..ஆனா இவங்க நம்ம கிட்ட அதை விக்கறாங்க.. நம்மள பாதுகாக்கிறதுக்கு நம்மள சுத்தி சுவர் மட்டும் தான் இருக்கு...ஆனா இவங்க பாதுகாப்புக்கு நண்பர்கள் இருக்காங்க..

அப்பா!..நாம எவ்வளவு ஏழைனு புரிய வைச்சதுக்கு நன்றி அப்பா”னு சொன்னான்.

அவங்க அப்பா வாயடைச்சே போயிட்டார். அவருக்கும் இப்ப நிறைய விடயாங்கள் புரிஞ்சது.

## தத்துவங்கள்

- தவறே செய்யாத மனிதன் இல்லை,தவறை திருத்திக் கொள்ளாதவன் மனிதனே இல்லை.
- வாழ்க்கை எளிதாகிவிடும். மன்னிப்பை கேட்பதற்கும் கொடுப்பதற்கும் நாம் கற்றுக்கொண்டால்.
- அறிவாளிகளுக்கு அறிவு அதிகம், ஆனால் முட்டாள்களுக்கு அனுபவம் அதிகம்.
- தலைகுனிந்து என்னைப் பார், தலைநிமிர்ந்து உன்னை நடக்க வைக்கிறேன். -புத்தகம்.
- இருளைத் தூற்றுவதற்குப் பதில் அகலை ஏற்றுங்கள்.
- பழைமையைப்பற்றிஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.
- வாழப் பொருள் வேண்டும், வாழ்வதிலும்பொருள் வேண்டும்.
- பணத்தின் உண்மையான மதிப்புபிறரிடம் கடன் கேட்கும்போது தான் தெரியும்.
- சிக்கனமாக வாழும் ஏழை சீக்கிரமாக செல்வந்தனாவான்.
- இதயத்தால்காதல்கொள், கண்களால் அல்ல.










## பிக்போஸ் வீடு எப்படி போகிறது வியாசரே?

**தேவா — வல்வெட்டித்துறை**

**நிலையில்லாத மனித வாழ்வில் மனிதன் நீ பெரிது நான் பெரிது என்று அலைகிறானே?**

எரித்தால் ஒரு பிடி சாம்பல், புதைத்தால் மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகும் உடலையும் நிலையில்லாத உயிரையும் வைத்துக் கொண்டு மனிதன் ஆடுகிற ஆட்டம் இருக்கிறதே அப்பப்பா சொல்லி மாளாது.

இனம், மொழி, சாதி, மதம் என தன்னைத்தானே கன்னைப் பிரித்து அழகுபார்க்கிறான். இதில் என்ன வேடிக்கை என்றால் ஏதோ இந்த உலகின் வல்லரசு நாம்தான் என்று போட்டி போட்டு மனித இனத்தை அழிக்கும் அணுசக்தியை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள்.

தென் -வட துருவங்களில் பனிப்பாறைகள் சடுதியாக உருக ஆரம்பித்து விட்டன. 2100 இல் துருவ பனிப்பாறைகள் முழுவதுமாக உருகி விடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அப்படி நடக்குமாயின் உலக அழுவு என்பது உண்மை.

**கலா — யாழ்ப்பாணம்**

**போதை எல்லை மீறிவிட்டது போலத் தோன்றுகிறதே?**

அதை உணர்ந்ததால் தான் என்னவோ ஜனாதிபதி போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு தூக்குத் தண்டனையை உறுதி செய்திருக்கிறார். ஆனாலும் அதற்கான எதிர்ப்புக்கள் அதிகரித்தே இருக்கிறது.

இப்போது கூட ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் வரும் கஞ்சா மீட்பைப் பார்க்கும் போது நாம் எங்கே போகிறோம் என எண்ணத் தோன்றுகிறது.

ஒவ்வொரு நாளும் சராசரி 150 கிலோ கிராம் அளவில் அகப்படுகிறது என்றால் அகப்படாமல் செல்வது எவ்வளவு என்று எண்ணிப்பார்த்தால் நெஞ்சம் அடைக்கிறது எம் இனத்தின் எதிர்காலம் என்ன ஆகும் என்ற நினைப்பில்.

**யக்ஷி — யாழ்ப்பாணம்**

**பிக்போஸ் வீடு எப்படி போகிறது வியாசரே?**

நல்லாப் போன வீட்டை இரண்டாக்க வேண்டும் என்று பிக்போஸ் நினைத்திட்டார் போல. நேற்றைய நிலை பிரகண்டம் உச்சத்தை எட்டி விட்டது போலத் தெரிகிறது.

சேரன்- சரவணன் சண்டையில் சரவணனின் செயற்பாடுகள் முகம் சுழிக்க வைக்கின்றது.

நல்ல இயக்குநர், நடிகர் இப்படி வந்து அவமானப்படுவதைத் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

நம்ம ஊர் பொண்ணு- கவின் உறவைப் பார்க்கும் போது தான் பிக்போஸ் நிகழ்வு தயாரிக்கப்பட்ட நிகழ்வோ என எண்ணத் தோன்றுகிறது.

எது எப்படியோ சண்டை சச்சரவு, அதிகாரப் போட்டி, பொறாமை, காதல், மோதல் என்று பல்பரிமாற்றத்தில் பயணிக்கிறது பிக்போஸ் நிகழ்வு.

## உயிர்களை கொல்வது பஞ்சமா பாதகங்களில் ஒன்று. கோயில்களில் மிருக பலியிடுவது?

**பரமேஸ் — வதிரி**

**கூட்டமைப்பை வலம்புரி அதிகம் தாக்குகிறதே அப்படி அவர்கள் மீது வலம்புரிக்கு என்ன கோபம்?**

தமிழ் மக்கள் நலன் சார்ந்து யார் செயற்பட்டாலும் அவர்களைப் பாராட்டத் தயங்காது வலம்புரி. அதே போல தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுத்தர மறுத்து தமது சுயநலத்திற்காக செயற்படுகிறார்களோ அவர்களின் முகத்திரையைக் கிழித்துக் காட்ட தயங்காது வலம்புரி.

இல்லையேல் ''நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்'' என்ற மகுட வாசகத்தை வலம்புரி தனதாக்கி இருக்காது. இதைப் புரிந்து கொண்டால் சரி.

**ராகவன் — தொல்புரம்**

**உயிர்களை கொல்வது பஞ்சமா பாதகங்களில் ஒன்று. கோயில்களில் மிருக பலியிடுவது?**

அன்பைப் போதிக்கின்ற எமது மதத்தில் கடவுள்கள் அதிகமாய் ஆயுதங்களுடன் தான் இருக்கிறார்கள். அது மனிதர்க்கு தீங்கு செய்யும் அசுரர்களை அழிக்கவே ஒழிய அப்பாவி மிருகங்களை அல்ல என்பதை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி. இல்லையேல் அடுத்த பிறவியில் ஆடாய் பிறக்க வேண்டி வரும் கவனம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**யனுசன் — ஸ்கந்தபுரம்**

**நாட்டின் அடுத்த தலைவரை தமிழர்கள் தீர்மானிப்பார்களா?**

நாட்டின் தலைவரைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர்கள் இருந்தால் அது நல்லது தான்.

ஆனால் எம் தலைமையை நம்பி இவர்களின் தெரிவுக்கு வாக்களித்து இவர்களால் பட்டபாடு போதாதா? இன்னும் படவேண்டுமா என்று தமிழர் சலித்து விட்டார்.

தெரிவிப்பது நாம் தீர்மானிப்பது நீங்களே.

**தர்சன் — யாழ்ப்பாணம்**

**பொருளியல் நிபுணர்கள் அரசியலுக்கு வந்தால் எப்படி இருக்கும்?**

வரவேண்டும். வந்து எம் மக்களுக்கு நலன் சார்ந்த திட்டங்களைத் தரவேண்டும். வருவார்களா? தருவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## சந்தானத்தின் A1 படம் எப்படி?

**கலை — மிருசுவில்**

**சாணக்கிய அரசியல் என்பது எதுவோ?**

சாணக்கியம் என்பது வில்லில் நாண் ஏற்றப்படுகிறது, சரியாகக் குறிபார்க்கப்படுகிறது. ஐம்புலன்களையும் அடக்கி வைக்கப்பட்ட குறி நோக்கி நாண் பாய்கிறது. குறி தவறாத இந்த நாண் குறித்த குறியை தாக்காமல் அந்தக் குறியறிந்து சமயம் பார்த்து தவறுவது எதுவோ அதுவே சாணக்கியம்.

இதைப் புரியாத எம் தலைமை தமிழர் நலனை அடகுவைத்து தம் நலன் பார்க்கிறது. அதற்கு என்ன ஒரு எதிர்ப்பு வந்தாலும் கோடிக்கு விலைபோய் வாயை மூடி இருப்பது சாணக்கியம் என்றால், அதை தமிழர் சாணக்கியம் என ஏற்றால் தமிழர்களைப் போல் முட்டாள்கள் இங்கு வேறு யாரும் இருக்க முடியாது.

**சந்தானத்தின் A1 படம் எப்படி?**

சந்தானம் கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்த பின்னர் அவர் மிகவும் நிதானமாக படத்தேர்வைச் செய்கிறார்.

தனக்கு எது வருமோ அதை தெரிவு செய்து கலக்குகிறார். தற்போது வெளிவந்த A1 திரைப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதனால் நல்ல வசூல் கிடைத்திருக்கிறது. தமிழ் நாட்டின் முதன் நாள் வசூலே 3 கோடிகளைத் தாண்டிவிட்டது. சந்தானம் தான் நினைத்ததை நிறைவேற்றி விட்டார்.

**சுதன் — குப்பிளான்**

**அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு கொடுத்த கூட்டமைப்பு இப்போது கண்ணீர் வடிக்கிறதே?**

நாய்க்கு எங்கு அடித்தாலும் பின்னங்காலைத் தூக்குவது போல இலங்கையில் எங்கு அடி விழுந்தாலும் வடக்கு - கிழக்கு இறுக ஆரம்பிக்கும். அது புரியாமல் பயங்கரவாதக் குண்டுத் தாக்குதலுக்கு நடவடிக்கை வேண்டும் என அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். இப்போது அதை நீக்க வேண்டும் எனக் குரல் கொடுக்கிறார்கள் அவ்வளவுதான்.

**தயா — மந்துவில்**

**மனைவி எதற்கெடுத்தாலும் அழுகிறாளே என்ன செய்ய வியாசரே?**

அடிக்கும் மனைவியை விட அழும் மனைவி எவ்வளவோ பரவாயில்லை. உனக்கு வாய்த்தது போல் எனக்கு வாய்க்கவில்லையே. வாய்த்திருந்தால் இறைச்சி சாப்பிடும் அளவுக்கு இப்போது வாய்க்குள் பல் இருந்திருக்கும். சரி விடு அடிக்கும் மனைவி வாய்க்காமல் அழும் மனைவி வாய்த்திருக்கிறாள் என ஆனந்தப்பட்டுக் கொள். கடவுள் உன்னை இரட்சிப்பாராக.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**




## தனிமையில் ஓர் பெண்ணின் பயணம்

பிரியா காசிநாதன்

காரிருள் மேகம் போல்
நீண்டு படர்ந்திருந்த கூந்தலில்
அழகாய் செருகி இருந்த
சிவந்த ரோஜாவின்
இதழ்களுக்குள்

இன்னமும் எஞ்சியிருந்த
ஈரம் மின்னியது..
பகலவனும் தீண்ட அஞ்சும்
அவள் தேகம் போல்..

வேலை ஒன்றின்
அதீத ஆர்வத்தில்
இணைந்து விட
எண்ணிக் கொண்டு
வேட்கையுடன் ஏறி அமர்ந்தாள்..
வேறோர் உலகம் நோக்கி..

கூட்ட நெரிசலில்
சிக்கித் திணறி
நுழைந்த நொடியே
உற்று நோக்கினாள்..

வெறுமனே நால்வர்
அமர்ந்திருந்த
பேருந்தின் நிலை
புகைப்படமாய்
அவள் கண் முன்..

இதற்கா இத்தனை
இடிகளும் பிடிகளும்..
மருகி நின்றாள்
மான் விழியாள்..

ஜன்னலோரம் இருக்கை
ஒன்றில் இயல்பாய்
சரிந்து கொண்டாள்..

வேலையில் லயித்து
அதற்கான யோசனை
கொண்டு....

இரவின் பிடியில்
சிக்கி திணறும்
கனவுகளோடு உறக்கமும்..

உலகம் மறந்து கண் அயர்ந்தாள்
நிலவொளியில் நிலா மகளாய்...

தூக்கத்தில் கையருகே
சீண்டி பார்த்த கரப்பான் பூச்சி..

தட்டி விட்டும் தேடி வந்தது..
இம்முறை கால்களுக்கு..

தூக்கியெறிய முயன்று கண் திறந்து
தொட்டுணர்ந்து திடுக்கிட்டாள்..
ஊர்ந்தது கரப்பான் அல்ல..

அதிலும் கேவலமாய் ஆறறிவு கொண்ட
காமுகன் ஒருவனின் விரல்கள்..

பொங்கி எழுந்தாள் தென்றலாய் பொறுக்க
முடியவில்லை இப்போது சூறாவளியாய்...

பின் இருக்கையில் பல்லிளித்து
கண் அடித்தான்.. அந்த அதே அரக்கன்..

பொளேரென விழுந்தது..
பல் இரண்டு தெறித்தது..
அறைந்தே விட்டாள் அவசரமாக...
நீதி நிலை நாட்ட கொஞ்சம்
பத்ர காளியாய்..

அஷ்ட கோணலில் திரும்பியது..
அறை கொண்ட அவன் முகம்..

நீல இரவு பிரதிபலிக்கும்
தார் சாலையின் ஊடே

அசுர வேகத்தில்
பயணித்து கொண்டிருக்கும்
சொகுசு பேருந்தின்
சில இருக்கைகளில்

இன்றும் பயணிக்கிறாள்
இதே போல் ஒரு மங்கை..
மானம் காத்து கொள்ள
வீரத்தை நெஞ்சில் ஊற்றியபடி..

### எனது புளியும் பூக்கும்

பட்டுத் தாவணி கட்டி வந்து
பூட்டுக்காப்பும் அடுக்கிவிட்டு
கோப்புடன் நின்றிருந்தால்
காட்டி இருப்பாள் உறவென்று

ஒற்றை இரத்தம் பாய்ச்சி
உயிர்த்த உறவில்
உதிரம் என்று சொல்லக்கூட
உரிமை இழந்தவளாய்...

கசக்கி, கசக்கி
கட்டிவந்த ஆடையில்தான்
ஓட்டை உள்ளத்தில் அல்ல.

குடிசைக்கு அரசியாய்
மரணித்துக்கொண்டிருக்கும்
எனதிருப்பில் அரண்மனைக்கான
அத்திவாரம் போடப்படுகிறது

ஏனெனில் காலச் சுழற்சியில்
நாணயத்தின் நல்ல பக்கம் நம்பக்கமே

முதுகுகாட்டி கைவிரித்து
கறுப்பு சாமரம் வீசிய இதயங்கள்
எனக்காய் துடிக்கையில்

உறவென்று சொல்லிச் சொல்லி
பந்த பசி தீர்க்க எனது புளியும்
ஒருநாள் பூக்கும்

கொற்றையூர் சிவசிவகுமார்

## பனை எம் உயிர்

பனை என்னைத் தழுவித்
தொழில் புரிய யாருளரோ?

என் உச்சி முகர்ந்து சுவை நீர் பெற்று
ஏற்றம்மிகு தொழிற்சாலை அமைத்து
பக்குவமாய் சீனி, வெல்லம், பாகு, கற்கண்டு
பதப்படுத்தி பாரிலுள்ளோருக்கு வழங்க யாருளரோ?

என் உச்சி முகர்ந்து ஓலை வெட்டி
ஈர்க்கு மட்டையுடன் மங்கையரும் மற்றவரும்
இட்டமுடன் கைப்பணித் தொழில்புரிய
கால்நடைக்கு உணவு வழங்க யாருளரோ?

என் உச்சியிலிருந்து நில மங்கையை
முத்தமிடும் பனம்பழத்தைப் பொறுக்கி
சத்தான களி சேர்த்து பதப்படுத்தி
பனாட்டாய் பனம் பானமாய் வழங்க யாருளரோ?

பனம்பழ விதையினை பாத்தியாக்கி
பனங்கிழங்கு, ஒடியல், புளுக்கொடியலாய்
பல்லிலாதோர் சுவைக்க துவையலாய் மாவாய்
ஊட்டமிகு ஒடியல் கூழாய் வழங்க யாருளரோ?

வீழும் விதைகளை பண்ணையாக்கி
வாழும் மக்களுக்கும் சந்ததிக்கும்
சூழலுக்கும் சுற்றியுள்ள உயிர்களுக்கும்
பராமரித்து பாதுகாத்து வழங்க யாருளரோ?

உயர்ந்த என்னில் உராய்வுள்ள என்னில்
கிளையற்ற என்னில் ஏறுதல் கடினம்
வல்லவர்கள் வல்லுநர்கள் துணிவுள்ளவர்கள்
வருவீரா? என் பயன்பெற்று வழங்குவீரா?

கீழ்கரவை த.பவானி

## கோமாதா

கோதூளி நேரமெனக்
குறித்திடும் நன்நேரங்களில்

வீதியெங்கும் காற்றிலே
கோதூளி பரந்திடவே

வீதிச்சுவர்களிலே
வெளியே பசுமை காட்டிடும்

பச்சிலை கண்டு பசுக்களுமே
எட்டிப் பிடித்து உண்டிட

வீட்டுக்காரர் கண்டதுமே
மேய்ப்பான் பசுக்கள்

யாவற்றையும் ஏசித்துரத்தி
பசுக்கள் தங்கும் இடங்களை

பலவாறாகத் தகர்த்திடவே
பாவம் பசுக்கள் கன்றுகள்

பட்டறை செல்ல முடியாது
பரந்து அலைந்து திரிந்தபடி

பாதை ஓரம் படுத்திடவும்
பார்ப்போர் ஒரு சிலர் துரத்திடவும்

பரிதாபப்படுவோர் உதவிடவும்
உடைமைக்காரர் விடிந்ததுமே

ஊர்தெருவெல்லாம் ஓடியாடி
பசுவைக் கன்றதைச் சேர்த்துவைக்க

பட்டிடும் துன்பங்கள் பலவாகும்
பசுவும் கன்றும் ஒன்றாகி

அம்மா! அம்மா! என்றதுமே
அதுகேட்போர் உள்ளம் நலம்பெறுமே

நிர்வைமணி

## மௌனத்தின் தேடல்- 458



### தாகம் தீர்ப்பவர் யார்?

கோடை வெயிலின்
கடும் வெப்பம் தாங்காது
நீரோடைகள் வற்றிப் போக
குடிப்பதற்கு நீருமின்றி
எடுப்பதற்கு ஆளுமின்றி
தாகத்தால் தவித்த சிறுவன்
தன் கையே தனக்குதவி என
நீரெடுக்கக் குடமெடுத்து
நீர் தேடி ஓடுகிறான்
தாகத்தால்
அவனுக்கேற்படும்
சோகத்தை யார் நீக்குவார்?

துரை, தென்மட்டுவில்

### வென்று பார்ப்போம்

எம் தேசத்தின் விடியலுக்காய்
விளை நிலங்களை இழந்தோம்
எம் இனங்களின் விடுதலைக்காய்
குடிநிலங்களையும் இழந்தோம்
இன்று இழப்பதற்கு
இந்த வரண்ட மண்ணைவிட
வேறென்ன உள்ளது உன்னிடம்?
வா மானிடனே இதையாவது
வென்று பார்ப்போம்

அ.வசந்தன், அல்வாய்

### வாட்டும் வரட்சி

இன்று நம்நாட்டை
வாட்டும் வரட்சியால்
தண்ணீருக்குக் குடத்துடன்
அலைந்து திரியும் மனிதா
வீதியெங்கும் இருக்கும்
மரங்களை தறித்துவிட்டு
இன்று நீ அனுபவிக்கிறாய்
மழையின்றி வரட்சியை...
இனியாவது நீ திருந்தாயோ
நம் வீதிக்கொரு மரம் நடுவாயோ?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

### ஈராறு தினங்களில்

நீரே அருந்தாமல் நிர்மலமாய்
நிலவுலகே இரங்கி எழ
பாரை உலுப்பி பார் தமிழன்
பட்டுணரும் தமிழ்ப் பற்றை
பறைசாற்றி திலீபனெம் மறவன்
சொட்டும் நீர் அருந்தாமல்
ஈராறு தினங்களிலே
இலக்கு அடைந்தான்
தீர்வு கண்டான் நீரின் வலிமை

கந்தன் மைந்தன்
காவலூர்

### நீர் தேடல்

பெரும் செலவில் செம்மை வாய்ந்த
செவ்வாயுடன் நிற்காமல்
மென்மேலும் தாண்டி
உயிரினங்கள் வசிக்க
உகந்த காற்றும் நீரும்
நிறைந்த கிரகங்கள்
தேடல் ஒருபுறம்
செம்மைகளாயிங்கு
இயற்கையை பகைப்பதால்
மழை வீழ்ச்சிக் குறைவால்
நீர் தேடல் மறுபுறமும்
நித்தமும் நடக்கின்றது

க.நாகராசா, நுணாவில்

### காய்ந்து விட்ட தரையில் நீரா?

தம்பி! காய்ந்து
வெடித்துப் போன தரைதனில்
நீர் தேடுகிறாயா?
வெகுதூரம் ஓடிச்சென்றாலும்
நீ களைத்து விடுவாய்
அங்கேயும் நீரின்றி
உன் நாவும் உடலும்
வரண்டு வற்றி களைப்பாய்
உயிர் மாய்க்கவா போகின்றாய்?
இப்படியும் ஓர் ஏக்கமடா
எங்களுக்கு நீர் இன்றி
அமையாது உலகு என்றார்கள்
வருண பகவானே உங்கள்
செவிக்குக் கிட்டவில்லையா?
எங்கள் அலறல்

அபிகுலமாலிகா
சங்கானை

## மௌனத்தின் தேடல் -459



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

### நெஞ்சமெலாம் பிளந்திருக்கு

நிலமா வெடித்திருக்கு
நெஞ்சமெலாம் பிளந்திருக்கு
நலமான நம் பூமித்தாயின்
நல்வளம் காத்த நீரே
பலமென்று நினையா பகுத்தறிவு
பெற்றிருந்தும் உணரா மனிதமே
நிலமடந்தை வரண்டு உடல்
நீரின்றிக் கிடந்தால் உயிர் ஏது?

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

### தெப்பமாய் மிதக்கும்

வெப்பப்படுத்தின விரிவாய்
விரும்பிக் குளிர்த்தினும் விரிவாய்
எப்பவும் இவ்வியல்பு வேறெந்த
இயற்கைக்கும் எட்டாத பொக்கிஷம்
தப்பும் குளிர் பிரதேச நீர் உயிர்கள்
தெப்பமாய் மிதக்கும் பனிக்கட்டி
அப்புவாய் ஆத்தாளாய் அரவணைக்கும்
அருஞ்செல்வம் நீர் தேடிப் போவதுவோ?

வைகதன், கொக்குவில்

### மனிதன் கடமை

அணுக்களைப் படைக்கும் போதே
அனைத்து இயங்கியல் விதிகளையும்,
வைத்தவன் இறைவன்! அவன்
தான் வைத்த விதிகளையே
மீறுவதில்லை
இயற்கையை பாதுகாப்பது
மனிதன் கடமை
பாதுகாக்காவிட்டால் அதுவே
எம் தலைவிதியாகும்
பாலைவனமாக அல்ல
வேற்றுக்கிரகமாகும்

இ.ஜெ.பாலன்

### சிந்தனை செய்வீர்களோ?

வானுயர்ந்து நிற்கும்
மரக்காடுகளை அழிக்கும்
வீணர் கூட்டங்களே
கையில் குடம் ஏந்தி
தண்ணீரைத் தேடி ஓடும் சிறுவனின்
நிலைமை கண்டீர்களோ?
நாளை நமக்கும் இந்த நிலை வரலாம்
என்று சிந்தனை செய்வீர்களோ?

க.பிரநிதன், மட்டுவில்

முகாமையாளர் உங்களை ஒரு தடவை தனதறைக்கு வருமாறு கூறுகிறார் அம்மா எனக் காரியாலய ஊழியர் சொல்லிப் போனதும் பதற்றமாகவும் பயமாகவும் இருந்தது. வேலையிலும் வேலை நேரத்திலும் மிகக் கண்டிப்பானவர். நான் வேலை நேரத்திற்கு வந்துவிட்டேன். வேலையில்தான் ஏதாவது பிழைகள் விட்டுள்ளேனோ எனப் பதற்றப்பட்டுக்கொண்டு எழுந்தேன்.

போக்குவரத்து நெருக்கடியாலோ வாகனம் பழுதடைந்து காலம் பிந்தித்தான் வந்த போதிலென்றாலும் அலுவலர்களின் வணக்கத்தை ஏற்றுக்கொள்ளும் அதே நேரம் தனது வருகை தாமதமானதற்குக் காரணம் கூறி மன்னிப்புக் கேட்பவர். ஆதலால் ஊழியர்கள் அனைவரும் நேரத்துக்கு வருவதுடன் வேலைகளையும் மிக நேர்த்தியாகவே செய்யவும் பழகி விட்டோம்.

இன்று ஏன் என்னைக் கூப்பிடுகிறார் என்ற குழப்பத்துடன் உள்ளே வரலாமா? ஐயா எனக் கேட்டு உள்நுழைந்தேன். இருங்கோ அம்மா என்றார். பரவாயில்லை நான் நிற்கிறேன். நீங்கள் கூறுங்கள் ஐயா.

உங்கள் கணவர். உங்களது சம்பளப் பட்டியலையும் எவ்வளவு முற்பணம் எடுத்துள்ளீர்கள் என்றும் அதற்கான பிடிமானங்கள் போக மிகுதி எவ்வளவு என்ற விபரங்களையும் தருமாறு கேட்டு எழுதியிருக்கிறார். அனுப்பிவிடவா என்றார்.

அந்தளவுக்குப் போய்விட்டார்களா? என அதிர்ச்சியடைந்தாலும். இல்லை ஐயா வங்கியில் கடனெடுக்க விண்ணப்பித்திருந்தோம். அதற்கு ஆவணமாக இணைக்க வேண்டியிருக்கும் அதுதான்...

அப்படியேயிருந்தாலும் உங்களிடம் கூறி எடுத்திருக்கலாம்தானே. ஏன் கடிதம் அனுப்புகிறார்? வீட்டில் ஏதாவது பிரச்சினையா? இல்லை ஐயா. அப்படியொன்றும் இல்லை. நாங்கள் சந்தோசமாகவே இருக்கிறோம்.

இந்தக் கதிரையிலிருந்தபடி ஒரு நாளைக் குள் குறைந்தது ஆயிரம் வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் எனக்கு அவரவர் உணர்வுகளை அளவிடத் தெரியாது என்று நினைக்கிறீர்களா அம்மா?


அப்படி எதுவும் இல்லை. என்னிடமும் இரண்டு மூன்று தடவைகள் கூறினவர். நான் மறந்துவிட்டுப் போவதால் கடிதம் எழுதியிருக்கக்கூடும் என்று கூறிவிட்டு வெளியே வந்தேன்.

அடக்கமுடியாத கோபமும் வெறுப்பும் கூடவே ஆத்திரமாகவும் இருந்தது. பெண் ஆத்திரப்பட்டால் அழுதுதானே அடங்க முடியும். வேறென்ன செய்யமுடியும்? என்ன பிரச்சினையடி? என்னுடன் பங்கிட முடியாதளவுக்கு அந்தரங்கமானதா? என்றாள் நண்பி.

ஒரு அந்தரங்கமுமில்லை. எல்லாப் பெண்களுக்கும் திருமணத்திற்குப் பின்னர் ஏற்படுகின்ற பிரச்சினைகள்தான். அன்பான கணவரும் ஆதரவான குடும்பமும் கிடைத்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும். எனது தலையெழுத்து இப்படியாகிவிட்டது. சந்தோசமாக வாழவிடாவிட்டாலும் பரவாயில்லை. அழவைத்துப் பார்க்கிறார்களே.

என்ன நடந்தது என்று சொல்லடி? எனக்குச் சீதனமாகத் தந்த நகைகள் இணங்கியவாறில்லாமல் இரண்டரைப் பவுண் குறைந்ததெனவும் ஏமாற்றிக் கல்யாணம் செய்துவிட்டார்கள் எனவும் திட்டிய எனது மாமியார் எனது அப்பா அம்மாவைப் பழி சொன்னார். நாங்கள் ஒன்றும் ஏமாற்றவில்லை.

எனது திருமணச் செலவுகளுக்காக லண்டனில் இருக்கும் எனது தம்பி ஏமம் சாமமென்றும் பனி குளிரென்றும் பாராமல் வேலைக்குப் போய் அனுப்பிய லண்டன் பவுண்ட்ஸ் பணமாற்றுப் பெறுமதி குறைந்துவிட்டதால் எதிர்பார்த்திருந்த தொகை வந்து சேரவில்லை. அதனால் பொருந்தியவாறு செய்யமுடியவில்லை. புரிந்துகொள்கிறார்கள் இல்லை.




# தெளிவுபெற்ற மதியினாள்

சென்ற சனிக்கிழமை அம்மா, அப்பா வாஞ்சையுடன் எங்களைப் பார்க்க வந்த போது கல்யாணமாகி ஒருவருடமாகியும் குழந்தை பெற்றுத் தருகிறாளில்லை. ஏதாவது குறைபாடு உண்டா? ஒன்றும் தங்குதில்லை எனக் கேட்டு வருத்தினார்கள்.

இப்ப இவர் எனது சம்பளம், முற்பணப் பிடிப்பனவு, கடனேதும் வைத்திருக்கிறேனா? அப்படியாயின் எக்காலத்தில் எடுத்தது போன்ற விபரங்களைத் தருமாறு முகாமையாளருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார். பெருத்த அவமானமாயிருக்குதடி. ஏதேதோ காரணங்களைக் கூறிச் சமாளித்து விட்டேன்.

இப்ப உனக்கு என்ன விளங்குது? புகுந்த வீட்டுத் தொல்லைகள் எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுவதைப் போலத்தான் உனக்கும் நிகழ்கின்றது. ஆனால் ஒன்றுமட்டும் நன்றாகப் புரிகின்றது. அவர்கள் உன்னைக் கண்டு அஞ்சுகிறார்கள். உனது உயர்கல்வித் தகைமை. மனோகரனைவிடக் கூடிய சம்பளம் தன்னை மிஞ்சி விடுமோ? என்ற அச்சத்தில் உனது சிறுசிறு குறைகளைப் பெரிதுபடுத்தி உன்னை அவமானப்படுத்தி அடக்கி வைக்க முயல்கின்றனர்.

இப்ப நீ என்ன செய்யலாமென்று நினைக்கிறாய்? இவர்களோடு வாழ முடியாதடி. விவாகரத்துப் பெறலாமென்றிருக்கிறேன். முட்டாளாடி நீ? விவாகரத் துப் பெற்றுவிட்டால் எல்லாம் சரியாகி விடுமா? இவர்களின் நச்சரிப்பு இல்லாமல் இருக்கலாம்.

இவர்கள் கட்டிவிடும் கதைகளும் குறைகளும் சமூகத்தில் இளம் பெண்ணொருத்தி விவாகரத்துப் பெற்று தனியே வாழ்கிறாள் என்றறிந்தால் ஆண் சமுதாயம் உன்னை எப்படிப் பார்க்கும், பாதிக்கும் எனவும் யோசிக்கமாட்டாயா? சரி சரி எல்லாம் பார்த்துக்கொள்ளலாம்.

வா முதலில் தேநீர் ஒன்று அருந்திவிட்டு வருவோம். இங்கே இருந்தால் இவ்வாறான எண்ணங்கள்தான் உன்னை வருத்தும் ஒரு மாறுதலாக இருக்கட்டும் வா எனக் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றாள்.

இன்று நான் அம்மா வீட்டை போகலாம் என்றிருக்கிறேன். இவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று பார்ப்போம். அதுதான் சரி. நீ அம்மா வீட்டை போ. இவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதற்கேற்ப முடிவுகள் எடுக்கலாம். சரியாக சம்பள நாட்களுக்கு 3 நாட்கள் முன்னராக மனோகரன் ஆதிரையைத் தேடி அவள் அம்மா வீட்டுக்கு வந்தான்.

வாருங்கோ மாப்பிள்ளை வாருங்கோ ஆதிரை இங்கே நிற்கிறாளா? நிற் கிறாள். தயவு செய்து உள்ளே வாருங்களேன். ஏனம்மா இரந்து கொண்டு நிற்கிறீர்கள். அவர் உள்ளே வரவிரும்பாவிட்டால் இங்கேயே கதைத்துவிட்டுப் போகட்டன்.

நீ சும்மாயிரடி. உனக்கொன்றும் தெரியாது. நீங்கள் உள்ளே வாருங்கள். அவர் வரமாட்டார் அம்மா. உள்ளே போகாதே வெளியில் நின்று கூட்டிவா என அவரது அம்மா கூறி அனுப்பியிருப்பார். அதுதான் தயங்குகிறார்.

சும்மா எல்லாம் தெரிந்த மாதிரிக் கதைக்காதையடி. நீ வரப்போறியா இல்லையா? எல்லாம் தெரிந்து தான் கதைக்கிறன். இந்த ஒருவருட வாழ்க்கையில் இதுகூட அறியாமலிருக்க நான் ஒன்றும் முட்டாளல்ல. நீ முட்டாளியில்லாவிட்டால் வீட்டை விட்டு வந்திருப்பியாடி?

எடி புடி என்ற கதை வேண்டாம். எனது வளர்ப்பில் எடா என்று கதைக்க முடியாமல் இருக்கிறன். யார் யாருக்கு மரியாதை கொடுக்கவேண்டும் எனக்கூறி என்னை வளர்த்திருக்கிறார்கள்.

நீ புறப்பட்டு வா. உடனே வீட்டை போகவேண்டும். நான் வரவில்லை. நீங்கள் போகலாம். எனக்கு எப்ப தோன்றுகிறதோ அப்போது வருவேன். இப்போ வராட்டி நீ எப்போதும் அங்கு வரவேண்டாம். மிச்சம் நல்லது. நான் அப்பா அம்மா வுடன் இருந்திடுறன். கல்யாணம் செய்து விட்டு அம்மா அப்பாவுடன் இருக்கப் போறன் என்கிறாய் உனக்கு மூளை இருக்காடி?

கல்யாணம் செய்த பின்னரும் உங்களுடைய அம்மா, அப்பா, சகோதரங்களுடன் உங்களால் சேர்ந்து வாழமுடியும் என்றால் என்னாலும் முடியும். பிள்ளை வாய்க்கு வாய் காட்டாத போ. போய் வெளிக்கிட்டு வா. அவருடன் போ.

உங்களுக்கொன்றும் தெரியாதம்மா. நான் வந்து இரண்டு கிழமைகள் ஆகின்றது. இவ்வளவு காலமும் என்னைத் தேடாதவர்கள் இறந்து விட்டேனோ?, இங்கேதான் வந்துள்ளேனோ? என்று கூட அறியாதவர்கள் இன்று வந்து அவசரப்படுத்துகிறார் என்றால் நாளை சம்பளம் தரும் நாள்.

அதை அப்படியே பிடுங்கி எடுக்க நான் அங்கிருந்தால்தானே வசதிப்படும். அது தான்... பெரிய சம்பளம் எடுக்கிறாள். அதற்குத்தான் நாங்கள் அலையுறம்.

பின்னை என்னுடைய ஒருவருட கால உழைப்பை நீங்கள்தானே அனுபவித்தனீர்கள். குறைந்து போன இரண்டரைப் பவுண் நகைபோல எனது சம்பளத்தில் எத்தனை மடங்கு இரண்டரைப் பவுண் நகை செய்து கொள்ளமுடியும்.

நான் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நம்பித்தானே வாழ வந்தனான். எனது அம்மா அப்பாவும் இங்கே தனியே தானே வாழ்கின்றார்கள். அவர்களுக்குத் துணையாக நான் இங்கே இருந்திடுறன். கதை பேசாதே இப்ப வரப்போறியா? இல்லையா? நான் வரவில்லை எனக் கூறிவிட்டு உள்ளே போனேன்.

சரியாக ஒருவார முடிவில் மாதச் சம்பளமெடுத்து அம்மாவுக்கும் ஒரு பகுதி கொடுத்துவிட்டு மனோகரன் வீட்டுக்குப் போனேன். நில்லடி எங்கே வந்தாய்? என்றார் மாமியார் கடுமையாக.

இந்த வீட்டுப் பையனை சீதனம் கொடுத்து வாங்கி அவனுக்கு வாழ்க்கைப் பட்டு வாழ்ந்து வருகிறேன். ஆதலால் நான் வருவேன். நீ நினைத்தபடி வருவதற்கும் போவதற்கும் இது ஒன்றும் அந்த மாதிரியான இடம் அல்ல.

யார் சொன்னது அவ்வாறான வீடென்று. அவ்வாறான இடமாக்குவதற்காகத் தான் கட்டிக் கொடுத்த மகளையும் இங்கு சேர்த்து வைத்திருக்கிறீர்களா? என்னடி கதைக்கிறாய்?

சும்மா கத்தாதையுங்கோ. உங்கள் உருட்டல் மிரட்டல்களுக்கு நான் அஞ்சப் போவதில்லை. அமைதியாக வாழ்ந்து வந்த என்னை ஆவேசப்படவைத்து விட்டீர்கள். இனி நான் இப்படித்தான் இங்கே தான் வாழ்வேன். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். வேண்டாமென்றால் விவாகரத்துப் பண்ணி அனுப்பி விடுங்கள்.

சும்மா சும்மா சின்னக் குழந்தைகளை விரட்டுற மாதிரி விரட்டாமல் எனக்கான கௌரவத்திலும் சுதந்திரத்திலும், தலையிடாதேயுங்கோ. மீறித் தலையிட்டீர்களென்றால் எல்லாப் பழியும் உங்கள் மீது விழக்கூடியவாறு கடிதம் எழுதி வைத்து விட்டுப் போயிடுவன் என்றதும் அவர்கள் மிரண்டு போய் நிற்க, பெரிதாக்கிய பொலித்தீன் கவர் போட்ட , பத்திரிகையில் வெளிவந்த செய்தியின் புகைப்படப் பிரதியை எடுத்து மேசைமீது வைத்து விட்டு உள்ளே சென்றேன்.

அதில் காணப்பட்ட செய்தியை வாசித்தறிந்ததும் பதறியடித்துக்கொண்டனர். மாமனார், இவளவை ஏன் சன்னி பிடித்த மாதிரி நடுங்கிறாளவை என எட்டிப் பார்த்தார். புகுந்த வீட்டுக் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் புகைப்படத்துடன் கூடிய தகவலாக இருப்பது கண்டு புன்னகை பூத்தார்.

மறுநாள் காலை 4 மணியிலிருந்து குசினியில் கடாமுடா சத்தம். என்னை யாரும் எழுப்பவில்லை. நானாக எழுந்து குளித்துக் கந்தோருக்குப் புறப்பட்டு வர சாப்பாட்டு மேசையில் சாப்பாடும் நேநீரும் இருந்தது.

சாப்பிட்ட பின் கட்டிவைத்திருந்த மதிய உணவுப் பொட்டலத்தையும் எடுத்துக் கொண்டு வேலைக்குப் போனேன். பெரிதாக்கி பொலித்தீன் உறையிட்ட பத்திரிகையின் செய்தியின் புகைப்படப் பிரதி மேசையில் காணப்பட்டது. நான் அதைக் கண்டுகொள்ளவில்லை. நான் அதைப் பார்த்ததையும் கணக்கெடுக்காததையும் கண்ட மாமனார் புன்னகை பூத்தபடி இருக்கிறார்.

மயூரதன்
யாழ்ப்பாணம்

## "ஆற்றல் கொண்டவர்களிடம் நாட்டை ஒப்படைக்கும் நேரம்

# பேராயரின் அரசியல் பே



இலங்கை அரசியலில் மதத் தலைவர்கள் எப்போதும் செல்வாக்கு மிக்கவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என நான்கு பிரதான மதங்கள் இருந்தாலும், பௌத்த மதத் தலைவர்கள் தவிர்ந்த ஏனைய மதத் தலைவர்கள் பெரும்பாலும் அரசியல் நிலைப்பாடுகளை எடுப்பது அல்லது வெளிப்படுத்துவது கிடையாது.

சிறுபான்மை மதங்களின் தலைவர்களாக இருப்பதாலோ என்னவோ, இந்த மூன்று மதங்களின் தலைவர்களும் மதில் மேல் பூனையாக இருக்கவே முற்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் அரசியலில் அவர்கள் அக்கறையோடு, கரிசனையோடு செயற்பட்டிருக்கிறார்கள். எனினும், வெளிப்படையாக எந்த அரசியல் சார்பு நிலையையும் எடுத்ததில்லை.

கத்தோலிக்கத் திருச்சபையின் தற்போதைய பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், அவ்வாறான ஒருவர் அல்ல என்பதை கடந்தவாரம் நிரூபித்திருக்கிறார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித், முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் என்றே பொதுவாக அறியப்பட்டவர்.

அவர் ஒரு கத்தோலிக்க மதத் தலைவராக இருப்பதை விட, தன்னை ஒரு பௌத்த சிங்களவராக வெளிப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் உள்ளவர். சிங்கள பௌத்தத்துக்கான முன்னுரிமையை எப்போதும் அங்கீகரிப்பவர்.

அவ்வாறான கோதாவில் தான், அவரது இப்போதைய அரசியல் வெளிப்பாடுகளும் அமைந்துள்ளன.

அண்மைய பயங்கரவாதத் தாக்குதல்கள், பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு பெரும் அதிர்ச்சியையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அவர், ஏப்ரல் 21 ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிட்டு வருகின்ற கருத்துக்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர், அவர் வெளிப்படுத்திய- வெளிப்படுத்த முற்பட்டுள்ள கருத்துக்கள் உள்நாட்டு அரசியலுக்கும் அப்பாற்பட்டதாகவும் இருக்கிறது.

பேராயர் மல்கம் ரஞ்சித் 21.4 தாக்குதல்களுக்குப் பின்னர், தீவிரமான அரசாங்க எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார். அவரது அந்த வெறுப்பு நிலைக்கு, காரணமாக இருப்பது தமது பொறுப்பில் இருந்த தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மாத்திரம் என எடுத்துக்கொள்ள முடியாது.

கத்தோலிக்க தேவாலயங்கள் தாக்கப்பட்டன என்பதால் அந்த மதப் பிரிவின் தலைவர் என்ற வகையில் அவர் சீற்றம் கொண்டிருப்பது அறமே. ஆனால், ஈஸ்டர் ஞாயிறன்று தாக்கப்பட்டது தனியே கத்தோலிக்க தேவாலயங்கள் மாத்திரமன்று.

வெளிநாட்டவர்களைக் குறி வைத்து, நட்சத்திர விடுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கிழக்கில் மட்டக்களப்பில், கத்தோலிக்க மதப் பிரிவைச் சாராத சீயோன் தேவாலயமும் தாக்குதலுக்கு உள்ளானது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்த போதும் அதனை தடுக்க அரசாங்கமும் பாதுகாப்பு பிரிவுகளும் தவறிவிட்டன என்பதில் சந்தேகமில்லை. அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்பதில் சந்தேகங்கள் உள்ளன.

தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை கிடைத்திருந்தால், ஈஸ்டர் ஞாயிறு ஆராதனைகளை நிறுத்தி வைத்திருப்பேன். அனர்த்தங்களை தவிர்த்திருக்கலாம் என்றெல்லாம் பேராயர் கூறியிருந்தார்.

ஆனாலும், அவரது பொறுப்பில் இல்லாத- சீயோன் தேவாலயத்திலோ, நட்சத்திர விடுதிகளிலோ குண்டுகள் வெடித்திருக்காது என்று நிச்சயப்படுத்திக் கூறமுடியாது.

தாக்குதலை தடுத்திருக்கலாம் என்று உறுதிபடக் கூறும் அவர், தனியே கத்தோலிக்க தேவாலயங்களின் மீதான தாக்குதல்களைப் பற்றி மாத்திரம் சிந்திக்கிறாரே தவிர, அதற்கு அப்பால், ஏனைய உயிர்களைக் காப்பாற்றும் பொறிமுறை அங்கு இருந்ததா? என்பதையிட்டு கவலை கொள்வதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின், பாதுகாப்புத்துறையின் தவறுகளினால் தான் அழிவுகள் அதிகமாக நிகழ்ந்தன என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இதுபோன்ற தாக்குதல்களை தடுத்து நிறுத்துவது கடினம், அதுவும் போரில் இருந்து விடுபட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இதுபோன்ற ஒரு அழிவில் நாடு சிக்கும் என்று யாரும் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கமாட்டார்கள்.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தாலும் அது சரியா, இப்படி நடக்க வாய்ப்புள்ளதா? என்று சந்தேகப்படும் நிலையே இருந்திருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

2004 இல் சுனாமி ஏற்பட்ட போது சர்வதேச அளவில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனால் அதனை பல நாடுகள், அரசாங்கங்கள் கண்டுகொள்ளவில்லை. ஏனென்றால், சுனாமி என்ற சொற்பதத்தையே அப்போது இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்த யாரும் அறிந்திருக்கவில்லை.

இப்படியொரு இயற்கைச் சீற்றம் நிகழும் என்று கற்பனையே செய்திராத நிலையில், அந்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் யாராலும் கண்டு கொள்ளப்படவில்லை.

அந்த எச்சரிக்கையையும் அதன் விளைவுகளையும் சம்பந்தப்பட்டவர்கள் உரிய முறையில் அடையாளம் கண்டிருந்தால், இலட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் அது முடியவில்லை.

ஏனென்றால், அவ்வாறான ஒரு சம்பவத்தை அப்போது யாரும் எதிர்பார்க்கவேயில்லை. அதுபோலத்தான், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையும் யாரும் எதிர்பார்க்கவில்லை.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க உள்ளிட்ட பலரும் இது போன்ற தாக்குதல்களை இலகுவில் தடுக்க முடியாது என்றும் இனிமேலும் நிகழ்வதற்கு வாய்ப்புகள் இல்லை எனக் கூறமுடியாது என்றும் கூறியிருக்கின்றனர்.

எவ்வாறாயினும் இனிமேல் இவ்வாறான தாக்குதல்கள் பற்றிய முன்னெச்சரிக்கைகள் கிடைத்தால் உசாராகவே இருப்பார்கள். ஏனென்றால், ஏலவே நடந்த தாக்குதல்கள் அந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தின.

2004 சுனாமியின் பாதிப்புக்குப் பின்னர் நாம் இந்தியப் பெருங்கடலில் நிகழும் நிலநடுக்கங்கள் பற்றிய செய்திகளின் பின்னால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுகிறதா? என்று உன்னிப்பாக பார்ப்பது போல, இனி குண்டு எச்சரிக்கைகள், புலனாய்வுத்தகவல்கள் விடயத்தில் அலட்சியம் காட்டப்படாது என்பது திண்ணம்.

ஆனால், பேராயர் மல்கம் ரஞ்சித், முன்னர் பலம்மிக்கதாக இருந்த புலனாய்வுப் பிரிவுகள் வெளிநாடுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்காக, அரசாங்கத்தினால் சீர்குலையச் செய்யப்பட்டு விட்டது என்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பு எவ்வாறு புலனாய்வுப் பிரிவு பற்றிய மிகையான- உள்நோக்கத்துடன் கூடிய விமர்சனங்களைச் செய்கிறதோ, அதுபோலவே மலினத்தனமான கருத்துக்களை பேராயரும் வெளியிட்டிருக்கிறார்.

அரச புலனாய்வுப் பிரிவுகளை தற்போதைய அரசாங்கம் சீர்குலைத்து விட்டது- அதனால் தான் இந்தக் கதி என்று பேராயர் கூறியுள்ளதற்குப் பின்னால் உள்ள அரசியலை விளங்கிக் கொள்வது கடினமல்ல.

புலனாய்வுப் பிரிவு எப்படி சீர்குலைக்கப்பட்டது என்று அவர் கூறவில்லை. ஆனால் யாரால் சீர்குலைக்கப்பட்டது என்று மாத்திரம் அவர் கண்டு பிடித்திருக்கிறார்.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பலர், கைது செய்யப்பட்டதால் தான் அது பலவீனப்பட்டுப் போனதாக, மகிந்த அணி தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகிறது.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலனாய்வுப் பிரிவினரில், 100 பேர் கூட கைது செய்யப்படவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டதற்குக் கூட கடந்த ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த குற்றச்செயல்கள் தான் காரணமாகும். அதற்கு துணை போன, உடந்தையாக இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.



அவ்வாறாயின், அந்தக் குற்றங்களை யாரும் கண்டு கொள்ளக்கூடாது, குற்றவாளிகள் தண்டிக்கப்படக் கூடாது

# வந்து விட்டது"

# பேச்சு

என்ற நிலைப் பாட்டை பேராயர் எடுக்கிறார் என்றே சந்தேகம் கொள்ள வேண்டியிருக் கிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களும் அதில் பறிக்கப்பட்ட உயிர்களும் மாத்திரமே பேராய ருக்கு முக்கியமானவையாக இருப்பது போலத் தான் கடந்த காலங்களில் நிகழ்ந்த குற்றங்க ளுக்கு நீதி வழங்கப்படுவதும் முக்கியமானதே.

பேராயர் மல்கம் ரஞ்சித் கடந்த கால குற்றச் செயல்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற ஒருவரல்ல. போரில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கர்களையும் கூட அவர் கவனத்தில் கொண்டதில்லை.

ஒன்பது நாட்கள் இலங்கையில் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா.அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வூல் தொடர்பாக பேராயர் மல்கம் ரஞ்சித்தின் கருத்தை, அவரது பேச்சாளரான ஜூட் கிரிசாந்த வெளியிட்டுள்ள விதம், இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதற் குப் போதுமானது.

"ஒரே நாளில் குண்டுவெடிப்புகளில் 250 பேர் கொல்லப்பட்டு, 500 பேர் காயமுற்றது பற்றி ஐ.நா.அறிக்கையாளர் கிளெமென்ற் நயா லெட்சோசி வூல் எதுவும் விசாரிக்கவில்லை. அதற்காக கவலைப்படவோ, என்ன நடந்தது என்று கேட்கவோ இல்லை.

போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து கேட்டறிவதற்காக மட்டும், வடக்கிற்குப் பயணம் செய்திருக்கிறார் " என்று விசனத்தை வெளிப்படுத்தியிருந்தார் பேராயர் மல்கம் ரஞ்சித்தின் பேச்சாளர் ஜூட் கிரிசாந்த.

பேராயர் தரப்புக்கு இப்போது தேவைப்ப டுவது, ஈஸ்டர் ஞாயிறு குற்றச்செயல்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பது மாத்திரம் தான். ஏனென்றால் அதனுடன் தொடர்புபட்டவர்கள், யாரும் சிங்களவர்கள் அல்ல.தற்போதைய விசா ரணைகளில் அவருக்கு நம்பிக்கையில்லை என்கிறார். இதனைவிட கடுமையான முறை யில் விசாரணைகள் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

குற்றங்கள் அனைத்தும் தராதரமின்றித் தண்டிக்கப்பட வேண்டியவை. கடந்தகால



குற்றங்களுக்கும் இப்போதைய குற்றங்களுக் கும் எந்த வேறுபாடும் இல்லை. இதனை பேராயர் ஏற்றுக் கொள்ளும் மனோநிலையில் இல்லை. அவர் குற்றங்களை இழைத்தவர் கள் எந்த இனத்தவர் - எந்த மதத்தவர் என்ற கோணத்திலேயே பார்க்கிறார்.

அதைவிட, பேராயர் மல்கம் ரஞ்சித் எதிர் பார்ப்பது, ஆட்சி மாற்றத்தைத்தான். அதனை அவர் முன்னரே பலமுறை சூசகமாக வெளிப்படுத்தி யிருக்கிறார்.

இப்போதும் கூட அவர், யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்று வெளிப்படுத்தவில்லை. அது தனது அரசியல்சார்புத் தன் மையை வெளிப்படுத்தி விடும் என்று அஞ்சினாலும் தற்போ தைய அரசாங்கத்தை வீட்டு க்கு அனுப்பும் நேரம் வந்து விட்டது என்பதை வெளி ப்படுத் தியிருக்கிறார்.

ஆற்றல் கொண்டவர்களி டம் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைக்கும் நேரம் வந்து விட்டது என்று அவர் கூறியிருப்பது யாரை மனதில் வைத்து என்பதை கூறிவிடு வது ஒன்றும் கடினமல்ல.

சிங்கள கத்தோலிக்க மக் களை தற்போதைய அரசாங் கத்திடம் இருந்து விலத்தி, மகிந்த தரப்பின் பக்கம் செல்ல வைப்பதே பேராயர் மல்கம் ரஞ்சித்தின் நோக்கம். அதனை அவர் பலமுறை தனது கருத் துக்களில் வெளிப்படுத்தியிருக் கிறார்.

இலங்கை அரசியலில் ஆதி க்கம் செலுத்தும் பௌத்த பீடங் களின் மகாநாயக்கர்கள் கூட, அரசாங்கத்தை வீட்டுக்கு அனு ப்ப வேண்டும், அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று கூறியதில்லை.

இதுவரை காலமும் அரசி யலில் தீர்க்கமான பங்கை வகித்திராத கத்தோலிக்க திருச் சபையின் உயர் குருவான பேராயர், அந்த அரசியலைக் கையில் எடுத்திருக்கிறார்.

வரப்போகும் ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் முக்கிய மானவை. சிங்கள-பௌத்த கடும்போக்காளர்களின் வாக் குகளை நம்பியே கோத்தபாய ராஜபக்ஷ களமிறங்கப்போகும் நிலையில், அவருக்கு சிங்கள கத் தோலிக்க மக்களின் வாக்குகள் கிடைப்பதை உறுதி செய்யும் வேலையைத்தான் பேராயர் மல்கம் ரஞ்சித் மேற் கொள்கிறார்.

ஆனால், தமிழ் கத்தோலி க்க வாக்குகளை அவரால் திசை திருப்ப முடியுமா? என்பது சந்தேகமே. ஏனென்றால், பேரா யர் ஒரு கத்தோலிக்க மதத் தலைவராக தன்னை வெளிப் படுத்துவதை விட, ஒரு சிங்க ளவராக வெளிப்படுத்துவதில் தான் ஆர்வம் கொண்டுள்ளவர்.


எனவே, தமிழ் கத்தோலி க்கர்களும், முதலில் தம்மை கத்தோலிக்கர்களாக பார்ப்பதை விட, தமிழர்களாகப் பார்க்கவே முற்படுவார்கள் என்றே எதிர் பார்க்கலாம்.

எவ்வாறாயினும், கத்தோலி க்க திருச்சபையின் முதல்வர் ஒருவர், இலங்கை அரசியலில் தீர்க்கமான ஒரு கட்டத்தில் அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு கூறும் துணிச் சலைக் கொண்டிருக்கிறார்.

அவருக்கு அந்தத் தைரியத் தைக் கொடுத்தது ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

# இது நம்ம கதைகள்... 51

## அடையாளம்



எம் ஒவ்வொருவருக்கும் சில தனித்துவமான அடையாளங்கள் உண்டு. எமக்கு மட்டுமல்ல ஏனைய ஜீவராசிகளுக்கும் சில அடையாளங்கள் தனித்துவமானவை.

இவற்றிற்கு மேலாக தேசம், இனம், மொழி, மதம்,சமூகம் என பல அடை யாளங்கள் நமக்கு தனித்துவத்தைத் தருகின்றன.

எம் அடையாளத்தை நாம் கைநெகிழும்போது அல்லது பிறரால் இல்லா தொழிக்கப்படும்போது எம் தனித்துவத்தை நாம் இழக்கின்றோம். அடையாளங்களை அழியாது காப்பதற்காகவே பல போராட்டங்கள் நடந்துள்ளன- நடந்துகொண்டிருக்கின்றன.

மெய்கண்டதேவர் அருளிய "சிவஞானபோதத்தில்" ஜீவாத்மா ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தால் கட்டுண்டு தன் அடையாளத்தை - சுயத்தை அறியாது வாழ்வதை விளக்க "காட்டில் வேடுவரால் வளர்க்கப்படும் அரசகுமாரன் தன்அடையாளம்புரியாது வேடுவனாகவே வாழ்வது" கதையாக உவமிக்கப்படுகின்றது.

பொதுவாக ஒரு மக்கள் குழுமத்தின் அடையாளங்கள் இல்லாதாக்கப்படல்...
1."நிர்மூலமாக்குதல்" (Annihilation) 2."உள்ளீர்ப்பு" (Assimilation)

என்னும் இரு தந்திரோபாய மார்க்கங்களிலேயே நிகழ்கின்றன. இன்று பொதுவாக நிர்மூலமாக்கப்படல் என்பதைவிட வேறு மக்கள் குழுமங்களின் அடையாளங்களை நாகரிகமெனக்கருதி நாம் உள்வாங்குவதாலேயே எம் சுயத்தை இழந்து வருகின்றோம்.

பொதுவாக எம் இளையோரின் நடையுடை- பாவனை மட்டுமின்றி பேச்சுவழக்கும் அந்நியமான உச்சரிப்பில் சிக்கித் திணறுவதை சுதேச வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்-தொகுப்பாளர்களை அவதானிக்கும் போது புலனாகின்றது. அவர்களையே ஆதர்ஷ ஆளுமைகளாக நோக்கும் நம் இளசுகளும் இவ்வித உச்சரிப்பை நாகரிகமாகக் கருதி நம் சுயத்தை இழக்கும் ஆபத்து ஆரம்பமாகி விட்டது. எனவே நம் அடையாளங்களை அழியாது காக்க அனைவரும் உறுதிபூணுவோம்.

இனி இவ்வாரக் கதை.......

ஒரு வயோதிபப் பெண்மணிக்கு மிகச்சிக்கலான சத்திரசிகிச்சையொன்று நடந்தது. அவள் உயிர் பிழைப்பதே சந்தேகமாகவிருந்து. சத்திரசிகிச்சையின் போது கடவுள் தன்னருகிலிருப்பதை அவள் உணர்ந்தாள். "இறைவா நான் உயிர்பிழைப்பேனா?" என்று கேட்டாள். "நிச்சயமாக நீ உயிர் பிழைப்பாய். இன்னும் 30 வருடங்கள் உயிர்வாழ்வாய்" என்றார் இறைவன்.

அவள் தேறினாள். "இன்னும் 30 வருடம் வாழப்போகிறேன். எனவே என்னை இளமையாக்கிக் கொள்வோம்" என முடிவு செய்தாள். பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்து முக அமைப்பை மாற்றிக் கொண்டாள். தலைமுடியை மீள் நடுகை செய்தாள். விதம்விதமான ஒப்பனைகள் செய்தாள். இப்போது பருவ மங்கையாக மாறினாள். நவநாகரிகமாக உடையணிந்து வைத்தியசாலை யிலிருந்து வெளியேறினாள். அவள் வீதியைக் கடந்தபோது வேகமாக வந்த டிப்பர் அவள் மீது மோதியது. அந்த இடத்திலேயே இறந்துபோனாள்.

அவள் ஆன்மா இறைவன் சந்நிதியை சென்றடைந்தது. கோபமும், வெறுப்புமாக இறைவனை முறைத்தாள். "ஏன் என்னை ஏமாற்றினாய், நான் 30 வருடங்கள் உயிர் வாழ்வேனென்று நீ சொன்னதால் தானே நான் என்னையே இளமையாக்கினேன். ஆனால் மோசம் செய்துவிட்டாய் இறைவா" என ஓலமிட்டாள். இறைவன் அமைதியாகச் சொன்னார் "Sorry, உன் இப்போதைய தோற்றத்தில் எனக்கு உன்னை அடையாளமே தெரியவில்லை. வேறு யாரோ என்று நினைத்தே டிப்பரை மோதவிட்டேன். நீ.... நீயாக இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது" நம்மாள் வாயடைத்துப் போனாள்.




"தங்கள் அழுக்கான பாதங்களால் என் மனதில் கால்பதித்து நடக்க யாரையும் அனுமதிக்க மாட்டேன்" - மகாத்மா காந்தி

எப்.எக்ஸ்.அன்ரன்

# உருகும் பனிப்பாறைகள்
# உலக அழிவுக்கான அறைகூவலா?



கண்ணீர் வடிய அந்தக் குறுகிய பனிப்பாறையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் ஐஸ்லாந்து மக்கள். பல நூறு ஆண்டுகளாகத் தங்களைச் சுமந்த மூத்த உயிர் ஒன்று வெப்பமயமாதலின் தாக்கத்தால் கொஞ்சம் கொஞ்சமாக மூச்சுத்திணறி... உருக்குலைந்து... சிதறுண்டு தங்கள் கண்முன்னே இறந்தே போய்விட்டதை தாங்க முடியாமல் கதறி அழுகிறார்கள் மக்கள். உலக வரலாற்றில் முதல்முறையாக, பனிப்பாறைத் தீவு ஒன்று இறந்துவிட்டது. இது இயற்கையின் மரணம் மட்டுமல்ல... மனிதக் குலத்துக்கு விடப்பட்ட எச்சரிக்கை.

ஐஸ்லாந்தில் மிகவும் பிரபலமான 'ஒக் ஜோக்கல் க்ளேசியர்'தான் இப்போது இறந்திருக்கும் பனிப்பாறை. ஒக் க்ளேசியர் என்று ஆராய்ச்சியாளர்களால் செல்லமாக அழைக்கப்படும் ஒக் ஜோக்கல் க்ளேசியர் ஐஸ்லாந்தின் பெருமை. அந்த நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாசாரச் சின்னம். சூழலியல் ஆய்வாளர்கள், சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம். பல நூறு ஆண்டுகளாக, மேற்கு ஐஸ்லாந்தில் 15 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரந்து விரிந்துகிடந்த மிகப் பெரிய ஒக் க்ளேசியர், ஒரு சதுர கிலோ மீற்றர் அளவுக்குச் சுருங்கி, கடைசியில் உயிரையும் விட்டுவிட்டது. இந்தப் பனிப்பாறையின் இறப்பு மிகவும் குரூரமானது. மெதுவாக உருகி, துண்டு துண்டாக உடைந்து, உருக்குலைந்து, சரளைக் கற்களைப்போல சிதறுண்டு, கடைசியில் சகதியாகக் கடலடியில் படிந்துவிடும்.

> “என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்.
> என்ன செய்யவேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும்.
> ஆனால், நாங்கள் அதைச் செய்தோமா என்பது உனக்கு மட்டுமே தெரியும்!”

ஐஸ்லாந்திலுள்ள 400 க்ளேசியர்களில், க்ளேசியர் என்கிற அந்தஸ்தை முதலில் இழந்ததுள்ளது ஒக் ஜோக்கல். உலகில் நம் கண்ணெதிரில் மறைந்த முதல் பனிப்பாறையும் இதுதான். அதனால்தான் அமெரிக்காவின் ரைஸ், ஹவுஸ்டன் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான சைமன் ஹோவே, டொமினிக் போயர், ஆட்டர் சிகர்ஸன் ஆகியோர் ஒக் க்ளேசியருக்கு நினைவுச்சின்னம் அமைக்க முடிவெடுத்தனர். ஒக் ஜோக்கல் க்ளேசியர் இறந்த இடத்துக்கு அருகே, எதிர்வரும் ஒகஸ்ட் 18 ஆம் திகதி இதன் நினைவுச்சின்னம் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

நினைவிடத்தில் பொறிக்கப்படும் வாக்கியங்கள் கண்கலங்க வைக்கின்றன...

“என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்.

என்ன செய்யவேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

ஆனால், நாங்கள் அதைச் செய்தோமா என்பது உனக்கு மட்டுமே தெரியும்!”

ஒக் ஜோக்கலின் மறைவுக்காக இப்படி ஓர் இரங்கற்பாவை எழுதியவர் ஐஸ்லாந்தின் பிரபல எழுத்தாளர் ஆண்ட்ரி ஸ்னாகர் மாக்னஸன். இந்த நினைவிடத்தில் இடம்பெறப்போகும் மற்றொரு முக்கியமான வார்த்தை '415 ppm $CO_2$'. வளிமண்டலத்தில் கலந்திருக் கும் கார்பன்டை ஆக்ஸைடின் உச்சகட்ட அளவு இது! அடுத்த 200 ஆண்டுகளில், ஐஸ்லாந்திலிருக்கும் 400 பனிப் பாறைகளுக்கும் ஒக்குக்கு நேர்ந்த கதிதான் ஏற்படும்.

ஏற்கனவே, அண்டார்டிகாவின் மேற்குப் பகுதியில் உள்ள த்வைட்ஸ் க்ளேசியரில் 14 சதுர மைல் பரப்பளவில் மிகப் பெரிய ஓட்டை விழுந்துவிட்டது. கிழக்குப் பகுதியிலிருக்கும் டாட்டன் க்ளேசியரும் கடந்த மூன்று ஆண்டுகளாக உருகிவருகிறது. தென் துரு வத்தைக் காட்டிலும் அதிவேகமாக வெப்பம் அடைவது வடமுனைதான். மத்திய ஐரோப்பா, மேற்கு கனடா, அமெரிக்காவிலிருக்கும் பனிப்பாறைகள் 2100-க்குள் அழிந்துவிடும். இதற்கு முக்கிய காரணம், வளிமண்டல வெப்பமயமாதல்.

நாங்கள் எதிர்பார்த்ததைவிட வேகமாகப் பனிப்பாறைகள் உருகுகின்றன. ஒவ்வொரு வருடமும் 369 பில்லியன் டன் பனி உருகுகிறது. இந்த நிலை தொடர்ந்தால், கடல்மட்டம் ஆறு அங்குலம் வரை உயரும். அதனால். உலகின் பல தீவுகள், கடலோர நகரங்கள் மூழ்கும் என அஞ்சுகின்றனர் ஆய்வாளர்கள்.

இவையெல்லாம் எங்கோ வட, தென் துருவங்களில் நடக்கும் அழிவு என்று நாம் உதாசீனப்படுத்த முடியாது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, நேபாளம், பூடான், வங்க தேசத்தின் நீராதாரமாக விளங்கும் இமயமலையில் பனிப்பாறைகள் வேகமாக உருகத் தொடங்கிவிட்டன. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பனி உருகும் வேகம் இருமடங்காகும் என்று எச்சரிக்கிறார்கள் ஆய்வாளர்கள். வெப்பமயமாதலை இன்றே கட்டுப்படுத்தத் தொடங்கினால் கூட இமயமலையில் 30 சதவிகித பனிப்பாறைகள் உருகுவதைத் தடுக்கமுடியாது. பனிப்பாறைகளின் பேரழிவு, உலகின் மூலைமுடுக்குகளில் வாழும் மனிதர்களைக்கூட இடம்பெயர வைக்கும். மனித இறப்பும் பலமடங்கு அதிகரிக்கும். கேரளத்தின் மன்றோ தீவுகள், மாலத் தீவுகள் முதல் செஷெல்ஸ் மற்றும் வடமேற்கு ஹவாய் தீவுகள் வரை பாதிக்கும் என எச்சரிக்கின்றன ஆய்வுகள்.

பனிப்பாறைகள் உலகின் நன்னீரைப் பாதுகாக்கும் பெட்டகங்கள். பூமியின் வயது, இயற்கைச் சுழற்சி, பூமி கிரகத்தின் எதிர்கால தொடர்புகளை அடையாளம்காண உதவும்அளவுகோல். அதன் இழப்பு அளவிடமுடியாது. நன்னீரை மட்டும் நாம் இழக்கவில்லை. ஒரு வரலாற்றையே இழந்துவிட்டோம். மறைந்த பனிப் பாறையின் வரலாறு ஒரு வறண்ட பாறையில் எழுதப்படு வதுதான் கொடூரத்தின் உச்சம். பசுமைக் குடில் வாயுக்களை நாம் குறைக்கத் தவறியதால், ஐஸ்லாந்து தண்டனை அனுபவிக்கிறது. உடனடித் தேவை போர்க்கால நடவடிக்கை. எடுக்கத் தவறினால், மனித குலம் மொத்தமும் துக்கப்படும் நாள் வெகுதூரத்தில் இல்லை!

# கடவுள் போல் குறுக்கே வந்த புறா
# ஜேர்மனியில் சுவாரஸ்ய சம்பவம்



முக்கிய நாடுகள் அனைத்திலும் குறிப்பிட்ட வேகத்தைத் தாண்டி சில சாலைகளில் செல்லக் கூடாது எனக் கட்டுப்பாடுகள் இருக்கும். இவற்றை மீறுபவர்களைக் கண்காணிப்பதற்காக ஸ்பீட்டிராப் (speedtrap) கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். இவற்றில் குறிப்பிட்ட வேகத்தைத் தாண்டி வாகனங்கள் சென்றால் அவை புகைப்படம் எடுக்கப்படும். ஜேர்மனியில் இருக்கும் இப்படியான ஒரு ஸ்பீட் கமராவில்தான் ஒரு வைரல் நிகழ்வு பதிவாகியுள்ளது. மணிக்கு 30 கிலோமீற்றருக்கு மேல் செல்லக் கூடாத குறுகலான பாதையில் மணிக்கு 54 கிலோமீற்றர் வேகத்தில் வந்து 105 (சுமார் 8,000 ரூபாய்) அபராதம் கட்ட வேண்டியவரை ஒரு புறா காப்பாற்றியிருக்கிறது.

அது எப்படி என்று கேட்கிறீர்களா, ஸ்பீட் கமராவில் விழுந்த காரின் புகைப்படத்தில் சரியாக ஓட்டுநரை மட்டும் மறைத்திருக்கிறது இந்தப் புறா. இதனால் அவரை பொலிஸாரால் அடையாளம் காணமுடியவில்லை. வியர்சென் மாவட்ட பொலிஸார் இதுகுறித்து சுவாரஸ்யமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள னர்.

“கிறிஸ்தவத்தில் புறாவை புனிதமாகக் கருதுவர். அதுதான் இவரை வந்து காப்பாற்றியிருக்கிறது. இம்முறை அவரை விட்டுவிடுகிறோம். இந்தப் படத்தில் இருப்பவரும் இந்தக் குறியீட்டைப் புரிந்துகொண்டு இனிமேல் கட்டுப்பாட்டுட ன் வண்டி ஓட்டுவார் என நம்புகிறோம்” என்றது அந்த அறிக்கை.

# இது மோட்டிவேஷன் லெவல் இன்னிங்ஸ்!

## ஸ்மித்தின் வெறித்தனம்

சமூக வலைத்தளங்களில் ஸ்மித்தின் சதம் குறித்த பேச்சுத்தான். அழுக்கு சட்டையுடன் அவர் களத்தில் போராடிய புகைப்படங்கள் காணும் இடமெங்கிலும் பகிரப்பட்டு இருந்தது.

அவுஸ்திரேலிய, இங்கிலாந்து ரசிகர்களுக்கு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். அவர்களுக்கு எப்போதுமே ஆஷஸ் தொடர்தான் டொப். இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் பர்மிங்காம்மில் உள்ள எட்பக்ஸ்டன் மைதானத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

எப்போதும் ஆஷஸ் தொடருக்கு இருக்கும் எதிர்பார்ப்பைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதல் எதிர்பார்ப்பு இந்த முறை இருக்கிறது. காரணம் இது டெஸ்ட்



சம்பியன்ஷிப் தொடருக்கான தொடக்கமும்கூட. இரண்டு ஆண்டுகள் நடைபெறவுள்ள டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் முதல் போட்டி தொடங்கிய ஆட்டம்தான்.

கூடுதல் பரபரப்புக்கு மத்தியில் டாஸ் வென்ற அவுஸ்திரேலியா பட்டிங்கை தேர்வு செய்தது. அவுஸ்திரேலிய பட்டிங் லைன் - அப் மீது கப்டன் வைத்த நம்பிக்கையைத் தகர்த்து எறிந்தார் இங்கிலாந்தின் பிராடு. 2 ஓட்டங்களில் வோர்னர் ஆட்டமிழக்க, பான்கிராஃப்ட் 8 ஓட்டங்களில் வெளியேறினார். இருவரையும் பிராடு வெளியேற்றினார்.

நேற்று முன்தினம் இரவு முதல் சமூக வலைத்தளங்களில் ஸ்மித்தின் சதம் குறித்த பேச்சுத்தான். அழுக்கு சட்டையுடன் அவர் போராடிய புகைப்படங்கள் காணும் இடமெங்கிலும் பகிரப்பட்டு இருந்தது.

முதலில் தொடங்கிய ஆட்டம், அப்படியே தொடர அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது அவுஸ்திரேலியா. ஒருகட்டத்தில் 122 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து கிட்டத்தட்ட முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வர தயாரானது. ஆனால், எதிர்பாராததை ஏதிர்பாருங்கள் என்று சொல்வதைப் போல டூ டவுன் களமிறங்கிய ஸ்மித் ட்விஸ்ட் வைத்தார், கடைசி இரு பௌலர்களுடன் சேர்ந்து அவர் செய்ததெல்லாம் வேற லெவல் வெறித்தனம். பீட்டர் சிடிலுடன் சேர்ந்து 88 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப், லயனுடன் சேர்ந்து 74 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் என மாஸ் காட்டினார் ஸ்மித். ஸ்மித் 144 ஓட்டங்களில் கடைசி விக்கெட்டாக வீழ்ந்தார். பிராட் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இது ஆஷஸ் தொடரில் ஸ்மித் அடிக்கும் 9 ஆவது சதம்.

இதுபோன்று பலமுறை நடந்திருந்தாலும் ஆஷஸ் தொடரின் முதல் போட்டியில் இருக்கும் பிரஷர் என்பது உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இறுதிக் கட்டத்தில் இருந்த பிரஷரை விட அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும். இறுதிப் போட்டியில் சிறிது நேரம்தான் பிரஷர் நீடித்தது. ஆனால், இங்கு 5 நாளும் அதே பிரஷர் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் 5 போட்டிகளிலும் இருக்கும்.

காரணம் களத்தில் இருந்து மட்டுமே வீரர்களுக்கு அழுத்தம் வராது. களத்துக்கு வெளியே இருந்தும் அழுத்தம் வரும். இது இங்கிலாந்து நாட்டில் நடந்தால் அவுஸ்திரேலியாவும் அவுஸ்திரேலியாவில் நடந்தால் இங்கிலாந்து அணியும் சந்திக்கும் பெரும் பிரச்சினை. இந்தப் போட்டியிலும் இது நடந்தது. ஆனால், அவுஸ்திரேலியாவுக்கு நடந்தது என்பதைக் காட்டிலும் ஸ்மித்துக்கு எதிராக நடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ரசிகர்களின் தாக்குதல் மனதளவில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இருந்தது.

அதாவது, பந்து சேதப்படுத்தப்பட்ட விவகாரத்தை மையமாகக் கொண்டு ரசிகர்கள் ஸ்மித்துக்கு எதிராகக் கடும் தாக்குதல் நடத்தினர். அவர் மன்னிப்பு கோரும்போது அழுத முகத்தை முகமூடியாக அணிந்து வ்ந்தனர். பந்தை சேதப்படுத்துவதற்கு அவுஸ்திரேலிய வீரர்கள் பயன்படுத்திய சேண்ட் பேப்பர் எனத் தொடர்ச்சியாகத் தாக்க, எந்தச் சலனமும் இல்லாமல் ஆடினார் ஸ்மித்.

ஆஷஸ் தொடரில் இது ஒன்றும் புதிதல்ல. கடந்த ஆஷஸ் தொடரில் ஸ்டோக்ஸ் கைது செய்யப்பட்டது போன்று அவுஸ்திரேலிய ரசிகர்கள் மைதானத்தில் செய்துகாட்டினர். ஸ்லெட்ஜிங் என்பது இருநாட்டு வீரர்கள் மட்டுமல்ல, ரசிகர்களுக்கும் கைவந்த கலை.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது இங்கிலாந்து ரசிகர்களை ஸ்மித் வோர்னருக்கு எதிராகச் செயற்பட வேண்டாம் என்று சொல்வீர்களா? என அவுஸ்திரேலியா இங்கிலாந்து போட்டிக்கு முன்னதாக இயான் மார்கனிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், ரசிகர்களை நான் தடுக்க முடியாது. ஒருவர் தவறு செய்து தண்டனை அனுபவித்தால் மட்டுமே அவர் ரசிகர்கள் அப்படியே ஏற்றுக் கொள்வர்கள் என்று அர்த்தம் கிடையாது. தவிர, பணம் செலவு செய்து டிக்கெட் வாங்கி வந்தவர்களை நான் எப்படிக் கட்டுப்படுத்த முடியும். அவர்கள்



கொண்டாடும் விதத்தில் ஆட்டத்தைக் கொண்டாடட்டும்" என்றார். ரசிகர்களும் அப்படித்தான் செயற்பட்டார்கள்.

முதல் நாள் ஆட்டம் முடிவடைந்த பின்னர் பேசிய ஸ்மித், “நான் மீண்டும்



விளையாடுவேன் என்று நினைக்கவில்லை. கடந்த 15 மாத காலத்தில் நான் என்னை இழந்தது போல் உணர்ந்தேன். குறிப்பாக, காயத்துக்கான சிகிச்சையில் இருந்தபோது மிகக் கடினமாக இருந்தது. ஆனால், அதிலிருந்து மீண்டு வந்தபோது மீண்டும் தன்னம்பிக்கையாக உணர்ந்தேன். காயத்தில் இருந்து மீண்டு வந்தது என்னை மேலும் உந்தியது. நாம் விரும்புவதைச் செய்தால் எல்லாம் தானாக நடக்கும். அவுஸ்திரேலிய மக்களும் எனது ஆட்டத்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என நம்புகிறேன்.

நான் அணிக்கு மீண்டும் திரும்பி வந்து, இப்போது இருக்கும் இடம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் களத்தில் இருக்கும்போது உண்மையிலே எப்படி ஆட வேண்டும் என்ற ஐடியா இல்லாமல்தான் இருந்தேன். எனது நிலையை விபரிக்க வார்த்தை கள் இல்லாமல் இருக்கிறேன். எனது சதங்களில் இது மிகச் சிறப்பானது என்பேன்.

சில நேரங்களில் நான் சிறப்பான பந்துகளை எதிர்கொள்ள முடியாமல் சிரமப்பட்டேன். ஆனால், எனக்குள், சரி விடு, அடுத்த பந்தை பார்த்துக்கொள்ளலாம் என எனக்கு நானே நம்பிக்கை அளித்து வந்தேன்" என்றார். இந்தநிலையில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்மித்தின் இந்தச் சதத்துக்கு பெரும் பாராட்டு குவிந்து வருகிறது. ரசிகர்களும் ஸ்மித்தின் கம்பேக்கை கொண்டாடி வருகின்றனர். ஒரு சில ஆட்டங்கள் நமக்கு நம்பிக்கை அளிக்கும். ஆனால், சில ஆட்டம், வாழ்க்கை எத்தனை இக்காட்டான நிலையில் விட்டாலும் மீண்டு வர முடியும் என மோட்டிவேஷன் தரும். ஸ்மிதின் ஆட்டம் மோட்டிவேஷன் தரக்கூடிய இன்னிங்ஸ்.

# முருகன் - நளினி மகள் ஹரித்திராவுக்கு திருமணம்

## மாப்பிள்ளை ஈழத் தமிழர்

வேலூர் சிறையில் இருந்த நளினி, தன் மகள் திருமணத்துக்காக ஒரு மாத பரோலில் வெளியே வந்திருக்கிறார். சத்துவாச்சாரியில் தங்கியிருக்கும் அவர், தன் மகளுக்கு ஈழத் தமிழர் ஒருவரை மாப்பிள்ளையாகத் தேர்வு செய்திருப்பதாகத் தகவல்கள் வருகின்றன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 28 ஆண்டுகளாகச் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினி - முருகன் தம்பதியரின் மகள் ஹரித்திரா சிறையில் பிறந்தவர். லண்டனில் தங்கியிருக்கும் ஹரித்திராவுக்கு திருமணம் செய்து வைக்க, ஆறு மாதங்கள் பரோல் கேட்டு சிறை நிர்வாகத்திடம் நளினி விண்ணப்பித்திருந்தார். அந்த மனுவை சிறை நிர்வாகம் ஏற்கவில்லை.

இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி ஒரு மாதம் பரோல் பெற்றார் நளினி. ஜூலை 25 ஆம் திகதி காலை, வேலூர் பெண்கள் சிறையிலிருந்து ஒரேஞ் நிறப் பட்டுப்புடைவை, தலையில் சூடிய மல்லிகைப்பூவுடன் வெளியில் வந்தார் நளினி.

சத்துவாச்சாரியை அடுத்த ரங்காபுரத்திலுள்ள திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைச் பொதுச்செயலாளர் சிங்கராயர் வீட்டில் தங்கியுள்ள நளினி, மகளின் திருமண ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

நளினியுடன் அவரின் தாய் பத்மாவதி, சகோதரி கல்யாணி, சகோதரர் பாக்கியநாதன் ஆகியோர் தங்கியிருக்கிறார்கள். லண்டனிலுள்ள மகள் ஹரித்திராவும் வேலூர் வரவிருக்கிறார்.

"நல்ல நடத்தையுடன் நடந்துகொள்ள வேண்டும். சத்துவாச்சாரி பொலிஸ் நிலையத்தில் தினமும் ஆஜராகிக் கையெழுத்திட வேண்டும். ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கக் கூடாது. அரசியல் கட்சித் தலைவர்களையோ, எந்த ஓர் அமைப்பையோ சந்திக்கக் கூடாது. ஒகஸ்ட் 25 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வேலூர் சிறைக்குத் திரும்பிவிட வேண்டும்" உள்ளிட்ட 12 நிபந்தனைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்கும்படி நளினிக்குச் சிறை நிர்வாகம் அறிவுறுத்தியிருக்கிறது.

நளினியின் சட்டத்தரணி புகழேந்தி கூறும்போது,

"2016 இல் தந்தையின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக நளினி பரோலில் வந்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, மகளின் திருமணத்துக்காக இப்போதுதான் பரோலில் வந்திருக்கிறார்.

சூழ்நிலையைப் பொறுத்து பரோலை நீடிக்கக்கோரி மீண்டும் நீதிமன்றத்தை அணுகுவோம். நளினியைச் சென்னையில் தங்க வைப்பதில் சில சிக்கல்கள் இருந்தன. அதனால்தான், வேலூரிலேயே தங்க அனுமதி கேட்டோம்.

நளினியின் கணவர் முருகன், தற்சமயம் பரோல் வேண்டாம் என்று கூறிவிட்டார்.

மகளின் திருமணத்துக்குள் விடுதலையாகி விடுவேன் என்ற நம்பிக்கையில் அவர் இருக்கிறார். விடுதலை செய்யப்படாதபட்சத்தில், திருமணத்துக்குச் சில நாட்களுக்கு முன்பாக முருகன் பரோலில் வருவார். நல்ல வரன்களைப் பார்த்து வருகிறோம்.

நான்கைந்து மாப்பிள்ளைகளை உறவினர்கள் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள். ஈழத்தமிழர் ஒருவரைத்தான் மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுக்க நளினி விரும்புகிறார். மாப்பிள்ளை இலங்கையில் இல்லை என்றாலும் வெளிநாட்டில் வசிப்பவராகக்கூட இருக்கலாம். நளினிதான் மகளுக்கான மர்ப்பிள்ளையைத் தேர்வு செய்வார்" என்றார்.



**நளினியின் கணவர் முருகன் தற்சமயம் பரோல் வேண்டாம் என்று கூறிவிட்டார். மகளின் திருமணத்துக்குள் விடுதலையாகி விடுவேன் என்ற நம்பிக்கையில் அவர் இருக்கிறார்.**

**ஜூனியர் விகடன்**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அந்தமான் காதலி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : கே.ஜே.ஜேசுதாஸ், வாணி ஜெயராம்



அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு
அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு
அந்தத் தென்னை தாலாட்டும் இளநீர்
இன்பத் தேரில் தூவும் பன்னீர்

அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு

இந்த மேகக் கூந்தல் கலைகள்
கடல் நீரில் ஆடும் அலைகள்
உந்தன் மோக ராக நாதம்
இந்த ஏழை பாடும் வேதம்
அந்த மானும் உன் போல அழகு
இளம் பாவை உன்னோடு உறவு
அந்தத் தென்னை தாலாட்டும் இளநீர்
இந்தக் காதல் தூவும் பன்னீர்

அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு

நல்ல பூவும் தேனும் திரண்டு
சுகம் பொங்கும் உள்ளங்கள் இரண்டு
இது ராஜ போக சொர்க்கம்
இனி பேச என்ன வெட்கம்

அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு

இது ஏக்கம் தீர்க்கும் தனிமை
என்ன இன்பம் அம்மா உன் இளமை
இந்த தேவி மேனி மஞ்சள்
நான் தேடி ஆடும் ஊஞ்சல்

உங்கள் கைகள் என்ற சிறையில்
வரும் கால காலங்கள் வரையில்
நான் வாழ வேண்டும் உலகில்
அந்த மானைப் போல அருகில்

அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு
அந்த மானைப் பாருங்கள் அழகு
இளம் பாவை என்னோடு உறவு
ஆ... ஆ... ஆ... ஆ... ஆ... ஆ...

# விக்ரம் வேதா ரீமேக்கில் அமீர்க்கான்

விஜய் சேதுபதி-மாதவன் நடித்து தமிழில் சூப்பர்ஹிட் ஆன படம் விக்ரம் வேதா. இந்தப் படத்தை இயக்கிய புஷ்கர் மற்றும் காயத்ரி தற்போது அதே கதையை பாலிவுட்டில் ரீமேக் செய்யவுள்ளார்.




அந்த படத்தில் விஜய் சேதுபதி ரோலில் நடிகர் அமீர் கான் மற்றும் மாதவன் ரோலுக்கு சைப் அலி கான் ஆகியோர் நடிக்கவுள்ளனர் என செய்தி தற்போது வெளிவந்துள்ளது.

மார்ச் 2020ல் ஷூட்டிங் துவங்கும் என கூறப்படுகிறது.

# பிக்போஸ் வீட்டை விட்டு சேரன் வெளியேற வேண்டும்

உடனே பிக்பாஸ் வீட்டை விட்டு வெளியேறுங்கள், சேரனிடம் கோரிக்கை வைத்த பிரபல இயக்குனர்



சேரன் பிக்பாஸ் வீட்டில் பலரின் பேவரிட்டாக இருக்கின்றார். அதே நேரத்தில் சரவணன், சாண்டி, கவினுக்கு எதிரியாகவே இருந்து வருகின்றார்.

இந்நிலையில் சேரனை மிகவும் தரக்குறைவாக நேற்று சரவணன் பேசியது பலருக்கும் அதிர்ச்சி தான், பலரும் அதை கண்டித்தனர்.

தற்போது இயக்குனர் வசந்தபாலன் கூட தன்னுடைய முகநூல் பக்கத்தில் மிகவும் கடுமையாக சில கருத்துக்களை கூறியுள்ளார்.

இதில் சேரன் சேர் தயவு செய்து அந்த பிக்பாஸ் வீட்டை விட்டு வெளியேறுங்கள் என்று கூறியுள்ளார்.



# போரிஸ் என்னும் புதிய ரட்சகர்





இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிக இக்கட்டான சூழலில் இருக்கிறது பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிவதாக பிரிட்டன் 2016ஆம் ஆண்டு முடிவெடுத்தது. ஒக்டோபர் 31, 2019இல் அதற்கான காலக்கெடுவும் முடிவடைகிறது.

பிரிட்டன் விரும்பும் ஒப்பந்தத்தை ஐரோப்பா யூனியன் தர மறுக்கிறது, ஐரோப்பா யூனியன் ஒப்புக்கொள்ளும் ஒப்பந்தத்தை பிரிட்டன் பாராளுமன்றம் எதிர்க்கிறது. இந்த இழுபறியின் விளைவாக, இரண்டாண்டுப் போராட்டத்திற்குப் பிறகு பதவி விலகியிருக்கிறார் தெரசா மே. இந்த இக்கட்டான சூழலில் பிரிட்டனை ரட்சிக்க அந்நாட்டு அமைச்சர்கள் தேர்வு செய்திருக்கும் நபர் போரிஸ் ஜான்சன். பிரிட்டனின் சர்ச்சை நாயகன்.

**Alexander Boris de Pfeffel Johnson** என்பது அவரது முழுப்பெயர், பிரிட்டன் மக்கள் அவரைச் செல்லமாக **bojo** என அழைக்கிறார்கள் பொதுவெளியில் அவர் போரிஸ். ஜனரஞ்சகமான அவரது பேச்சுக்கு ரசிகர்கள் ஏராளம், அவரது நகைச்சுவை உணர்வும், யதார்த்தமான பேச்சும், அவரை மக்கள் ரசிப்பதற்கான காரணங்கள். கன்சர் வேட்டிவ் க்ட்சியினர், கட்சியின் தலை வராகவும் பிரதமராகவும் போரிஸைத் தேர்வு செய்துவிட்டு, சூதாட்டப் பந்தய த்தில், மொத்தப்பணத்தையும்ஒரு குதிரையின்மீது கட்டிவிட்ட பரிதவிப்போடு இருக்கிறார்கள்.

தன்னுடைய எழுத்தாலும் கருத்துகளாலும் தொடர்ந்து சர்ச்சைக்குள்ளாவது போரிஸின் வழக்கம்தான். 'முஸ்லிம் பெண்களின் புர்கா அணிந்த முகங்கள் தபால் பெட்டிகளைப் போல இருக்கின்றன' என்றது, அரசு நிகழ்ச்சியொன்றில் தொழிலதிபர்களைப் பற்றித் தகாத வார்த்தை பேசியது, சீக்கிய ஆலயத்தில் மதுவைப் பற்றிப் பேசியது, ரக்பி விளையாட்டில் பத்து வயதுச் சிறுவனைத் தள்ளி விட்டது என, இவர் நின்றால், நடந்தால், பேசினால் கண்டனங்கள் எழாமல் இருப்பதில்லை. அப்படி ஒரு பிரதமரைத்தான் ஆபத்திற்குப் பாவமில்லை என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் கன்சர்வேட்டிவ் கட்சியினர்.

எந்த அடையாளத்துக்குள்ளும் அடங்காமல், யூகிக்க முடியாத ஒரு நபராக இருப்பதே போரிஸினுடைய தனி அடையாளம். சில சமயம் சமத்துவத்தை விரும்பும் அகதிகளின் நண்பனாகவும், சில சமயம் பாரம்பர்யத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற பழைமைவாதியாகவும் பேசும் அவரது மனநிலை முரண்களின் இருப்பிடம்.

அமெரிக்காவில், பணக்கார பிரிட்டன் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த போரிஸ், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய இரு நாடுகளின் குடியுரிமையையும் வைத்திருக்கிறார். ஜேர்மன், பிரெஞ்சு, துருக்கி எனப் பல நாடுகளும், இஸ்லாம், யூத மதம், கிறித்துவம் எனப் பல மதங்களும் கொண்ட கலவையான வம்சாவளியைச் சார்ந்தவர் அவர். அமெரிக்காவில் பத்திரிகைத் துறையில் பல ஆண்டுகள் பணியாற்றியவர், தெரிந்தே போலியான செய்தியைப் பிரசுரித்ததற்காக டைம்ஸ் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

பின்னர் பல இடங்களில் பணியாற்றிவிட்டு, அரசியலில் நுழைந்தார். லண்டன் நகர மேயராக இரண்டு முறை பணியாற்றியவர், ஹென்லி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். கன்சர்வேட்டிவ் கட்சியின் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் பதவி வகித்தார். பிரிட்டனின் ஒப்பற்ற தலைவரான வின்ஸ்டன் சர்ச்சில் பற்றிய இவரது புத்தகம் பலரது கவனத்தை இவர்பக்கம் திருப்பியது.

தற்போது இவரைப் பிரிந்திருக்கும் இவரின் இரண்டாவது மனைவி மரீனா வீலெர், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். மரீனாவின் தந்தை பிரிட்டனைச் சேர்ந்தவர், தாயார் இந்தியாவின் மேற்குப் பஞ்சாபைச் (பிரிக்கப்படாத பாகிஸ்தான்) சேர்ந்தவர்.

மேலும், போரிஸின் அமைச்சரவையில் உள்துறைச் செயலராக பிரீதி பாட்டீல், மாநிலச் செயலாளராக அலோக் சர்மா, கருவூலத் தலைமைச் செயலராக ரிஷி சுனக் என்று இந்திய வம் சாவளியைச் சேர்ந்த மூவர் இடம்பெற்றிருப்பதும் முக்கியமாகக் கருதப்படுகிறது.

பிரதமரானதும், பிரிட்டன் வரலாறு காணாத அளவிற்கு அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கும் போரிஸ், தன்னுடைய வெற்றி உரையில், பிரிட்டனில் ஐரோப்பா யூனியனிலிருந்து பிரிட்டன் விலகும், பிரெக்ஸிட் நிறைவேற்றப்படும், லேபர் கட்சியின் ஜெரிமி கோர்ப்பியனின் தோல்வி உறுதி செய்யப்படும், பிரிட்டன் புத்துணர்வு பெறும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்.

இந்நிலையில், பிரெக்ஸிட் ஒப்பந்தத்தில், பிரிட்டனுக்கு சாதகமான முடிவு எட்டப்படவில்லை என்றால், ஒப்பந்தமின்றியே பிரிட்டன் வெளியேறும் எனத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் போரிஸ். அப்படி ஒப்பந்தமின்றி வெளியேறும் பட்சத்தில், பொருளாதார ரீதியாக பிரிட்டன் பெரும் சரிவினை சந்திக்கும். எல்லைப் பாதுகாப்பு, குடியுரிமை, வர்த்தகம், போக்குவரத்து, உணவுக் கொள்முதல் என்று பல்வேறு விடயங்களில் இங்கிலாந்து சிக்கல்களைச் சந்திக்கும்.

தெரசா மே பிரெக்ஸிட் ஒப்பந்தத்தைப் பற்றிய அதிகப்படியான வாக்குறுதிகளை அளித்ததன் விளைவாகத்தான் பதவி விலக நேரிட்டது என்றால், போரிஸ் அதைவிடப் பத்து மடங்கு அதிகமான வாக்குறுதிகளை அளித்திருக்கிறார். யாரும் கணிக்க முடியாத அவரது அதிரடிகளை நம்பிக் காத்திருக்கிறது பிரிட்டன்.

என்ன செய்யப்போகிறாரோ?

# நீல நட்சத்திரங்கள்



வானில் மின்னும் நட்சத்திரங்களை எண்ண முடியுமா? என்று கேட்டால் முடியாது தான். ஆனால் 100 கோடிக்கு மேற்பட்ட நட்சத்திரங்கள் விண்வெளியில் இருப்பதாக விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். இவற்றின் சராசரி வயது 1500 கோடி வருடங்கள். பெரும்பாலான நட்சத்திரங்கள் பத்து இலட்சம் முதல் 1000 கோடி வருட ஆயுள் கொண்டவை.

நட்சத்திரங்களில் பெரும்பாலும் ஐதரசன் 75 வீதமும் ஹீலியம் 22 வீதமும் ஒட்சிசன், நயோன், காபன், நைதரசன் போன்றவை மீதமுள்ள சதவீதமாகவும் உள்ளன. வடிவத்தில் சூரியனை விட நூறு மடங்கு அதிக எடை கொண்ட நட்சத்திரங்களும் சூரியனை 20 பங்குகளாக பிரித்தால் அதில் ஒரு பங்கு அளவுக்குக் குறைந்த எடைகொண்ட நட்சத்திரங்களும் உள்ளன.

பூமிக்கு அருகில் அல்பா சென்டாரி என்ற நட்சத்திரம் தான் உள்ளது. இது பூமியில் இருந்து 4.3 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது. ஒரு ஒளி ஆண்டு என்பது ஒளி ஒருவருடம் பயணம் செய்யும் தூரத்தைக் குறிக்கிறது. ஒளி ஒரு விநாடிக்கு 3 இலட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கிறது.

ஒருவருடத்தில் சுமார் 9 இலட்சத்து 46 ஆயிரம் கோடி கிலோமீற்றர் ஒளி பயணம் செய்கிறது. இதே வேகத்தில் ஒரு வருடம் பயணம் செய்யும் தூரத்தைத்தான் ஒளி வருடம் என்கிறோம். வெகுதொலைவில் உள்ள நட்சத்திரம் தேனேப் என்பதாகும். இது பூமியில் இருந்து 1600 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளது. இருந்தாலும் கூட மில்கிவே என்று அழைக்கப்படுகின்ற பால்வெளியில் 100 கோடி ஒளி ஆண்டு தொலைவில் பல நட்சத்திரங்கள் உள்ளன. பிரகாசமான நட்சத்திரம் சிரியஸ். பெரிய நட்சத்திரங்கள் ஏறத்தாழ 160 கோடி கி.மீ. விட்டம் கொண்டதாக உள்ளன. சிறிய நட்சத்திரங்கள் சுமார் 20 கி.மீ. விட்டம் கொண்டது.

நட்சத்திரங்கள் வெள்ளை, நீலம், மஞ்சள் அல்லது சிவப்பு போன்ற நிறங்கள் கொண்டதாக உள்ளன. நட்சத்திரத்தின் மேல்பகுதியில் உள்ள வெப்ப அளவின் அடிப்படையில் நிறம் மாறும்.

நீல நட்சத்திரங்களின் மேல் பகுதியில் 28 ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும். இதுவே சிவப்பு நட்சத்திரம் என்றால் 2800 டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும். உள்பகுதியில் பொதுவாக 11 இலட்சம் டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும். அணுக்களின் வெடிப்பு மூலம் இந்தச் சக்தியை நட்சத்திரங்கள் பெறுகின்றன.

தொகுப்பு
வி.பிரணவன், கலட்டி

## டிப்ஸ்... டிப்ஸ்...

வெந்தயத்தை ஊறவைத்துச் சாப்பிடுவதால், வயிற்றுப் புண்கள் குறையும். ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை நீர்விட்டுக் கொதிக்கவைத்து, வடிகட்டி வாய் கொப்பளித்தால் தொண்டைக்கட்டுச் சரியாகும்.

கீரைச் சமையலில் வறுத்துப் பொடித்த எள் மற்றும் வேகவைத்த பூண்டு சேர்த்து சமைத்தால், கீரையின் முழுப் பலனையும் பெற முடியும். வேகவைத்த முட்டையில் மிளகுத்தூளும், எள்ளுப்பொடியும் சேர்த்துச் சுவைத்தால், உடலில் ஊட்டங்கள் கூடுதலாகும்.

குளிர்க்காய்ச்சல் இருக்கும்போது, மூன்று மிளகை வெங்காயத் துடன் சேர்த்துச் சாப்பிட்டால், சீக்கிரமாகக் காய்ச்சல் அடங்கும். சிறுநீர் எரிச்சல், சிறுநீர் அடைப்பு ஏற்படும்போது, வெங் காயத்தை ஒன்றிரண்டாக இடித்து குடிநீரிட்டுப் பருகலாம்.

250 கிராம் இஞ்சியை நறுக்கி, இரண்டு லீற்றர் நீர் சேர்த்து நன்றாக ஊறவைத்து, வெல்லம் சேர்த்து, சிறு தீயில் கொதிக்கவைத்து பாகுபதத்தில் இறக்கி வைக்கவும். இதைத் தினமும் அரை டீஸ்பூன் அளவு சாப்பிட்டுவந்தால் சுவையின்மை, பசியின்மை தீரும்.

# மகளை அளவுக்கதிகமாக நேசிக்கும் தகப்பனின் உணர்வுபூர்வமான எச்சரிக்கை



தன் மகளை சில விடயங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்வதால் அவள் அப்பாவிடம் கேட்டாள்... ஏம்பா என்னை இப்படி கண்டிப்புடன் நடத்துகிறீர்கள்? என்னை கொஞ்சம் சுதந்திரமாக விடலாமே என்று...

ஆனால் அதை அப்பா சற்று கஷ்டமாகவே உணர்ந்தார். இதை எப்படி இவளுக்கு சொல்லிக்கொடுப்பது என யோசித்தார்.

ஒரு நாள் மகள் தன் தகப்பனிடம் வந்து கேட்டாள். அப்பா நான் பட்டம் விட்டு விளையாடப் போகிறேன், நீங்களும் வாங்க.., என அழைத்துக்கொண்டு வீட்டின் மொட்டை மாடிக்கு சென்றாள்.

பட்டத்தை நூலில் கட்டி பறக்கவிட்டு மகிழ்ந்தாள். அப்படி மகிழ்ந்திருக்கும் வேளையில் அப்பா கேட்டார். பட்டம் மேலே பறக்க, பறக்க அழகாய் இருக்கிறது. ஆனால் அதன் விருப்பம் போல பறக்க முடியவில்லை.. அதற்கு தடையாய் இருப்பது என்னம்மா? எனக் கேட்டார்.

மகள் பட்டென பதில் சொன்னாள் இந்த நூல் தான் அப்பா. அதை தன் இஷ்டத்திற்கு விடாமல் கட்டி வைத்திருக்கிறது என்று சொன்னாள்.

அப்படியா எனக் கேட்டு விட்டு அந்த நூலை அப்படியே அறுத்து விட்டார். பட்டமும் தன் இஷ்டபடி பறந்தது. ஆனால்சற்று நேரத்திலேயே கிழிந்த காகிதமாய் கீழே விழுந்தது.

அப்பா சொன்னார் மகளே இந்தப் பட்டத்தை தன் இஷ்டபடி பறக்கவிடாமல் தடுக்கவில்லை... நேரான வழியில் இந்த பட்டம் பறந்து உயரங்களை அடைய இந்த நூல் உதவியாய் இருக்கிறது.

இதேபோலத்தான் மகளே உன் அப்பாவாகிய நானும் ஒரு நூல்தான்... நீதான் அந்த பட்டம்... நீ என்னுடைய பேச்சைக் கேட்டு அதன்படி நடப்பாயெனில் என் பாதுகாவலுடன் உயர பறக்கலாம்... உன் இஷ்டப்படி வாழ நினைத்தால் அந்தப் பட்டம் கிழிந்து காகிதமானது போல உன் வாழ்க்கையும் சீரழிந்துவிடும்.

இப்போது புரிந்திருப்பாய் ஏன் உன்னைக் கண்டித்தேன் என்பதனை. நூலாகிய என்னை அறுத்துவிடாதே என்று சொல்லும்போதே மகள் தன் அப்பாவை கட்டி அணைத்துக் கொண்டாள்.

ஆம் அன்பான பிள்ளைகளே... உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம்.. ஆனால் அவற்றின் முடிவு பயங்கரமானது.

எனவே பெற்றோருக்கு கீழ் படிந்து வாழ கற்றுக் கொள்ளுங்கள் உங்கள் இனிய வாழ்வு உங்களை வரவேற்கும்.

அப்பா அம்மாவின் அன்பும், கண்டிப்பும் இருந்தால் மகள், மகனின் வாழ்வு இனிமையாக அமையும்.

# பண்ணையார்

பண்ணையார் ஒருவர் தன் பண்ணையில் விளைந்த வாழை மரத்திலிருந்து சுமார் 100 பழங்கள் உள்ள பெரிய வாழைத் தாற்றை அறுத்தார்.

தன் வேலைக்காரனை அழைத்து, "இந்த வாழைத் தாற்றைக் கோயிலுக்கு கொண்டு போய் கொடுத்து விட்டுவா..." என்றார். வேலைக்காரனும் அவ்வாறே செய்தான்.

அன்றிரவு பண்ணையாரின் கனவில் தோன்றிய இறைவன், "நீ அனுப்பிய ஒரு வாழைப் பழம் கிடைத்தது...." என்றார்.

திடுக்கிட்ட பண்ணையார், "இறைவா நான் 100 பழங்களையல்லவா அனுப்பினேன்..." என்றார்.

இறைவன், "இல்லை ஒரு பழம்தான்எனக்கு வந்து சேர்ந்தது..." என்றார்.

விடிந்ததும் பண்ணையார் வேலைக்காரனை அழைத்து,

"நான்கொடுத்த வாழைப் பழங்களை முழுமையாகக் கோயிலில் கொண்டு சேர்த்தாயா..." என்றார். அவன் "ஆம்" என்றான்.

பண்ணையாருக்குக் கோபம் வந்து விட்டது. அவர் வேலைக்காரனை வேகமாக அறைந்தார்.

"உண்மையைச் சொல், இல்லையென்றால் அடித்தே கொன்று விடுவேன்..." என்றார்.

அவன், "உண்மையைச் சொல்லி விடுகிறேன், வழியில் ஒருவன் பசியாய் இருக்கிறது என்றான், நான் பரிதாப்பட்டு அவனுக்கு ஒரு பழத்தைக் கொடுத்தேன், மீதமுள்ள எல்லாப் பழத்தையும் கோவிலிலுக்குக் கொடுத்து விட்டேன்.." என்றான். பண்ணையாருக்குப் புரிந்து விட்டது.

ஏழைக்குக் கொடுத்த பழமே இறைவனைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. கோயிலுக்குக் கொடுத்த பழம் சேரவில்லை.

கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நீ ஏதாவது கொடுத்தால், அது ஏழைகளுக்குப் போய்ச் சேராது.

ஏழைகளுக்கு நீ ஏதாவது கொடுத்தால் அது இறைவனிடம் போய்ச் சேர்ந்து விடும்.

கோயிலில் போய்க்கொடுப்பதும், ஏழைகளுக்குக் கொடுப்பதும் ஒன்றா என்று சிலர் கேட்கலாம்.

ஏழைகளின் வயிறு அஞ்சல்பெட்டி, இறைவனுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை இதில் போட்டால் இறைவனுக்குப்போய்ச் சேர்ந்து விடும்......

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1794


### முகின்

இன்றைய தலைமுறைக்கு இந்த கஷ்டம் தெரியவாய்ப்பில்லை... கறுப்பு வெள்ளை டிவியில் இங்கிலாந்து ஏஙு நைஜீரியா போட்டி பார்க்கும் போது வரும் கஷ்டம் பிரைட்னஸை அதிகரித்தால் இங்கிலாந்து அணி தெரியாது, குறைத்தால் நைஜீரியா அணி தெரியாது. அன்ட்டனா ஆடினால் இரண்டு அணியும்தெரியாது



### யுகேந்திரன்

வீட்டை விட்டு வெளியே போகும்போது சகுனம் பார்க்கிறமோ இல்லையோ போன்ல சார்ஜ் போட்டுருக்கானு பார்க்கத் தவறுவதே இலலை



### கபிலன்

ஹோட்டல் ஓனர்: சேர் தினமும் பார்சல் வாங்கிட்டுப் போறீங்களே... அதுக்கு இங்கேயே சாப்பிட வேண்டியதுதானே?
Me: மன்னிக்கனும் என்னை டாக்டர் ஹோட்டல்ல சாப்பிடக்கூடாதுன்னு சொல்லியிருக்கிறாரு அதுதான்



### வின்சிகா

ஏழை மாணவனுக்கு பணக்கார வாத்தியார் பாடம் நடத்தினால் அது அரசு பள்ளி... பணக்கார மாணவனுக்கு ஏழை வாத்தியார் பாடம் நடத்தினால் அது தனியார் பள்ளி



### ராஜ்குமார்

குழந்தையை அம்மா நீண்டநேரம் திட்டிக் கொண்டிருந்தால் அது குழந்தையை அல்ல எனப் புரிந்துகொள்பவனே புத்திசாலி கணவன்



### சந்திரா

மீன்கூட கலரா பிறந்தா மீன்தொட்டியில... சாதாரணமா பிறந்தா கறிச்சட்டியில...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# இரத்தச் சோகை நிலையை தவிர்ப்பது எப்படி?

### இரத்தச் சோகை என்றால் என்ன?

இரத்தச் சோகை என்பது உடலில் ஈமோக்குளோபின் அல்லது இரத்தச்சிவப்பு அணுக்கள் குறைவுபடுவதே. ஈமோக்குளோபின் என்பது திசுக்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும் இரத்தச் சிவப்பு அணுக்களிலுள்ள (RBC) இரும்புச் சத்து நிறைந்த புரதமாகும். ஒருவ ரின் இரத்தத்தில் ஈமோக்குளோபி னின் அளவு மிகக் குறைவுபடும் போது இரத்தச்சோகை ஏற்படுகிறது. அதாவது உடலில் போதியளவு ஒட்சிசன் வழங்கப்படாதிருக்கும் நிலையாகும். இது உடல் வெளிறுதல், களைப்பு அல்லது சோர்வு மற்றும் உடற் பலவீனத்தை ஏற்படுத்தலாம்.

இரத்தச்சோகை ஒரு குறுகிய காலத்துக்கு அல்லது ஒரு நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம். தீவிரம் குறைந்த நிலைமைகளில் உணவு முறையில் ஒரு எளிமையான மாற்றம் தான் சிகிச்சையாக அளிக்கப்படுகிறது. தீவிரம் கூடிய நிலைகளுக்கு மருத்துவச் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.

### இரத்தச் சோகைக்கான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

இரத்தச்சோகைக்கான அறிகுறிகள் அதன் கடுமை, ஈமோக்குளோபின் எவ்வளவு விரைவாகக் குறைகிறது மற்றும் அதற்கான காரணம் என்ன என்பவற்றைப் பொறுத்திருக்கிறது. ஒரு பிள்ளையின் உடல் எவ்வளவு நன்றாக ஈமோக்குளோபினின் தாழ்ந்த நிலையைச் சமாளிக்கின்றது என்பதிலும் தங்கியுள்ளது. அறிகுறிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

- இரத்தத்தின் சிவப்பு நிறத்துக்கு ஈமோக்குளோபின் தான் காரணமாக இருப்பதால் தோல் வெளிறுதல்.
- உடலில் ஒட்சிசனின் அளவு குறைக்கப்பட்டதால் உடலில் சக்தி குறைவுபடுத்தல்.
- உடலின் ஒட்சிசனின் அளவு குறைந்ததால் உடற்பயிற்சி செய்த பின் அல்லது விளையாடிய பின் விரைவான சுவாசம்.

### இரத்தச் சோகைக்கான காரணங்கள் மற்றும் அதன் வகைகள்

இரத்தச் சோகையில் பலவகைகள் இருக்கின்றன. பொதுவான காரணங்களின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### ஊட்டச்சத்து இரத்தச் சோகைகள்

இரத்தச்சோகை வகைகள் மிகவும் பொதுவானது இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகையாகும். இது உணவில் இரும்புச்சத்துக் குறைவதால் ஏற்படுகிறது. ஈமோக்குளோபின் தயாரிப்பதற்கு இரும்புச்சத்து தேவை. சாதாரணமாகக் குழந்தைகளுக்கு 6 மாதங்கள் வரைக்கும் தாய்ப்பாலிலுள்ள இரும்புச் சத்து அவர்களுக்குப் போதுமானது. இரும்புச்சத்து உள்ளடக்கப்படாத பசுப்பால் போர் முலாக்கள் அல்லது முழுப்பசுப்பால் மாத்திரம் குடிக்கும் குழந்தைகளுக்கு இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும் ஆபத்து இருக் கிறது. உங்கள் குழந்தை 6 மாத முடிவில் திட உணவு உண்ணத் தொடங்காவிட்டால் இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். முழுமையாக முதிர்ச்சியடைந்த குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆரோக்கிய முள்ள தாய்மார்கள், இரும்புச்சத்து நிறைந்த திட உணவுகள் பரிந்துரை செய்யப்படும் வரையில் 6 மாதங்களுக்குத் தங்கள் குழந்தை களுக்குத் தேவையான இரும்புச் சத்தைக் கொண்டிருப்பார்கள். தாய்ப்பாலிலுள்ள இரும்புச்சத்து நன்கு உறிஞ்சப்படும். 6 மாதங்களில் திட உணவுகள் அறிமுகப்பட்டதிலிருந்து 2 வயதுவரை தாய்ப்பால் கொடுக்கும்படி சிபாரிசு செய்யப்படுகிறது.

இது தாய்ப்பால் ஊட்டுதல் மாத்திரமல்ல. ஆனால் சிபாரிசு செய்யப்படும் சமயத்தில் இரும்புச்சத்து நிறைந்த திட உணவுகள் அறிமுகப்படுத்தப்படாவிட்டால் இரத்தச் சோகை ஏற்படும் ஆபத்து இருக்கிறது.

எமது சமூகத்தில் முறையான தனிநபர் சுகாதாரத்தைப் பின்பற்றாதவர்களுக்குக் கொழுக்கிப்புழுத் தொற்று ஏற்படுவதாலும் இரத்தச் சோகை ஏற்படலாம். உணவில் போலிக் அமிலம் விற்றமின் B12 அல்லது விற்றமின் E குறைவுபடும் போது விற்றமின் குறைவினால் ஏற்படும் இரத்தச்சோகை உண்டாகிறது. ஈமோக்குளோபின் தயாரிப்பதற்கு உடலுக்கு இந்த எல்லா ஊட்டச்சத்துக்களும் தேவைப்படுகின்றன.

#### நோயினால் ஏற்படும் இரத்தச் சோகைகள்

1.அரிவாள் கல இரத்தச் சோகையும் தலை சீமியாவும் சிவப்பு அணுக்களை உருக்குலையச் செய்யும் பரம்பரை வியாதிகளாகும். இந்த உயிரணுக்கள் சாதாரண இரத்தச் சிவப்பு அணுக் களைப் போல உடல் முழுவதும் நன்கு நீந்திச் செல்ல முடியாது. இதனால் உடலுக்குக் குறைந்தளவு ஒட்சிசனே கிடைக்கின்றது.

2.சிறுநீரகம் செயற்படாமற் போதல், புற்றுநோய் மற்றும் க்ரோன்ஸ் நோய் என்பவற்றாலும் தீராத இரத்தச்சோகை ஏற்படலாம். என்புமச்சைநோய் மற்றும் லூபஸ் நோய் போன்ற தன்னுடல் தாக்கும் நோயினாலும் இரத்தச்சோகை ஏற்படலாம்.

3.அப்ளாஸ்டிக் இரத்தச் சோகை என்பது ஒரு அரிதான மற்றும் கடுமையான நோய். இது உடல் போதிய அளவு இரத்த உயிரணுக்களை உற்பத்தி செய்வதை நிறுத்திவிடும். ஒருபிள்ளை இந்த இரத்தச் சோகை நோயுடன் பிறந்திருக் கலாம் அல்லது ஒரு வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட பின்னர் ஏற்படலாம். அல்லது ஒரு மருந்தின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். சிலவேளைகளில் இது இரத்தப் புற்றுநோயின் தொடக்க அறிகுறியாகும்.

### இரத்தச் சோகைக்கான ஆபத்தான காரணிகள்

இரத்தச் சோகையை விருத்தி செய்வதற்கான உயர்ந்த ஆபத்திலிருக்கும் சில பிள்ளைகளின் பிரிவுகள் இருக்கின்றன. உயர்ந்த ஆபத்துக்குக் காரணமாகக் கூடிய காரணிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

- ➤குறைமாதப் பிரசவம் மற்றும் பிறப்பின் போது எடை குறைவாக இருத்தல்.
- ➤முன்னேற்றமடைந்து வரும் உலகிலிருந்து சமீபத்தில் குடியேற்றம் செய்தல்.
- ➤வறுமை
- ➤உடற்பருமன் அல்லது தவறான உணவுப் பழக்கங்கள்.

### இரத்தச்சோகையின் நீண்ட காலப் பாதிப்புக்கள்

பிள்ளைகளிலுள்ள சிகிச்சை செய்யப்படாத இரத்தச்சோகை அவர்களின் வளர்ச்சியில் ஒரு கடுமையான பாதிப்பைக் கொண்டு வரலாம். இரத்தச்சோகை மூளை விருத்தியடைவது மற்றும் செயற்படுவதைப் பாதிக்கலாம். பெரும்பாலும் இது கூர்ந்து கவனிப்பதில் பிரச்சினைகள், வாசிக்கும் திறனில் தாமதம் மற்றும் மோசமான பள்ளிக்கூடச் செயற்றிறன்கள் என்பவற்றை விளைவிக்கும்.

### இரத்தச் சோகையைக் குறித்து உங்கள் பிள்ளையின் மருத்துவர் என்ன செய்யலாம்?

உங்கள் பிள்ளையின் இரத்தத்திலுள்ள ஈமோகுளோபின் அளவைத் தெரிவிக்கும் ஓர் எளிமையான இரத்தப் பரிசோதனையை உங்கள் மருத்துவர் செய்வார். இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை, அளவு மற்றும் வடிவம் என்பன இரத்தச் சோகையின் வகையைக் காண்பிக்கும். ஒரு சில இரத்தத் துளிகளினால் ஈமோக்குளோபினின் அளவை விரைவாக அளந்து விடலாம்.

உங்கள் பிள்ளையின் மருத்துவர் ஓர் உடற் பரிசோதனையையும் செய்வார். உங்கள் பிள்ளையின் சக்தியின் அளவுகள், பொதுவான உடல்நலம், உணவுகள் மற்றும் குடும்ப வரலாறு என்பவற்றைப் பற்றியும் கேட்பார்.

### இரத்தச் சோகைக்கான சிகிச்சைகள்

சிகிச்சை உங்கள் பிள்ளையின் இரத்தச்சோகை எவ்வளவு கடுமையானது மற்றும் அதற்குக் காரணம் என்ன என்பவற்றைச் சார்ந்திருக்கிறது. பொதுவான சிகிச்சைகள் பின்வருவனவற்றை உட்படுத்தும்.

*இரும்புச்சத்து கொடுக்கக் கூடிய மருந்துகள்.

*குழந்தைகளின் இரும்புச் சத்து நிறைந்த போர்மூலா.

*பாலைக் குறைத்து இரும்புச் சத்தைக் கூட்டுதல் போன்ற உணவு முறையில் மாற்றங்கள். இறைச்சி மற்றும் பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள் போன்றவை இரும்புச் சத்து நிறைந்த உணவுகளுக்குள் உட்படுகின்றன. இறைச்சி சாப்பிடாத பிள்ளைகள் பச்சைக் காய்கறிகள், கீரை வகைகளை அதிகமாக உண்ண வேண்டும். போலிக் அசிட் மற்றும் விற்றமின் B12 மருந்துகள்.

குடற்புழுத் தொற்று ஏற்படுமாயின் அதற்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் பாதணிகள் அணிவது, உணவு சமைக்க, அருந்த முன்னரும் மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்றாகச் சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும். கடுமையான நோயொன்றி னால் உண்டாகும் இரத்தச் சோகை களுக்கு விசேடமான சிகிச்சை முறைகள் வைத்தியசாலையில் வழங்கப்படும்.

### மருத்துவ உதவியை எப்போது நாடவேண்டும்?

பின்வரும் நிலைமைகளில் உங்கள் பிள்ளையின் வழக்கமான மருத்துவரை அழைக்கவும்.

உங்கள் பிள்ளை வெளிறிக் களைப்படைந்து மற்றும் விரைவாகச் சுவாசிக்கின்றான் என்றால், உங்கள் பிள்ளைக்கு இரத்தச் சோகை இருக்கலாம் என நீங்கள் சந்தேகிக்கிறீர்கள்.

### முக்கிய குறிப்புகள்

❖ மிகவும் பொதுவாக இரத்தத்தில் போதியளவு இரும்புச்சத்து இல்லாதிருப்பதால் இரத்தச்சோகை ஏற்படுகிறது.

❖ உங்கள் பிள்ளை அடிக்கடி களைப்படைந்து பலவீனமாக மற்றும் வெளிறி இருந்தால் இரத்தச் சோகைக்கான உங்கள் மருத்துவரைச் சந்திக்கவும்.

❖ உங்கள் குழந்தைகளுக்கு 6 மாதம் முடிவடைந்த பின்னர் இரும்புச்சத்து நிறைந்த திட உணவுகள் வழங்க வேண்டும்.

❖ இறைச்சி மற்றும் பச்சைக் காய்கறிகள் உட்பட இரும்புச்சத்து நிறைந்த உணவுகளைப் பிள்ளைக்குக் கொடுக்கவும்.

❖ தனிநபர் சுகாதார முறைகளைச் சரிவரப் பின்பற்றவும்.

### இரும்புச்சத்தின் அவசியம்

இரும்பு என்றால் வலிமை. பூமியில் அபரிமிதமாகக் கிடைக்கும் தாதுப்பொருள்களில் முக்கியமானது. பல்வேறு சாதனங்கள் செய்யப் பயன்படும். இரும்பில்லாமல் இயந்திரங்கள் இல்லை. உடலுக்குத் தேவையான தாதுப் பொருள்களில் இரும்பும் ஒன்று. நமது இரத்தத்தில் ஈமோகுளோபின் என்ற பொருள் இரும்பாலானது. இரும்புச்சத்து இல்லாவிட்டால் கலங்களால் ஒட்சிசனைப் பெற்றுக்கொள்ள முடியாது. இரும்புச் சத்தின் தினசரித் தேவை 1-3 mg. ஆனால் உடலால் இரும்புச் சத்தை அகத்துறிஞ்சும் திறன் ஓரளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தானியங்கள் மிகுந்த உணவுகளில் இருந்து 2-5 வீதமான இரும்புச் சத்தைத்தான் உடல் அகத்துறிஞ்ச இயலும். குறைந்த அளவு தானியங்கள், அதிகளவு இறைச்சி மற்றும் மீன் செறிந்த உணவுகளிலிருந்து உடல் 10-20 வீதமான இரும்புச்சத்தை அகத்துறிஞ்சிக் கொள்ளும். இதனால் உணவில் தினசரி தேவையை விட 10-25 மடங்கு அதிகமாயிருக்க வேண்டும்.

### இரும்புச்சத்துள்ள உணவுகள்

இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை இரு வகையாகப் பிரிக்கலாம்

1.மாமிச உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச்சத்து.

2.அசைவ உணவுகளிலிருந்து கிடைக்கும் இரும்புச்சத்து.

அசைவ உணவு இரும்புச்சத்து சராசரி உணவில் 85 வீதம் கிடைக்கின்றது. ஆனால் இந்த 85 வீதத்தில் 20 வீதம்தான் உடலால் அகத்துறிஞ்ச முடியும். இந்த அகத்துறிஞ்சலை அதிகரிக்க உணவுடன் விற்றமின் C மற்றும் அசைவ உணவுப் புரதம் சேர்த்துக்கொள்ள வேண்டும். அசைவ உணவு இரும்புச்சத்து, சைவ உணவு இரும்புச்சத்தை விட நன்றாக உடலால் அகத்துறிஞ்சப்படுகிறது.

#### இரும்புச் சத்து நிறைந்த அசைவ உணவுகள்

முட்டை, இறைச்சி, ஈரல்.

#### இரும்புச் சத்து நிறைந்த சைவ உணவுகள்

வெந்தயக்கீரை, முல்லை, முசுட்டை, பொன்னாங்காணி, வல்லாரை, முருங்கை, அகத்தி, முளைக்கீரை, தவசி முருங்கை, சண்டி, கறிவேப்பிலை, பசளி, தூதுவளை, பருப்பு வகைகள், சோயாபீன்ஸ், பேரீச்சம்பழம், இதர உலர்ந்த பழங்கள் முதலியன.

தினமும் 50g கீரையைச் சேர்த்துக் கொண்டால் நமது தினசரி இரும்புத் தேவை பூர்த்தியாகும். அத்துடன் விற்றமின் C,B கரோட்டின், கல்சியமும் கிடைக்கும்.

### இரும்புச்சத்துக் குறைந்தால்

இரும்புச்சத்துக் குறைவுதான் உடலிலேயே பரவலாக காணப்படும் தாதுப்பொருள் குறைபாடு. இரும்புச்சத்துக் குறைந்தால் இரத்தச் சோகை ஏற்படும். பெண்களுக்கு இரத்த இழப்பு பல காலகட்டங்களில் ஏற்படும். கட்டிளமைப் பருவ நிலையிலுள்ள இளம் பெண்களுக்கு மாதாந்த உதிரப்போக்கு ஏற்படும்போது இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படும். கர்ப்பிணிகளுக்கும் குறைபாடு ஏற்படும். ஏனெனில் கருவிலுள்ள சிசுவுக்கு அதிகளவில் இரும்புச்சத்துத் தேவை.

ஆண்களுக்குச் சில நோய்களாலும் மூலம் போன்ற இரத்த இழப்பு நோய்களாலும் இரத்தச் சோகை ஏற்படலாம். மொத்தத்தில் இருபாலாருக்கும் உணவுக் குறைபாடுகள், இரத்த இழப்பு என்பவற்றால் இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படும். இரத்தச் சோகை வேறு சில காரணங்களால் ஏற்பட்டாலும் இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் சோகைதான் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

Dr.ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்